www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்
காப்புறுதி வசதிகள்
வாடகை உரித்து
கழிவு பற்றுச் சீட்டு (பில்):
ஃபினான்ஸ் வர்த்தகம்
செயற்பாட்டு வரி
வீடு, சொத்து கடன்

வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்
தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000
நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555
காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235
கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை
செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்

10814


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அமுது

# அமுதக் கடலில்...



08 பட்டினிக்கு நஞ்சைக் குழைப்பதா?



12 போராடி ஓய்ந்தேன்...



22 பயத்தின் குருதி...



36 குற்றமும் விலங்கும்



42 நெருப்பில் எரிந்த நீர்


அமுத வாசல் .......................... 2
மொறு மொறு சிப்ஸ் .................. 4
துக்கத்தில் தூக்கணாங் குருவி........5
நெற்றிக்கண் ..............................6
வாசலைத் தாண்டிய கடிதம் ............ 7
பேட்டி: விமல் வீரவங்ச
நஞ்சு தீர்வாகுமா? ........................8
போராடி ஓய்ந்த போராளி...............12
மே தினம் ..................................17
சிறுகதை: இன்னுமொரு. ............18
அஃறிணை ..........................19
சரோஜா என்றொரு ரோஜா..............20
பயத்தால் சிந்தும் குருதி ...............22
கவிதை: நீங்கள் தூவிய மலர்கள். . . .25
சிறுகதை: நாளை விடியும். ...........26
இன்னோர் உயிரைக் காத்து ....... 29
சிறுகதை:
மனிதனல்லாத காரணத்தால் ..... 32
குற்றவாளிகளும் தண்டனையும் .... 36
விரும்பத்தகாத விருது .......... 39
குங்ஃபூ:
பயிற்சி எம்மை மனிதனாக்கும் ......40
சினிமா:
நெருப்பில் எரிந்த நீர் .......... 42
இந்தியாவை உலுக்கிய இளைஞன் . . 46
நோயற்ற:
ஆண்மைக் குறைபாடு - 2 ........ 47
நூல் அறிமுகம் .............. 48



உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.
ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

E-Mail: webmgr@sri.lanka.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துணிச்சலான வாசிப்பினை வளர்த்தெடுப்பதில் அமுதின் பங்கு அசைக்க முடியாதது!



"அமுது" மாதத்தில் இரண்டாக வெளிவருமா என ஏங்க வைக்கிறது. காரணம் புதுப்புது விடயங்களை அறிவதற்கு எம்மை ஒரு மாதம் காக்க வைக்கின்றது. அமுதில் போட்டிகள், கேள்வி - பதில் போன்றவற்றையும் இணைத்தால் மேலும் சிறப்புறும். எமது ஆசை விரைவில் நிறைவேறுமா?
**ஏ. சீ. எம். முஸம்மில்**
**வட்டதெனிய, கம்பளை.**

"அமுது" என்பதன் பொருளுக்கான உண்மைச் சவாலை மாதா மாதம் பருகும் ரசிகன் நான். அமுதில் கலந்துள்ள பல சுவைகளும் என் நாவுக்குத் தித்திப்பையும், என் எதிர்கால உறுதிக்கு ஒரு வடிகாலாயும் உள்ளது.
**எச். நிஹால்,**
**நுரைச்சோலை, புத்தளம்.**

மாற்றுக் கருத்துடன் வெளிவரும் ஒரு சில பத்திரிகைகளில் அமுதுவும் ஒன்று என்பதையிட்டு அமுது பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அவ்வாறான ஒரு பத்திரிகை வேறுபட்ட மனக் குமுறல்களுடன் வாழும் இம்மண்ணின் மைந்தர்களின் மன உணர்வுகளிற்கு மதிப்பளிக்கும் என்று நம்புகிறேன்.
**மண்ணின் மைந்தன்**
**(துரோகி!)**

அமுதின் வித்தியாசமான அம்சங்கள் அனைத்தும் சுவையாகத்தான் அமைந்துள்ளது. துளி -7ல், 'கந்தன் கருணை'யில் நடந்த சகோதரப் படுகொலைகள் எம் நெஞ்சத்தைப் பாதித்துள்ளது. ஜக்கிசானின் புகைப்படத்தைப் பிரசுரித்தீர்கள். புரூஸ்லீயை விட இந்த ஜக்கிசான் ஒரு படி உயர்ந்தவர் என்பது உண்மைதான். அவர் ஒரு கொடை வள்ளல் என்றும் அறிந்துள்ளோம். அவரின் புகைப்படங்கள், விபரங்களைத் தந்தால் அதுபோல் நல்ல விடயம் வேறில்லை.
**ச. மாணிக்கம்**
**கச்சாய் - சாவகச்சேரி.**

துணிச்சலான வாசிப்பினை வளர்த்தெடுப்பதில் அமுதின் பங்கு அசைக்க முடியாதது. ஏப்ரல் இதழில் இடம்பெற்ற ஆசிரியரின் கருத்து முதல் ஏனைய அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை... குறிப்பாக 'பிணங்களுடன் கிடந்து மீண்டேன்' என்ற கட்டுரை எம்மைக் கலங்க வைத்துவிட்டது. இன்னும் இவ்வாறான புதிய தகவல்களுடன் "அமுது" வெற்றிநடை போட உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்...!
**புதுமணத் தம்பதிகள்**
**சியாஜ் - சியானா, கற்பிட்டி.**

பொதிகை மலையிலிருந்து அகத்தியனால் கட்டிக் காக்கப்பட்ட பெருமைக்குரியது தமிழ் மொழி. அத்தகைய மொழியின் வளர்ச்சிக்கு அமுது செய்யும் பணி மகத்தானது. உன் நடுநிலைமைப் பண்பு, உண்மைகளை உணர வைக்கும் உறுதி ஆகியவை தமிழ்பேசும் உலகில் உன்னை உயர்வு பெறச் செய்கின்றன.
நல்லதோர் வீணை செய்தே... சுவையிலும் சுவை. சஞ்சிகையின் வடிவமைப்பு, எழுத்தமைப்பு, பிரதம ஆசிரியர், ஆசிரியர் குழுவின் திறன் போன்றவை 'இந்தியா டுடே'யை விட மிஞ்சியுள்ளது.
**தமிழன்புடன்**
**வர்ண. இளஞ்செழியன்.**

குறுகிய காலத்துள் சிறந்த முறையில் தன் பணியினை சமூகத்திற்கு தந்து, பரந்தளவு பாராட்டினை குவித்துக் கொண்டிருக்கும் குடும்ப சஞ்சிகையான 'அமுது'திற்கு எனது தமிழ் வாழ்த்துக்கள்.
ஏப்ரல் இதழில் நக்கீரனின் 'இனவாதம் தீவிரவாதம் + இடதுசாரி தீவிரவாதம் = குழிபறிப்பு' என்ற கட்டுரை, மற்றும் 'நல்லதோர் வீணை செய்தே...' பகுதியில் ஆசிரியரின் "கருத்துப் பரிமாற்றல்" விளக்கம் ஆகியன அமுதின் பிள்ளைகள் எமக்குச் சுவை தந்து, மனதினை நெகிழச் செய்துகொண்டிருக்கிறது.
**மாரிமுத்து சிவகுமார்**
**ஹட்டன்.**



நம் நாட்டில் இன்று கொழுந்து விட்டெரியும் இனவாதத் தீ காட்டுத்தீ போல பரவக் காரணம் இனவாதச் சக்திகள். JVP, SVV அமைப்புகளின் செயல்களில் பல அரசியல்வாதிகள் பின்னின்றும், சுமார் 50 அமைப்புகள் தோன்றி சமாதான பேச்சுவார்த்தைக்கு குழிபறிப்பு செய்து வருவதினையும் காண்கிறோம். அவற்றினை நெற்றிக்கண் மூலம் நக்கீரன் சிறப்பாகத் தந்திருந்தார்.

ஹஜ் பயணத்தின் புனிதத்தினையும் இஸ்லாமின் நல் வழிகளையும் காட்டியதோடு, ஹஜ் போர்வையில் சில தீய சக்திகள் கடத்தல் செய்வதினையும் பயணச் செலவினை ஈடுகட்ட திருமணத்தின் மூலம் இன்னும் பல இலட்சத்தினைப் புரட்டத் திட்டமிடுபவர்களையும் தன் பேனா முனையால் அம்பலப்படுத்திய திக்குவல்லை கமால் அவர்களுக்கு பாராட்டுக்கள்.
**மகேஸ்வரி ராமதாஸ்**
**வத்தேகம.**

தங்கள் சஞ்சிகையில் யுத்தத்தைப் பற்றியும் புலிகளைப் பற்றியும் வந்த விமர்சனங்களை வாசித்தேன்.

இன்று இவ் யுத்தத்தின் அடிப்படைக் காரணங்கள் இரண்டு ஆகும். அவை:
1. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள ஆக்கிரமிப்பு (கிழக்கு)
2. பல்கலைக்கழகத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற வெட்டுப் புள்ளி. இவை இரண்டும் இன்றும் நிறுத்தப்படாமல் தொடர்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால் பல ஆண்டுகளாக யுத்தம் நடைபெறும் யாழில் இலங்கையில் உள்ள எல்லா மாவட்டங்களையும் விட (நவீன வசதிகள் கொண்ட கொழும்பு, கண்டி உட்பட) பல்கலைக்கழக அனுமதியில் உயர்வான புள்ளியை (எல்லா இடங்களையும் விட) நிர்ணயித்து பல மாணவர்களை விரக்தி நிலைக்கு அரசாங்கம் தொடர்ந்து தள்ளி வருகின்றது.

நான் வர்த்தகப் பிரிவில் A,3B எடுத்து ஒரு புள்ளியால் கல்வியைத் தொடரவும் முடியாமல், உரிய வேலைவாய்ப்பும் இல்லாமல் தவிக்கின்றேன். வறுமையின் மத்தியிலும் அகோர செல் வீச்சிலும், விமானக் குண்டு வீச்சின் மத்தியிலும் படித்த எங்களை புறந்தள்ளிவிட்டு கொழும்பு மாவட்டத்தில் கல்வி கற்கும் (சிங்கள) மாணவர்கள் எங்களை விட குறைந்த புள்ளி எடுத்தவர்கள் எல்லாம் பல்கலை செல்கின்றனர். எங்களைப் போன்றவர்களுக்கு எந்த விதமான உதவியோ, சலுகைகளோ அளிக்கப்படுவதில்லை. எழுதுநர் சேவை, பாலர் பாடசாலை ஆசிரியர் தெரிவு எல்லாவற்றிலும் எமக்கு ஏமாற்றம்தான் வந்து சேருகின்றன. சில நாட்களின் முன் யாழ் நகரில் செய்யப்பட்ட மறியல் போராட்டம் உங்களுக்கு நினைவுக்கு வரும்.
என்னைப் போன்ற கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு கிடைக்க வேண்டிய உயர்கல்வி பேரினவாதிகளுக்கு கிடைக்கின்றது. இது இன்று நேற்று அல்ல தொடர்ந்து நடைபெறுகின்றது. போராட்டத்தின் ஆரம்பம் இதுவே.
ஆகவே நாங்கள் போராடுவதில் என்ன பிழை உள்ளது? எங்களுக்குப் பின்னால் வருபவர்களாவது பயனடையட்டும். இப்போரைச் சற்றுத் தணிக்கவாவது இனிவரும் காலங்களில் கூடுதலானோரை உயர்வி அனுப்புவதற்கு குரல் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். (பணம் உள்ளவர்கள் வெளிநாடுகளுக்கும், கல்வி, சுய தொழில்களையும் மேற்கொள்கின்றார்கள். எம்மைப் போன்றவர்கள் போராடி மடிந்தார்கள், மடிகிறார்கள், மடியப் போகிறார்கள்.)

**பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவன்.**

நான் அமுதின் ஆரம்பநாள் வாசகன். ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதியில் இருந்து அமுதை எதிர்பார்க்கும் வாசகர்களில் நான் முதல் தரமானவன் என நினைக்கிறேன். ஒரு இந்திய சஞ்சிகையை விட உருவத்திலும் உள்ளடக்கத்திலும் நிறைய விடயங்களோடு வரும் அமுது பார்த்து பாதுகாக்க வேண்டியதோர் இதழ்.
**அம்தரவல்ல நிலாவாசன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

எதிர்பாருங்கள்!

அருது

திருத்திய
வடிவில்
புதிய
பொலிவுடன்
விரைவில்
உங்கள்
கரங்களில்...

பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்

விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அபய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
ந. சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன

அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

# நல்லதோர் வீணை செய்தே....



வீரம்!
நாம் மெச்சுகின்ற ஒரு குணாம்சம்.
வெற்றியைக் குறிக்கோளாகக் கொண்டே வீரத்தை நாம் மெச்சுகிறோம்.
வலிமையே வீரத்தின் அடிப்படை என்பதே எம் பொதுவான புரிதல்.
இதனாலேயே நாம் வலிமைமிக்க விலங்குகளை வீரத்தின் சின்னங்களாகப் பெயர்சூட்டிக் கொள்கிறோம்.
ஆனால் அந்த வலிமையோடு பின்னிப் பிணைந்துள்ள கொடுமையை இவ் வீரத்தின் குறியீட்டில் உணர்வதில்லை.
கொடுமைகளுக்கு எதிரான செயற்பாடே வீரமாக இருக்க முடியுமேயன்றி கொடுமையே வீரமாக இருக்க முடியாது.
வீரம் பற்றிய எமது புரிதலைத் தாண்டி, உண்மையான வீரம் வேறு அம்சங்களில் உள்ளது. தனது உயிரைச் துச்சமாக மதித்து ஆபத்திலுள்ள ஒருவரைக் காப்பாற்ற முன்வருபவரிடம் வீரமுண்டு. தன்னைப் பற்றிக் கவலை கொள்ளாமல், நோயாளி ஒருவருக்குத் தன் சிறுநீரகத்தை உவந்தளிக்க முன்வரும் மனிதாபிமானியிடம் வீரம் உள்ளது. கல்லெறிந்து கொல்லப்பட்டாலும் உலகம் உருண்டையெனத் தான் கண்டறிந்த உண்மையை மாற்றிச் சொல்ல மறுத்துவிட்ட விஞ்ஞானியின் உறுதியில் வீரம் உள்ளது.
தப்பிச் செல்லும்படி மன்னனே சேதியனுப்பியபோதும் தனக்களிக்கப்பட்ட தீர்ப்பை ஏற்கத் துணிந்து, நஞ்சூட்டிக் கொல்லப்படச் சம்மதித்த தத்துவ மேதை சோக்ரட்டீஸின் நிலைப்பாட்டில் வீரம் உள்ளது. மற்றவனது எதிர்ப்பை அடக்குவதைவிட தன்னைத் தானே கட்டுப்படுத்துவதற்குத்தான் வீரம் அதிகம் தேவைப்படுகிறது. வெற்றிக்கு அல்ல, விட்டுக் கொடுப்பதற்குத்தான் அதிக வீரம் தேவைப்படுகிறது. போதை வஸ்து உண்டவன் போடும் ஆர்ப்பாட்டச் செயல்கள் வீரமல்ல. அவனோடு போய் மோதுவதும் வீரமல்ல. இங்கு விலகிச் செல்வதும் வீரம்தான்.
பலத்தை மட்டும் கொண்டு வீரத்தை மதிப்பிடுவதானால் ஹிட்லரின் படுகொலைகளும் வீரமாகிவிடும்.
அன்னியரின் ஆக்கிரமிப்புகளெல்லாம் வீரமாகிவிடும்.
துணிச்சலை மட்டும் நாம் வீரமாகக் கொண்டால் தற்கொலைகள் யாவும் வீரமாகிவிடும்.
வீரம் என்ற கவர்ச்சியான சொல், நியாயங்களை இலகுவில் மழுங்கடித்துவிடும் மயக்கத்தைத் தரக்கூடியது. வீரமென்பது எமது பெருமையைப் பறைசாற்றும் பொன்முடியல்ல. அது எமது மனசாட்சியின் சேவகன்.

- ஆர்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




2000ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் அழகுராணி இவர். பெயர் **லாரா டுட்டா**. உலக அழகுராணிப் போட்டிக்காக நிக்கோசியா சென்றிருக்கிறார். மே 13ம் திகதி போட்டி நிகழவுள்ளது. இம்முறையும் இந்தியாவுக்குப் பெருமை(?) தேடிக் கொடுக்க முயற்சிக்கிறார். முடிகிறதா பார்க்கலாம்.



குண்டான பெண்களின் ராணியைத் தேர்ந்தெடுக்க ஒரு போட்டி நடைபெறுகிறது தாய்லாந்தில். அக் குண்டு ராணிக்கு "ஜம்போ ராணி" என்று பட்டம் சூட்டு கிறார்கள். யானைகளைக் காப்பாற்றும் நிதிதிரட்டலுக்காக இந்தப் போட்டி நடைபெற்று வருகிறதாம். கடந்த மே 1ம் திகதி நிகழ்ந்த இவ்வருடத்துக்கான போட்டியில் வென்று ராணியாக முடிசூடி, இதற்காக பணப் பரிசான 558டொலர் களையும் பெற்றுக் கெண்டவர் **சுபாவதி சான்பென்** என்ற 28 வயதுப் பெண். இவரது நிறை 94 கிலோ. (இத் தருணத்தில் உங்கள் நிறையையும் சற்று ஞாபகப் படுத்திப் பார்த்துக் கொள்ளுங்கள்.) அருகே நிற்பவர்கள் 2ம் 3ம் இடங்களை வென்ற குண்டுப் பெண்கள். (தயவு செய்து குண்டுதாரிகள் என்ற அர்த்தம் கொண்டுவிடாதீர்கள் - இந்தக் காலத்தில் ஒரு வார்த்தை இன்னோர் விபரித அர்த்தத்தைக் கொடுத்துவிடும் என்பதற்காக இந்த எச்சரிக்கை)

# மொறு மொறு சிப்ஸ்

அரணை கடித்தால் மரணம் என்று கிராமத்தவர் சொல்வதுண்டு. இங்கே இந்த தாய்லாந்து வாசி அரணைகளை அப்படியே வாயிலிட்டுக் கடித்துத் தின்றுவிடுகிறார். சொம்சாக் இன்டா என்ற இம் 36வயது இளைஞர் தனது 16 வயதிலிலிருந்தே அரணைகளைத் தின்று வருகிறாராம். மருத்துவத்தால் தீர்க்க முடியாத வியாதிகளை இது தீர்க்கிறது என்று கூறும் இவர் தனது பாலியல் வீரியத்துக்கும் இது உதவுவதாக நம்புகிறார். (இதை மற்றவர்களும் நம்பினால்.... பாவம் அரணைகள்!)





1999 கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்த பெருமைக்குரிய, உலகிலேயே இன்று வாழும் பூனைகளில் அதி குண்டுப்பூனை இதுதான். **கட்டோ** என்ற பெயர்கொண்ட இப்பூனை நோர்வே நாட்டைச் சேர்ந்தது. இதன் நிறை 16.7 கிலோகிராம். கழுத்தின் சுற்றளவு மட்டும் 36 சென்ரி மீற்றர்.




ஆடையில் என்ன புதினமென்று தேடவேண்டாம். புதினத்தில் இடம் பெறுவதற்காக, ஒரு புதினப் பத்திரிகையையே துணியில் அச்சடித்து ஆடையாக தன் மொடல் அழகிக்கு அணிவித்து, ஆடைக் கண்காட்சிக்கு அனுப்பிவைத்துள்ளார் ஒரு பிரித்தானிய ஆடை வடிவமைப்பாளர். இவ்வாண்டில் பிரான்ஸில் நிகழ்ந்த ஆடைக் கண்காட்சியிலேயே இந்தப் புதின மங்கை தோன்றி அசத்தினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துக்கத்தில் வாழும் தூக்கணாங் குருவி



துரிதமாக வளர்ச்சியடையும் அபிவிருத்தி நடவடிக்கைகளினால் பறவைகளும் மிக வேகமாக அழிக்கப்படுகின்றன. எமது நாட்டில் 425 வகையான பறவையினங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் 21 வகையானவை எமது நாட்டுக்கு மட்டும் உரிய விசேட இனங்களாகும். 6 வகையான பறவைகள் ஈர வலய பிரதேசத்திலும் இன்னும் 6 வகையானவை வறண்ட பிரதேசத்திலும் வாழ்வதோடு ஏனையவை நாட்டின் நாலா பக்கங்களிலும் சிதறி வாழ்கின்றன.

அந்த வகையில், நாட்டில் எல்லாப் பாகங்களிலும் வாழக்கூடிய ஒரு பறவை இனம்தான் தூக்கணாங் குருவிகள். வேளாண்மைக் குருவியை விடப் பெரியதாயினும் இவை வீட்டுக் குருவிகளை விட சிறியவையாகும். ஆண் குருவிக்கு தலையில் மஞ்சள் நிறத் தொப்பி போன்று ஒன்று இருக்கும். கபில நிற முகம் கொண்ட இக்குருவிகள் இன்னிசை பாடுவதில் ஏனைய குருவிகளை விட வல்லவை.

பறவைகளைப் பற்றிப் பேசும் நாம் பறவைகள் கூடு கட்டுவதைப் பற்றி அறிந்திருப்பதில்லை. குடும்பம் நடத்த, உணவருந்த, முட்டையிட, ஓய்வெடுக்க... இப்படிப் பல காரணங்களுக்காய் பறவைகள் கூடு கட்டுகின்றன. சில பறவைகளோ கூடே கட்டாமல் வேறொரு பறவையின் கூட்டில் கூட முட்டையிட்டு விடுவதும் உண்டு.

கூடு கட்டும் கலைத் திறமையில் தூக்கணாங்குருவிகள் நம்மை பிரமிக்கவே செய்து விடுகின்றன.

தூங்கும் கூடுகளை, மனிதர்களாகிய நாம் நினைத்துப் பார்க்கவே முடியாத ஒருவகைக் கலைத் திறமையோடு வடிவமைத்திருப்பது உண்மையில் தூக்கணாங்குருவிகளுக்கு மட்டுமேயுரிய விசேடத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. அநேகமாக இலைகளின் நுனியிலேயே தூக்கணாங் குருவிக் கூடுகளைக் காணலாம்.

தூக்கணாங் குருவிகள் தமது கூடுகளை அமைத்துக்கொள்ள சிறிதளவுக்கு காகிதங்களை உபயோகித்தாலும் அதிகமாக தும்புகளையும், ஓலைகளையுமே உபயோகிக்கின்றன.

கூடு இரண்டு பாகங்களைக் கொண்டது. மேல் பாகத்தை தமது இருப்புக்காகவும் அடிப் பாகத்தை உட்செல்லும் வழியாகவும் அமைத்திருக்கும். 2 அடி தொடக்கம் 4 அடி வரையில் நீளமான இதன் கூடுகளுக்குள் இருளடைந்ததும் வெளிச்சம் தரவென மின்மினிப் பூச்சிகளைப் பிடித்து வந்து சிறைப்படுத்தி வைத்திருக்குமாம்.

இன்னும் மேற்பாகத்தில் மண் கட்டிகளை வைத்திருக்கும். ஏனெனில் வீசும் காற்றுக்கு கூடு அதிகமாக ஆடாதிருப்பதற்காக. தென்னை ஓலைகளை தன் சின்னச் சொண்டுகளால் வெட்டி எடுத்துக் கொண்டு பறந்தபடியே அதனைக் கிழிக்கும். அந்த ஓலை நாரையே கூடு கட்டப் பயன்படுத்தும்.

தூக்கணாங் குருவிகள் பலதார மணம் முடிப்பவை என்றால் ஆச்சரியப் படுவீர்கள். ஆனால் அதுதான் உண்மை. ஒன்றுக்கு மேற்பட்ட பல துணைவியரோடு இவை சல்லாபம் புரியும். கூட்டின் மேற் பகுதியைக் கட்டியவுடன் ஒரு துணையைக் கூட்டி வரும். பின்னர் இரண்டும் சேர்ந்து மிகுதியைக் கட்டி முடிக்கும். முட்டையிட்டுவிட்டு அந்தத் துணையை தனிமைப்படுத்திவிட்டு இன்னொரு கூடு கட்டும். துணையைக் கொண்ட கூடுதான் முழுமையான கூடு எனக் கருதலாம்.

உயிரினம் நிர்மாணிக்கும் உலகின் சுந்தரப் படைப்புகளுள் ஒன்றான இந்தத் தூக்கணாங் குருவிக் கூடுகளை வருடத்தில் ஜூன் - ஜூலை மாதங்களிலேயே காணலாம். தன் ஆசை நாயகியை அன்போடு அரவணைக்கவே இந்தக் கூடுகள் கட்டப்படுகின்றன. இன்னொரு விஷயம் படாத பாடுபட்டுக் கட்டிய கூடு கட்டழகிக்குப் பிடிக்கவில்லையென்றால் அந்தோ! ஆண் குருவிக்கு ஏமாற்றந்தான்.

எவருக்கும் எந்தத் தொந்தரவும் தராத இந்தச் சின்னஞ் சிறிய வண்ணப் பறவையின் கெட்ட காலம் கூட்டினால் தான் அதற்கு உண்டாகிறது. தன் கூடே தனக்குக் கேடாக வருமென அது கூட்டைக் கட்டும்போது இம்மியளவும் நினைத்திருக்காதுதான்.

ஆம் சிலர் இதன் கூட்டைத் திருடி முட்டையை வீசி எறிந்துவிட்டு கூட்டை மட்டும் எடுத்துச் செல்கிறார்கள். இது ஒரு வகை மருந்து தயாரிப்பதற்காக ஏற்றுமதி செய்யப்படுகிறது. தவிர சில நாடுகளில் இதன் சூப் என்றால் பெரும் விருப்பமாம். இதனால் நல்ல விலைக்கு விலைபோகிறது.

ஆனால், தூக்கணாங் குருவிக் கூடுகளை எடுத்துச் செல்வது எமது நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது. சட்டத்தை இருட்டறைக்குள் தள்ளிவிட்டு இந்தத் தூக்கணாங்குருவிகள் கூண்டோடு அழிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஏனென்றால் மனிதனல்லவா இந்த வியாபாரத்தைச் செய்கிறான்!

**- எச். எஸ். டீன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ். மக்களுக்கு மறுக்கப்பட்ட மனித உரிமைகள்

இலங்கையில் நிறைந்திருக்கும் மனித உரிமை அமைப்புகள் பல அடையாளம் காணுகின்ற மனித உரிமை மீறல்கள் பற்றி சில கேள்விகள் எழுகின்றன. உண்மையில் அவை அடையாளம் காண மறுக்கின்ற, அல்லது மறுக்கின்ற சில மனித உரிமை மீறல்கள் பற்றிய கேள்வியாகவே அவை எழுகின்றன. அவர்கள் அடிப்படையில் மனித உரிமை பற்றி என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பது இக் கேள்விகள் முன் தெளிவுபடுத்தப்படவேண்டியஒன்று.

மனித உரிமையென்பது மனிதர்களுக்கு மனிதர் வேறுபடுகின்ற ஒன்றல்ல. அது பத்திரிகைகள் ஊடகங்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுவதுமல்ல. இவ்விடயம் பிரபலத்துக்கான 'ஸ்டண்ட்' ஆக மாறிவிடக் கூடாதது.

இவ்வகையில் இலங்கை மனித உரிமையாளர்களால் கண்டுகொள்ளாது விடப்பட்ட மனித உரிமைக்கான ஒரு பாரிய அச்சுறுத்தலை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். அவ்விடயத்தில் இம் மனித உரிமை அமைப்புகள் எப்படி ஒரு மாற்றாந் தாய் மனோபாவத்துடன் நடந்து கொள்கின்றன என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டும்.

தென்னிலங்கையில் ஏதேனும் இத்தகைய ஒருசம்பவம்நடந்தால், ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த வீதிக்கு வருவதற்கு பல மனித உரிமை அமைப்புகள் ஒன்றையொன்று முந்திக் கொள்ள முண்டியடிக்கின்றன. அதுபற்றி பட்டிதொட்டியெல்லாம் பேசப்படுகின்றன. தொலைக்காட்சிகள், பத்திரிகைகளில் விவாதிக்கப்படுகின்றன.

இவை நல்ல, ஆரோக்கியமான விடயங்களே, மறுப்பதற்கில்லை. ஆனால் இதே அக்கறை அவர்களுக்கு வேறு சில மக்கள் தரப்பினர்மீது ஏன் இல்லாமல் போனது என்பதுதான் இங்கு கேள்வி.

குறிப்பாக யாழ். மக்கள்தான் இம் மனித உரிமையாளர்களால் கைவிடப்பட்டவர்களாகிவிட்டார்கள். கேள்விநியாயமற்ற மரண அச்சுறுத்தல்கள் வியாபித்துள்ள அவர்களின் மிகப் பரிதாபமான நிலைமை குறித்து இம் மனித உரிமையாளர்களுக்கு சிறிதுகூட உறைக்கவில்லையென்பதுதான் ஏனென்று ஆச்சரியப்பட வைக்கிறது.

அங்கே உள்ளூராட்சிசபைஉறுப்பினர்கள் அத்தனைபேரும் புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களாக உள்ளார்கள். எத்தனையோ உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அவர்களால் சகட்டு மேனிக்குச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இந்தப் படுகொலைகளை ஏன் மனித உரிமை மீறலாக இவ் அமைப்புகள் கண்டுகொள்ளவில்லை என்பதற்கு விளக்கம் தரவேண்டியது அவர்களது கடமை. இக் கொலைகள் எவருக்கும் தெரியாமல் மறைத்து நடந்த கொலைகளுமல்ல. மாறாக இவை எல்லோரும் அறிந்த ஒரு எழுதப்படாத தீர்ப்பாக நிகழ்ந்தபடி இருக்கின்றன.




நக்கீரன்

ஒருவேளை இம் மனித உரிமையாளர்கள் அம் மனித உரிமைகளை மீறுபவர்கள் யாரெனப் பார்த்து அவற்றின் முக்கியத்துவத்தையும் முக்கியமின்மைகளையும் மதிப்பிட ஒரு சுய தணிக்கை முறையைக் கடைப்பிடிக்கிறார்களா?

மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவ் உள்ளூராட்சி உறுப்பினர்கள் படுகொலை செய்யப்படுவதானது அக் குறிப்பிட்ட உறுப்பினர்களது மட்டுமல்ல அவர்களைத் தெரிவு செய்த மொத்த மக்களின் மனித உரிமைகளையும் பலாத்காரமாக நிராகரிக்கும் செயலல்லவா?

பல தமிழ்ப் பத்திரிகைகள் யாழ். உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் படுகொலைகளை வெறும் சம்பவமாக, செய்தி வகைக்குள் அடக்கி அடக்கம் செய்துவிடுவதற்கப்பால் எவ்வித குரலும் எழுப்புவதில்லை. அது அவர்கள் கொண்டிருக்கும் சார்பு நிலையால் விளைந்த பாரபட்சம்.

உண்மையில் இங்கு மனித உரிமைகள் மீறப்படுவது அப் படுகொலைகளைச் செய்தவர்களால் மட்டுமல்ல. அம் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தாது மறைக்கும் மனித உரிமை அமைப்புக்களாலும்தான்.

இத் தருணத்தில் நாம் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பலப்பரீட்சை நடக்கிறது. அதில் யார் வெல்வார்கள் என்று பார்ப்பதைவிட இப் பலப்பரீட்சையின் வெற்றி தோல்விகள் இன்னும் யார் யாரைப் பழி வாங்கப் போகின்றன என்பதையிட்டு இம் மனித உரிமை அமைப்புகள் சற்று விழிப்பாயிருப்பார்களா என்பதுதான்.

அண்மையில் தேசிய சமாதானப் பேரவை என்னும் அமைப்பு மட்டும் யாழ். பலப்பரீட்சையையடுத்து பெருமளவு மனித உரிமை மீறல்கள் நிகழச் சந்தர்ப்பமுள்ளதாகச் சுட்டிக்காட்டி இருந்தது. ஆனால் அரசாங்கம் புலிகளோடு சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கவேண்டுமென்று வாய்கிழியக் கத்திய சமாதான அமைப்புக்களோ தமிழ்க் கட்சிகளோகூட யாழ்ப்பாணத்தில் அகப்பட்டிருக்கும் மக்களின் நிலைமை பற்றி சர்வதேச அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்ததாகத் தெரியவில்லை.


1990ம் ஆண்டிலும் புலிகள் மீண்டும் வட-கிழக்கிற்குள் நுழைந்த பின் 2000ற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டும் ஆயிரக்கணக்கானோர் சித்திரவதை முகாம்களுக்குள்ளும் தள்ளப்பட்டது யாவரும் அறிந்த உண்மை. இன்று மீண்டும் புலிகள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்தால் அங்கு மாற்றுக் கருத்துள்ளவர்களின் கதி என்னாகும் என்பதுபற்றி அக்கறைப்படாதிருக்கும் மனிதஉரிமை, சமாதான அமைப்புக்கள் மற்றும் தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுபற்றி கண்டிக்காமல் இருக்க முடியாது. அவ்வாறு எதிர்பார்க்கக் கூடிய மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கான முயற்சிகளை யாராவது முன்னெடுப்பார்களா? ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## வாசலைத் தாண்டிய கடிதம்

தங்களது ஏப்ரல் இதழில் புலிகள் தம்மால் தடுத்து வைக்கப்பட்ட கைதிகளைத் தாமே கொலை செய்த சிறப்புக் கட்டுரையைப் பார்த்து இரத்தம் உறையவில்லை. ஏனெனில் எமது மண்ணில் ஒரு விஷப் பூண்டு முளைத்ததிலிருந்து எமக்கு இந்த விஷக் காற்று பழக்கப்பட்டுப் போய்விட்டது.

ஆனால் அந்தச் சம்பவம் குறித்து எமது பெரு மதிப்புக்குரிய பேராசிரியர் சிவத்தார் (கா.சிவத்தம்பி) லண்டனில் சொன்ன ஒரு கருத்துதான் என்னால் இன்னமும் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது.

(தங்களது இதழ் வெளிவந்த பின்னர் முன்பு பேராசிரியரை தனது "பழம் புண்டித" தமிழில் கேவலப்படுத்திய தமிழ் பத்திரிகை ஒன்று தனது ஞாயிறு வெளியீட்டில் மேலும் அவரை அசிங்கப்படுத்தும் விதத்தில் பேராசியர் சொன்னதாக அமுதுடன் சிண்டு முடித்து விட்டுள்ளது)

அகில உலகிலும் தமிழ் கூறும் நல்லுலகம் பெற்றெடுத்த தமிழ் இலக்கிய விமர்சக ஜம்பவான்கள் இரண்டு பேர். அவர்கள் இருவரும் பேராசிரியர்கள். ஒருவர் க. கைலாசபதி. அவர் மகாகவி சுப்பிரமணிய பாரதி போல இளமையிலே தனது நூறு வயது கடமையை முடித்தவர். எஞ்சியிருப்பவர் பேராசிரியர் சிவத்தம்பி.

"காய்த்த மரம்தான் கல்லெறி வாங்கும்'' என்பது தமிழ் முதுமொழி. அதுபோல இன்று எங்களிடம் இருக்கும் ஒரேயொரு பெரும் சொத்து சிவத்தார்தான். அவர் ஒரு பக்கம் தமிழ் மேட்டுக்குடி மக்களின் அபிலாஷைகளை பகைக்காமல் இருக்க முயற்சிக்கிறார்.
மறுபக்கம் தனது மார்க்சிய விமர்சனப் பார்வையை பாதுகாக்க முற்படுகின்றார். இது ஒரு சிக்கலான பணி. ஆனாலும் அவரது வாழ்வில் இது புதிய விடயமல்ல.

பொதுவாக பேராசிரியர் சிவத்தம்பி கம்யூனிஸ்ட் கட்சியின் வழி வந்தவர் (கைலாசபதியும் கூடத்தான்.) என்ற வகையில் தமிழ்த் தேசியவாத விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் ஈ. பி. ஆர். எல். எப்., ஈரோஸ் போன்ற இடதுசாரி மனோபாவம் கொண்ட இயக்கங்களுடன் நட்புறவைப் பேணி வந்தார் சிவத்தார்.
இதைப் பொறுக்காத 'பெரிசுகள்' (அதாவது புலிகள்) சில முடிவுகளை எடுத்தனர். (அதாவது சிவத்தாருக்கு மண்டையில் போடுதல்) அதைத் தடுக்க அந்த நேரத்தில் யாழ். தளபதியாக இருந்த கிட்டுவின் இரண்டு ஆசான்கள் தலையிட வேண்டி வந்தது.
இதிலிருந்து என்ன தெரிகிறது? ஒரு தமிழ் புத்திஜீவி தனது மனச்சாட்சி என்ற முதுகெலும்புடன் இன்றைய தமிழ் சூழலில் வாழ முடியாது என்பதுதான்.

எனவே சிவத்தார் அரசியல் கருத்துக்கள் கூறுவதைத் தவிர்த்து, தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவராகப் பணியாற்றினார். பேராசிரியர் சேவையாற்றிய காலத்தில் நடந்தது என்ன?

கழகத்தின் நிதி விவகாரங்கள் குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்ததுடன், அது பற்றி விசாரிக்க லண்டனிலிருந்து வந்த திரு. கந்தசாமி காணாமல் போனது பற்றி பேராசிரியரின் பெயரையும் சேர்த்து வதந்திகள் எழுந்தன.

இன்று தமிழ் அறிஞர்கள் நிலை என்ன? ஒரு சிலர் தமிழ் சமூகத்தின் மீது கவிந்துள்ள கருமுகில்களை விடுதலை ஒளி என்று கொண்டாடுகின்றனர். இன்னும் ஒரு சிலர் இதை எதிர்த்து கோதாவில் இறங்கியுள்ளனர்.

ஆனால் பெரும்பான்மையோர் தங்களைப் பின்தொடர்ந்து உற்று நோக்கும் கண்களுக்குப் பயந்து, வடகிழக்கிலும், கொழும்பிலும், புலம் பெயர் நாடுகளிலும் மௌனிகளாக வாழ்க்கையை ஓட்டுகின்றனர்.

எனவேதான் ஒருவரைக் குற்றம் சாட்டும்போது சூழலை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பேராசிரியர் லண்டனில் கூறியது உண்மையாக இருப்பினும் அது அவரது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்த கூற்று என்று கொள்ள முடியாது.

நானும் நீங்களும் பேராசிரியரும் தமிழர்களும் நம் எதிரியைப் பற்றிக் கண்டிக்க சுதந்திரம் உள்ளது. ஆனால் நம் "நண்பனை" கண்டித்தால் எமது கதி என்ன என்பது நாம் எல்லோரும் அறிந்ததே.
பேராசிரியரின் ஒரு மாணவன் என்ற வகையில், எனது இந்த கருத்துக்களை அவரது வாய் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகின்றேன்.

அன்புடன்,
எஸ். சரவணமுத்து, கரவெட்டி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அதிகாரப் பகிர்வு இனங்களைப் பிரிக்கவா?

**விமல் வீரவங்ச**

**ஜே.வி.பி. கட்சியின் பிரசாரச் செயலாளர், மேல்மாகாணசபை உறுப்பினர்**

**பேட்டி கண்டவர்கள்: து. பாஸ்கரன், பிரகீத்**

**கேள்வி:** கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்களுக்குக் கிடைத்த வாக்குகள் 1982 ஜனாதிபதித் தேர்தலில் ரோகண விஜயவீர போட்டியிட்டபோது கிடைத்த வாக்குகளைவிட குறைந்து போனதன் காரணம் என்ன?

**பதில்:** அதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவதாயின், வாக்களார்கள் எப்போதும் ஒரு சாதரண தேர்தலைப் போலல்லாது ஜனாதிபதித் தேர்தலில் வித்தியாசமாகவே செயற்படுவார்கள். குறிப்பாக, அது ஒரு அரசின் ஆட்சி மாற்றத்துக்கான செயற்பாடு என்பதால்.

இலங்கை வரலாற்றிலே ஜனாதிபதி தேர்தல்கள் இடதுசாரிகளுக்கு எப்போதும் வாய்ப்பாக இருந்ததில்லை. அதேவேளை இம்முறை புலிகள் நடத்திய குண்டுத் தாக்குதல்களும் ஒருவித அனுதாப அலையை ஏற்படுத்தியிருந்தன. அது சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. இவ் விசேட சூழ்நிலைகள் இல்லாதிருந்திருப்பின் 1982ஐ விட நாம் அதிக வாக்குகளை எடுத்திருப்போம்.

**கேள்வி:** இந் நாட்டில் நிலவும் இனப் பிரச்சினை தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன, தமிழ் மக்களுக்கு அதை நீங்கள் எப்படி விளக்குவீர்கள்?

**பதில்:** நாட்டில் நிலவுகின்ற அரசியல், சமூக, பொருளாதாரக் காரணிகளில் உள்ள முரண்பாடு காரணமாகவே இவ் இனப்பிரச்சினை தோன்றியிருப்பதாக நாம் கருதுகின்றோம். இந் நாட்டை இரு பிரதான கட்சிகளே இது வரை ஆண்டுள்ளன. இவற்றால் இந் நாட்டு தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்க முடியவில்லை. அதுமட்டுமின்றி, சகல இனங்களுக்கும் பொதுவான விடயங்களிலும் கூட சரியான தீர்வுகளை இவ்விரு கட்சிகளாலும் வைக்க முடியவில்லை. இனப்பிரச்சினை தோன்றக் காரணம் இதுவே.

இம் முதலாளித்துவ அரசாங்கங்களால் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதலாலேயே இனப்பிரச்சினை ஒரு சிவில் யுத்தம்வரை வளர்ச்சி கண்டது.

நாட்டிலுள்ள ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருப்பதற்கும் அரசாங்கம் இவ் யுத்தத்தையே காரணமாகக் காண்பிக்கிறது.



எனவே இவ் அரசாங்கங்கள் இவ் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்புவதும் இல்லை. மக்களின் ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருப்பதற்கு அரசாங்கங்களுக்கு இது ஒரு நல்ல சாட்டு.

வறுமைக்குக் காரணம் யுத்தமல்ல. யுத்தத்துக்கு முன்னரும் இந் நாட்டில் வறுமை இருந்தது. அவ் வறுமை இவ் யுத்தத்தால் இன்னும் பலமடங்கு அதிகரித்திருக்கின்றது என்பதே உண்மை. இந் நாட்டின் பொதுவான பிரச்சினைகளின் இன்னுமொரு வெளிப்பாடே இவ் இனப்பிரச்சினை.

**கேள்வி:** இனப்பிரச்சினைக்கு கோட்பாட்டு ரீதியான விளக்கங்கள் எதனையும் நீங்கள் முன்வைக்கிறீர்களா?

**பதில்:** கோட்பாட்டு ரீதியாகப் பார்த்தால் ஒன்றுதான். அதாவது சமூக சமத்துவமின்மை. இந் நாட்டிலே நிலவி வருகின்ற முதலாளித்துவ ஆட்சி முறையினால் இந் நாட்டில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக பொருளாதாரச் செயற்பாட்டில், உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபட முடியாமல் இருந்தமை.

இவ் விடயத்தில் சமத்துவம் வழங்கப்பட வேண்டுமென்பதுபற்றி எவ்வித அக்கறையும் காட்டப்படவும் இல்லை. கலாசார சமத்துவம் இன்மையும் இதற்குள்ளே அடங்குகிறது. அடுத்து முக்கியமான விடயம்தான் ஜனநாயகம் பற்றியது. தொடர்ச்சியாக ஜனநாயகச் சூழ்நிலைக்கான இடைவெளிகள் குறைக்கப்பட்டமை.

**கேள்வி:** ஜனநாயகச் சூழ்நிலையின்மை என்பதை மேலும் விளக்க முடியுமா?

**பதில்:** குறிப்பாக, சிங்கள மொழிச் சட்டத்தை அமுல்படுத்தியமை. 1972ம் ஆண்டு இடதுசாரிகளும் இணைந்திருந்த ஒரு அரசாங்கத்தில் தமிழ் மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்பட்டமை. இவற்றை எதிர்த்து வட-கிழக்கில் இளைஞர்கள் அமைதியாக கறுப்புக் கொடி ஏற்றிப் போராட்டங்கள் நடத்திய போது அரசு தனது பொலீஸ், இராணுவ யந்திரங்களை அனுப்பி அவர்களை மோசமாக நசுக்கியமை.

அதனால் தமிழ் மக்களுக்கு தமது சமூகத்துக்கு விசேடமாக உள்ள பிரச்சினைகளை அமைதியான முறையில் எடுத்துச் சொல்லுவதற்காக இருந்த இடைவெளிகள் இல்லாதொழிக்கப்பட்டமை.
இவ்வாறான இடைவெளி அவர்களுக்கு இருந்திருப்பின் புலிகள் போன்ற பாசிசத் தன்மை கொண்ட ஆயுத இயக்கங்கள் உருவாகும் நிலைமை வந்திருக்காது.

**கேள்வி:** தமிழ் மக்கள் ஒரு தனியான இனமென்ற வகையில் அவர்களுக்கு விசேடமான பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** ஒரு பொது சமத்துவமின்மை இந்நாட்டில் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அது சமூகப் பொருளாதார கலாசார சமத்துவமின்மை. அதை இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகமாக உணர்கிறார்கள். உதாரணமாக சிங்கள மொழியில் மாத்திரம் அல்லது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கடமைகள் மேற்கொள்ளப்படும் போது தமிழ், முஸ்லிம் மக்களை அது பாதிக்கிறது. இது ஒரு வகையில் கலாசாரப் பிரச்சினை.

அதேவேளை பொருளாதார ரீதியாக எடுத்துக் கொண்டால் வேலையின்மைப் பிரச்சினை. இது ஒரு பொதுப் பிரச்சினை. இப்பொதுப் பிரச்சினை தொடர்பாக சிறுபான்மை இனத்தவர்கள் குரல்கொடுக்க முனைந்த போது அரசாங்கம் தன் பலத்தைக் கொண்டு அவர்களை நசுக்கியது. அதை அம்மக்கள் தமக்கான ஒரு விசேட பிரச்சினையாக உணர்ந்தார்கள்.

இதுபோல் வறுமை நிலையும் ஏனைய வசதியின்மைப் பிரச்சினைகளும் பொதுவாக சகல சமூகங்களுக்கும் உண்டு. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் இப்பிரச்சினை படிப்படியாக அதிகரித்தும் இருக்கிறது.

இப்பிரச்சினைகள் தமிழர் சிங்களவர் என்ற பேதமின்றி நகரம் கிராமம் என்ற வகையிலேயே எம் எல்லோரையும் பாதித்தது. ஆனால் சிறுபான்மை மக்கள் அது தமக்கு மாத்திரம் நடப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். அப்படி அர்த்தப்படுத்திக் கொள்வதிலும் தவறு இருப்பதாக தெரியவில்லை.

ஆனால் இப்படியான எண்ணப்பாடுகள் சமூகத்தில் உருவாகாமல் ஆட்சியை நடத்த வேண்டியது அரசாங்கங்களின் பொறுப்பாகும்.

**கேள்வி:** நீங்கள் இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறீர்களா அல்லது ஐக்கிய இலங்கை என்னும் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறீர்களா?

**பதில்:** எமது நாட்டிலுள்ள பல இடதுசாரி அரசியல் கட்சிகள் கூட குழப்பியடித்துக் கொள்ளும் ஒரு பிரச்சினைதான் இது.
அதனால் சில அடிப்படையான விடயங்களில் இருந்து விலக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். உலகம் ஏகாதிபத்தியங்களின் முகாம்களாகப் பிரிந்திருந்த காலத்தில்தான் லெனின் சுய நிர்ணய உரிமை என்னும் அரசியல் மாக்சிஸ கோட்பாட்டை முன் வைத்தார். பிரெஞ்சு ஏகாதிபத்தியம், ஜப்பானிய ஏகாதிபத்தியம், பிரித்தானிய ஏகாதிபத்தியம் என உலகம் அன்று பிரிந்திருந்தது.

அன்று பல தேசங்களில் இருந்த இனங்கள் இவ் ஏகாதிபத்தியங்களினால் அடக்கப்பட்டு வாழ்ந்தன. அவற்றைத்தான் லெனின் அன்று இனங்களாக கருதினார். குறிப்பாக ரஷ்யாவில் பல இனங்கள் ஸார் மன்னனின் ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டன. அவை தனியான சமூகப் பொருளாதார கலாசார அரசியல் தனித்துவங்களை கொண்டிருந்ததினால் அவை தனியாகப் பிரிந்து போக உரிமை உடையவை என லெனின் கூறினார். ஆனால் இணைந்திருக்க விரும்பினால் இணைந்தும் இருக்கலாம் என்பதே அக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகவும் இருந்தது.

**வறுமை நிலையும் ஏனைய வசதியின்மைப் பிரச்சினைகளும் பொதுவாக சகல சமூகங்களுக்கும் உண்டு. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் இப்பிரச்சினை படிப்படியாக அதிகரித்தும் இருக்கிறது.**

எனவே நாம் இதனை வரலாற்று ரீதியாகவும் புரிந்துகொள்ள வேண்டும். லெனின் இக்கோட்பாட்டை உருவாக்கிய நிலையிலிருந்து உலகம் இன்று பல விதத்தில் மாறிவிட்டது.

இன்று இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்குள்ள பிரச்சினை, தனியாக, பொருளாதார கலாசார ரீதியாக வேறுபட்டு நீண்ட காலம் வாழ்ந்த ஒரு சமூகத்தை பலாத்காரமாக அடக்கி ஒடுக்க முற்பட்ட பிரச்சினை அல்ல. மாறாக ஒரே நாட்டிற்குள் கலாசார, மொழி வேறுபாடுகளுடன் வாழ்ந்த மூன்று இனங்களை, ஆட்சி செய்த முதலாளித்துவ வர்க்கம் அம்முதலாளித்துவ முறைக்குள் அவ்வினங்களை ஒன்றாக வாழவைக்க முடியாமல் போன பிரச்சினையே ஆகும்.
எனவேதான் சுயநிர்ணய உரிமை என்னும் கோட்பாட்டை பல தசாப்தங்களுக்கு முன் இருந்த வரலாற்றுச் சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுத்து இலங்கைப் பிரச்சினைக்குள் புகுத்த நினைத்தால் தவறுவிடுவோம்.

இங்கு அவசியப்படுவது ஒரு சுய ஆட்சி உரிமை. பிரிந்து போகும் உரிமை அல்ல.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**நாம் பசிக்குதென்று உணவு கேட்கும் போது அதற்குப் பதிலாக யாராவது நஞ்சுப் போத்தலைத் தந்தால்... ஏதோ தருகிறார்கள் என்பதற்காக நஞ்சைக் குடிப்பதா? அவர்கள் தருவது நஞ்சு என அறிந்த ஒருவன் அதைத் தடுத்தால் தடுப்பவனை எதிரி எனக் கருதுவதா?**

சுய ஆட்சி உரிமை என்பது முதலாளித்துவ வர்க்கத்தால் வழங்கப்படக்கூடிய ஒன்றல்ல. முதலாளித்துவ முறையின் கீழ் வழங்கப்படும் சுயாட்சி உரிமை என்பது நிச்சயமாக பிரிந்து போவதற்காக வழங்கப்படும் உரிமையே.

நாம் கூறுவது சமத்துவத்தின் அடிப்படையிலான, ஜனநாயகத்தை நிலைநிறுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையில் இனங்களுக்கு வழங்கப்படுகின்ற சுயாட்சி உரிமையாகும். இதையே நாம் ஏற்றுக்கொள்கிறோம். சுய ஆட்சி உரிமை என்பதும் பிரிந்து போகும் உரிமை என்பதும் முற்று முழுதாக ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. இதனை நாம் எமது கொள்கைப் பிரகடனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம்.

**கேள்வி:** இப்போது நோர்வே நாட்டின் தலையீட்டோடு நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் இதுபற்றி எழுந்துள்ள எதிர்ப்புகள் பற்றியும் உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** நாம் முதலிலே கேட்கும் கேள்வி அதாவது தமிழ் மக்களிடம், தமிழ் சமூகத்திடம்... ஏன் நாம் எம்மிடமே கேட்கும் கேள்விதான், இப்பேச்சுவார்த்தைகளுக்கு ஊடாக கிடைக்கப் போவது உண்மையில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய ஒன்றுதானா?

நாம் பசிக்குதென்று உணவு கேட்கும்போதுஅதற்குப்பதிலாக யாராவது நஞ்சுப் போத்தலைத் தந்தால்... ஏதோ தருகிறார்கள் என்பதற்காக நஞ்சைக் குடிப்பதா? அவர்கள் தருவது நஞ்சு என அறிந்த ஒருவன் அதைத் தடுத்தால் தடுப்பவனை எதிரி எனக் கருதுவதா? அதுபோல் தான் நாம் நோர்வே பேச்சுவார்த்தைகள் பற்றி கேள்வி எழுப்பும்போது சிலர் எம்மைப் பார்க்கிறார்கள்.

இப்பிரச்சினையை இன்னொரு விதமாக விளக்க முற்படுகிறேன். இன்று நாட்டிலே தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான சூழ்நிலை ஒன்று எமக்குத் தேவைப்படுகிறது. தமது பிரச்சினைகளை சுதந்திரமாகச் சொல்லக்கூடிய சூழல் வேண்டும். அதற்கான ஒரு நிர்வாக அமைப்பு வேண்டும்.

இதைத் தீர்க்காமல், மூன்றாமவரொருவர் தலையிட்டு தமிழ் மக்களை, ஏனைய சமூகங்களிலிருந்து பிரித்து, வட-கிழக்கு என்னும் ஒரு பிரதேசத்திற்குள் அவர்களைக் குறுக்கி விடுவதன் மூலம் வரலாற்று ரீதியான பாரிய பிரச்சினை ஒன்று உருவாக வழியுண்டு. அதைத்தான் நாம் நஞ்சுப் போத்தல் என்கிறோம். இந்நாட்டில் ஒரு இனத்தைச் சார்ந்த மக்கள் இந்நாடு தமக்குமத்தான் சொந்தம் எனக் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

வடகிழக்கு பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் சிங்கள மக்கள் அப்பிரதேசம் தாம் வாழும் பாரம்பரிய தாயகம் அதில் வேறு எவருக்கும் வாழும் உரிமை இல்லை எனக் கூறினால் அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே போல் தமிழ் மக்கள் வடகிழக்குப் பிரதேசம் தமக்கு மட்டுமே உரிய பாரம்பரிய தாயகமென்றோ கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அது தமது தாயகமென்றோ கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

எம்மைப் பொறுத்தவரை இலங்கை என்பது இச்சகல இனங்களினதும் பாரம்பரியத் தாயகமாகும். இவர்கள் மட்டுமல்ல மலையகத்தில் வாழும் மக்களுக்கும் இதுதான் பாரம்பரிய தாயகம் என்பது எமது நிலைப்பாடு. எனவேதான் ஒரு பிரதேசத்தை பாரம்பரியத் தாயகம் எனக் கூறும் கோட்பாட்டையோ, அதனடிப்படையிலான தீர்வையோ நாம் நஞ்சுப் போத்தல் என்கிறோம்.

எனவே எம்மைப் பொறுத்தவரை இந்நாட்டில் அதிகாரத்துக்கு வரும் அரசாங்கம் இந்நாட்டில் வாழும் சகல இனங்களையும் சமத்துவமாக நடத்துவதன் மூலம் அம்மக்கள் அனைவரும் இது தமது தாயகம் என உணர்கின்ற விதத்தில் ஆட்சி நடத்துவதாக இருக்க வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை இப்பிரச்சினை தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களால் விஞ்ஞான பூர்வமாக அணுகப்பட வேண்டும். சிலர் தமிழ் பத்திரிகைகளில் எம்மைப் பற்றி தவறான கருத்துக்களை பரப்ப முயற்சிக்கிறார்கள். எம்மையும் இனவாதிகளாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு ஏதோ கிடைக்கிறது என்பதற்காக நாம் முட்டாள்தனமாக எல்லாவற்றையும் ஆதரிக்கத் தயாராயில்லை. தமிழ்ச் சமூகத்துக்கு ஜனநாயக ரீதியான சுதந்திரம் கிடைத்தால் நாம் அதனை ஆதரிக்கத் தயாராவே உள்ளோம். ஆனால் கிடைக்கின்ற தீர்வு நிரந்தரத் தீர்வாக இருக்க வேண்டும் என்பதே முக்கியமாகும்.

**கேள்வி:** J.V.P அதிகாரத்துக்கு வந்தால் இப் பிரச்சினைக்கு உங்கள் அரசியல் யாப்பு ரீதியான தீர்வு எது?

**பதில்:** அது மிகத் தெளிவு. எமது ஆட்சியில சமூகத்தில் கீழிருந்து மேல்வரை சமத்துவத்தைச் சரியாகச் செயற்படுத்தக் கூடிய புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குவோம். அதுவும் மக்களின் ஏற்றுக்கொள்ளலுடன்.

அவ் யாப்புக்கூடாக மொழிச் சமத்துவம், பொருளாதார சமத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வம் மற்றும் கலாசார, கல்வி, சமூக வாழ்வு என்பவற்றிலும் சமத்துவம் கொண்டுவரப்படும். சகல இனங்களையும் ஐக்கியப் படுத்தும் அடிப்படையிலேயே சகல நடைமுறைகளும் மேற் கொள்ளப்படும்.

இனத்துவ அடிப்படையில் தொழில் நியமனங்கள், விகிதாசார முறைமை என்பன அர்த்தமற்றவை. திறமையுள்ளவர்களும் மக்கள் நலன் விரும்பிகளும், தேச பக்தியுள்ளவர்களும் எவ்வினத்திலிருந்தாலும் அவர்களுக்கு பொறுப்புக்களை வழங்க வகைசெய்யப்பட வேண்டும். அது பிரதேச, மாகாண, மற்றும் அகில இலங்கை என்ற சகல மட்டங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இல்லையேல் சிறுபான்மை இனங்கள் தாம் ஒடுக்கப்பட்டு விட்டோம் என்று எண்ணுவதற்கே வகை செய்யும்.

**கேள்வி:** உங்கள் கூற்றுப்படி பார்த்தால் நீங்கள் அதிகாரத்துக்கு வரும்வரை தமிழ் மக்கள் இருக்கின்ற நிலைமையின் கீழ் இப்படியே வாழவேண்டும் என்பதுதானா?

**பதில்:** இல்லை. இடைப்பட்ட தீர்வுகளையும் நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அவ் விடைக் காலத் தீர்வுகள் இனங்களுக்கிடையே மேலும் விரிசலை ஏற்படுத்துமென்று கருதினால் நாம் கடும் விமர்சனங்களை முன்வைப்போம்.

ஆகக் குறைந்தது ஒரு முதலாளித்துவ ஆட்சிமுறையின் கீழ் இருக்கக்கூடிய சகலரும் சகல பிரதேசத்துக்கும் சென்று வரக் கூடியதாக ஒரு தற்காலிக தீர்வு வருமானால் நாம் அதனை தற்காலிகமாக ஆதரிப்போம்.

**கேள்வி:** இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தமிழ் தீவிரவாதமும் எதிர்த்தது. சிங்கள இனவாதமும் எதிர்த்தது. நீங்களும் எதிர்த்தீர்கள். இதை எப்படி விளக்குவீர்கள்?

**பதில்:** மிக முக்கியமான கேள்வி. இதை சரியாக எம்மிடம் கேட்காமல் பலர் எம்மீது சேறு பூசுகிறார்கள். 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நாம் எதிர்த்ததன் காரணம் இதனால் யாருக்கும் எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பதனால்தான். அது வெறும் அடிமைச் சாசனமே.

அவ்வேளையில் வந்தது சீன இராணுவமாக இருந்தாலென்ன ரஷ்ய ராணுவமமாய் இருந்தாலென்ன நாம் எதிர்த்தே இருப்போம். ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் எவரும் பலாத்காரமாகத் தலையிடுவதை நாம் எதிர்ப்போம். நாட்டின் சுயாதிபத்தியம் இறைமை என்பவை பற்றியும் நாம் அக்கறைப் பட்டோம்.

இந்தியத் தலையீட்டால் வரதராஜப் பெருமாளுக்குப் பதவி கிடைத்ததே தவிர தமிழருக்கு வேறு என்ன கிடைத்தது? எமக்கு மட்டுமல்ல, இந்தியத் தலையீட்டை எதிர்க்க இந் நாட்டை நேசிக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் எவருக்கும் உரிமையுண்டு.

இனவாதிகள் அதை எதிர்ப்பதற்கும் நாம் அதை எதிர்ப்பதற்குமிடையே பாரிய வித்தியாசங்கள் உண்டு.

**கேள்வி:** ஏதாவது ஒரு வகையில் அதிகாரங்கள் பகிரப்படுவதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**பதில்:** ஒரு கோட்பாடென்ற ரீதியில் நாம் அதனை எதிர்க்கவில்லை. உலகில் அதிகாரங்கள் பல்வேறு வகையில் பகிரப்பட்ட அனுபவங்கள் உண்டு. எம்மைப் பொறுத்தவரையில் பிரிந்த இனங்களை ஐக்கியப்படுத்தக் கூடிய அதிகாரப் பரவலாக்கலே அவசியம். மாறாக அது பிரச்சினையை இன்னும் குழப்பி இனங்களுக்கிடையே மேலும் விரிசலை ஏற்படுத்தினால் அதனை நாம் ஆதரிக்க மாட்டோம்.

ஆனால் அதைச் செய்வதற்கு முன் எமது நாட்டில் மக்களுக்குத் தேவையான ஜனநாயகச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** அதாவது அதிகாரத்தை மக்கள் மயப்படுத்த வேண்டுமென்பதையா கூறுகிறீர்கள்?

**பதில்:** ஆம். அக் கருத்தும் சரிதான். அதாவது சாதாரண குடிமக்களை மீறிய அதிகாரம் அரசியல்வாதிகளின் கையில் இருக்கக் கூடாது. நாம் சமத்துவம் என்றுசொல்லுவதுஅதைத்தான்.

அதேபோல் பொருளாதாரச் செயற்பாட்டிலோ, கல்விச் செயற்பாட்டிலோ, வேறு எதிலுமோ மக்கள் உள்வாங்கப்படும்போது தரப்படுத்தல் போன்ற தடைகள் இருக்கக் கூடாது. திறமைக்கேற்ப சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் தேசிய இன ஐக்கியம் பேணப்படும்.

அவ்வாறு இல்லாது அதிகாரம் பகிரப்படும்போது அது வெறுமனே ஏற்கெனவே இனரீதியாக, பிரதேச ரீதியாக பிளவுபட்டுப் போயுள்ள மக்களை மேலும் ஒதுங்கிப் போகவேவழிசெய்யும். ஏற்கெனவே இந் நாட்டில் பிரதேசவாத மனோபாவம், இனரீதியான மனோபாவம் வளர்ந்து போயுள்ளதை நாம் அறிவோம். எனவே அதற்கு எண்ணெய் ஊற்றும் வகையில் நாம் செயற்படக் கூடாது.

**கேள்வி:** இப்போது புதிதாக உருவாகியுள்ள சிங்கள இனத்தை முக்கியத்துவப்படுத்தும் **சிங்கள உறுமய** என்னும் கட்சி பற்றி உங்கள் கருத்து...?

**பதில்:** எம்மைப் பொறுத்தவரை தமிழர்களுக்குப் புலிகள் எப்படியோ, அதுபோலத்தான் சிங்களவர்களுக்கு சிங்கள உறுமயக் கட்சி. இரண்டுமே இச் சமூகங்களுக்கு அழிவைக் கொணர்ந்து சேர்ப்பவை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தலைமைத்துவம் வழங்கியது ஒரு இடதுசாரி அமைப்பாக இருந்திருந்தால் இன்று இவ்வாறான அழிவுகள் ஏற்பட்டிருக்காது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அத் தலைமை புலிகளினால் அபகரிக்கப்பட்டுவிட்டது. அது தென்னிலங்கையில் இவ்வாறான நிலைமைகளுக்கு மேலும் ஊக்கமளித்துவிட்டது.

புலிகள் அமைப்பைப் போன்ற ஒரு பாசிசப் பாணியில் இயங்கும் அமைப்பின் செயற்பாடுகள் சிங்கள சமூகத்துக்குள்ளும் அதிதீவிர இனவாத பாசிச செயற்பாடுகளுக்கு எண்ணெய் ஊற்றிவிட்டிருக்கின்றது.

ஆனால் வரலாற்றில் இவ்வாறு தோன்றிய அதிதீவிர இனவாத அமைப்புக்கள் தோல்வியடைந்ததே எம் எல்லோரினதும் அனுபவம். ●

**இந்தியத் தலையீட்டால் வரதராஜப் பெருமாளுக்குப் பதவி கிடைத்ததே தவிர தமிழருக்கு வேறு என்ன கிடைத்தது?**







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# போராழி

# ஓய்ந்த போராளி



தோழர். திரு. பீ.ரீ. பெர்னாண்டோ!



கறுத்த குள்ளமான உருவம். எழுபதுகளைத் தாண்டிய முதுமையின் களை. ஓய்வு ஒழிச்சலில்லாத ஏதோ ஒரு தீவிர அர்ப்பண உழைப்பின் பின் களைப்பும் அதே அர்ப்பணத்தில் ஊறிய சிந்தனையும் முகத்திலே தெரிந்தன. அந்த மனிதருக்குள் இன்னோர் அபூர்வ உலகம் பொதிந்திருக்கிறது என்பது வெறும் பார்வைக்குத் தெரியாது. பேச ஆரம்பித்தோம்.

“தம்பீ, நா ஒங்களுக்கு சொல்ல வேண்டிய விஷயம் என்னன்னா..”

அவர் பேசத் தொடங்கியபோது ஒரு சரித்திரத்தையே கொட்டப் போகிறார் என்பது தோன்றவில்லை. ஏதோ ஓரிரு அபிப்பிராயங்களாயிருக்கும் என ஒரு மரியாதைக்காக அந்த முதியவரின் வார்த்தைகளை செவிமடுக்க விழைந்தேன்.

இலங்கைத் துறைமுகத்தில் தொழிற்சங்கத் தலைவராக பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தி தொழிலாளர்களின் உரிமைகள் பலவற்றை வென்றெடுத்துக் கொடுத்த முதிர்ந்த தொழிற்சங்கவாதியான அவரது பெயர் **திரு. பீ.ரீ. பெர்னாண்டோ**. இன்று அவரது நிலைமை.... மிக மிக ஏழ்மை!

www.tamilarangam.net



எந்த கர்வமும் இல்லாமல், ஒரு பாட்டா, தன் பேரனுக்குப் பழங் கதைகளைச் சொல்லும் ஒரு குழைவான குரலில் நிதான-மாகத் தனது வார்த்தைகளை உதிர்த்தார்.

"இலங்கையில தொழிற்சங்க வரலாறு இருக்கிறதே, அது ஒரு பெரிய கதை. அது இன்னிக்கு என்ன நிலைக்கு வந்திருக்கு தென்னு பாக்கக்கதான் மனவருத்தமா இருக்கு. அதில ஈடுபட்டு அதுக்காக உடல் பொருள் எல்லாத்தயும் கொடுத்து உழைச்சவங்க இந்த நிலைமையக் கண்டு படுற மனவேதனை இருக்கே, அத சொல்லி மாளாது... ஒங்களால புரிஞ்சுகொள்ள ஏலாது தம்பீ!"

இப்போது அவர் வேறு மனிதரானார். முதுமை இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. கண்களிலே ஏதோ ஒரு தீவிரம். என்னை அவர் கையைப் பிடித்து தரதரவென தனது காலத்துக்கு இழுத்துச் செல்வது போன்ற ஒரு உணர்வு...



இப்போது அவருக்கு வயது 73. தனது 12 வயதிலேயே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் செயற்பட ஆரம்பித்து விட்டார்.

"இப்போது கட்சிகளில வசதிகள் பெருகிடிச்சு. வேற வேற வழிகளில வருமானங்களும் வருது. கட்சி ஊழியருக்கு சம்பளம், வருமானம், சலுகைகள் எல்லாம் கூடக் கிடைக்குது. ஆனா அந்தக் காலத்தில இப்படியில்ல. அப்போ கட்சி கஷ்டத்தில இருந்துச்சு. நாமதா சொந்த வருமானத்தையெல்லாம் கட்சிக்காகச் செலவழிச்சோம். நாம கொள்கைக்காகவே இயங்கினோம். சொந்த வாழ்க்கையப் பத்தி சிந்திக்காம அர்ப்பணஞ் செய்து வேலை செஞ்சோம்...."


அந்தக் காலத்தில் துறைமுகமானது, துறைமுக ஆணையகம், இலங்கை துறைமுக கூட்டுத்தாபனம், டெலிகிளார்க் பாதுகாவலர் கூட்டுத்தாபனம் என மூன்று பிரிவுகளாக இயங்கியது. 1979ல் அவை மூன்றும் ஒன்றிணைந்து இலங்கை துறைமுக அதிகார சபை என்ற ஒரே அமைப்பாக மாற்றப்பட்டது.

பெனாண்டோ அவர்கள் ஆரம்பத்திலிருந்தே துறைமுக தொழிற்சங்கப் போராட்டங்களில் முன்னின்று பங்காற்றியவர். அங்கு செயலிழந்து போயிருந்த தொழிற்சங்க இயக்கத்துக்குப் புத்துயிர் கொடுத்து திரு. பெர்னாண்டோவின் முன்னெடுப்பில் 1952ல் நடத்திய ஹர்த்தாலால் துறைமுகமே ஸ்தம்பித்தது. அதன் வெற்றியில் பிறந்த நம்பிக்கையால் 1955ம் ஆண்டளவில் **துறைமுக ஆணைக்குழு ஐக்கிய தொழிலாளர் சங்கம்** என்ற தொழிற்சங்கம் பிறந்தது. அதில் ஆரம்பத்தில் உதவிச் செயலா-ளராக செயற்பட்ட இவர் பின்னர் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



**உடல் பொருள் எல்லாத்தயும் கொடுத்து உழைச்சவங்க இந்த நிலைமையக் கண்டு படுற மனவேதனை இருக்கே, அத சொல்லி மாளாது... ஒங்களால புரிஞ்சுகொள்ள ஏலாது தம்பி!**

"அந்தக்காலத்தில தொழிற்சங்கங்களில இயங்கிறது ரொம்ப அச்சுறுத்தலானது. மிரட்டல்களையும், வேலைக்கு எப்பவும் ஆபத்தையும் எதிர்நோக்கிக் கொண்டுதான் இயங்க வேணும். இதனால சங்கத்துக்கு ஆள் திரட்டுறது கஷ்டம். அப்படியிருந்தும் நாங்க 40வீதத்துக்கு அதிகமான தொழிலாளர்கள அங்கத்துவர்களாக்கி பலம்வாய்ந்த தொழிற்சங்கமாக இயங்கினோம். எவராலும் எங்க தொழிற்சங்கத்த விழுத்த முடியேல்ல. அதனால எனக்கெதிராக 'கள்ளத்தோணி' என்னு நோட்டீஸ்கூட அடிச்சு விட்டாங்க. இதுக்கெல்லாம் நாம அஞ்சல. கம்யூனிஸ்ட் கட்சியோட 'பௌவிம', 'தேசாபிமானி', ஃபோர் வேட்' பத்திரிகைகளை நாங்க வீடு வீடா வித்தோம். அப்போ ஐ.தே.க. குண்டர்களால அடிவாங்கவும் நேரிட்டுது. ஆனால்..."



துறைமுகம் - அந்தநாள் கோலம்

"ஆனால் என்ன?" நான் அவாவுடன் கேட்டேன்.

"என்னைத் தொழிற்சங்கத்தில எந்தப் பதவியும் வகிக்கக் கூடாதென்று கட்சி கட்டுப்பாடு விதிச்சுது"

"ஏன்?" அதிர்ச்சியுடன் கேட்டேன் நான்.

அவர் பொறுமையாகச் சொன்னார், "நான் கட்சியில இருந்தாலும் தொழிற்சங்கம் சுதந்திரமாத்தான் இருந்துச்சு. ஆனா அவுங்க கட்சியால முழுநேர ஊழியர் ஒருவரைப் போட்டு தொழிற்சங்கத்தில மேலாதிக்கம் செலுத்த விளைஞ்சாங்க. அதுக்கு நான் உடன்படாததால கட்சி எனக்கு கட்டுப்பாடு விதித்துச்சு"

"பிறகு...?"

"ஆனால், தொழிலாளர்களெல்லாம் பெர்னாண்டோ தோழர்தான் வேணும் என்னு நின்னாங்க. அவுங்க வற்புறுத்தலால **'இலங்கைத் துறைமுக பொறியியல், இழுவைக் கப்பல் பல் ஊழியர் சங்கம்'** என்ற புதிய தொழிற்சங்கத்தை ஆரம்பிச்சோம். நான் பொதுச் செயலாளரா இயங்கினேன். நாங்க நடத்தின எல்லாப் போராட்டமும் வெற்றிபெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


ஏ. ஈ. குணசிங்க

ஆனால் ஒரேயொரு போராட்டத்தில மட்டும் நாங்க கலந்து கொள்ள மறுத்துவிட்டோம்"

நான் ஆவலுடன் "என்ன போராட்டம் அது" என்று கேட்டேன்.

முகத்தில் ஒரு ஏளனச் சிரிப்புடன் சொன்னார். "அது ஒரு காட்டிக்கொடுப்பு"

'காட்டிக் கொடுக்கவும் ஒரு போராட்டமா?' ஆச்சரியப்பட்டேன்.

"தம்பி", அவர் விளக்கினார். "டட்லி-செல்வா ஒப்பந்தத்துக்கு எதிரா சிறீலங்கா சுதந்திரக் கட்சியோட சேர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும் நடத்தின இனவாதப் போராட்டம் அது. நாங்கள் அதில பங்குபற்றல்ல. இடதுசாரிகளே இனவாதத்துக்கு எடுபட்டுப்போன வெக்கக்கேடு அது."

அவர் தொடர்ந்தார்.

"1982ல் என்னை அரசியல் பழிவாங்கலாக வேலையிலிருந்து கட்டாய ஓய்வு வழங்கி அனுப்பும்வரை எங்க தொழிற் சங்கம் இயங்கிச்சு. தொழிற்சங்க நடவடிக்கைகளால என்னோட 35 வருட சர்வீஸில கிடைக்க வேண்டிய பதவி உயர்வு எல்லாமே நிறுத்தப்பட்டுது. ஆனாலும் நான், தொழிலாளர்களுக்காகப் போராடி முடிஞ்சவரைக்கும் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தேன் எங்கிற மன நிறைவைத் தவிர வெறும் கையோடதான் வீட்டுக்குப் போனேன்."

அவருக்கு 5 பிள்ளைகள். இருவர் பெண்கள். இவரது ஏழ்மையிலும் இன்னுமொரு சோதனை. அவரது கடைசி மகன் இராணுவ வாகனமொன்றால் மோதப்பட்டு ஒரு கையையும் ஒரு காலையும் இழந்த நிலையில்...

ஏனைய தொழிலாளர்களுக்காக, மக்களுக்காக, கட்சிக்காக, கொள்கைக்காக தன் வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்த எத்தனையோ பேர்னாண்டோக்களின் நிலைமை இப்படித்தான்போலும். நான் சற்று வேதனை கலந்த கேள்வியொன்றை அவரிடம் கேட்டேன்.

"இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் இன்று செயலற்றுப் போயிருப்பதற்கு என்ன காரண


எஸ். ஏ. விக்கிரமசிங்க

மென்று நினைக்கிறீர்கள்?"

அவரிடமிருந்து பதில் உடனடியாக வந்தது. "எங்கட இடதுசாரித் தலைமைகளுடைய, காட்டிக் கொடுப்புகள், துரோகங்கள், சந்தர்ப்பவாதங்களால தொழிற்சங்க இயக்கத்துக்கு ஏற்பட்ட பலஹீனமும் நம்பிக்கையீனமும் தான் பிரதான காரணம். இதைவிட இடதுசாரி நாட்டு தூதரகங்களுடாக உதவிகளும் சலுகைகளும் வருமானங்களும் கிடைக்கத் தொடங்கியதும் உண்மையான அர்ப்பணிப்புடனான சேவை தளர்ந்து போயிட்டுது. அதோட கட்களுக்குள்ளே கொள்கை முரண்பாடுகள் தலைதுாக்கி பிளவுகள் தோன்றிச்சுது. இது தொழிற்சங்கங்களை உடையச் செய்துச்சு. இதேவேளை அரசாங்கம் கொண்டுவந்த சில சட்டங்களும் சலுகைகளும் தொழிலாளர் பலத்தைச் சிதைச்சுது."

"என்ன சட்டங்கள், சலுகைகள்?"

"1958ம் ஆண்டுவாக்கில, அரசாங்கம் ஒரு புதுத் தொழிற்சங்கச் சட்டத்தைக் கொண்டுவந்துச்சு. அதாவது, 40வீத அங்கத்துவர்கள் இருக்க வேண்டுமென்று முதலில இருந்த வரையறையை மாத்தி, ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பிக்க 7 பேர் இருந்தாலே போதுமுன்னு ஆக்கிச்சு. அதனால, எவரும் நினைச்சவொடன தொழிற்சங்கம் தொடங்கவும், பலமான சங்கங்கள் சிதையவும் வழியேற்பட்டுடுச்சு. அதைவிட தொழிலாளரோட சந்தாப் பணத்தை அவங்க சம்பளத்தில இருந்து சங்கத்துக்கு வெட்டிக் கொடுக்க அரசாங்கம் வழிசெய்து கொடுத்துச்சுது. அதனால தொழிற்சங்கத் தலைமைகள் சந்தாப் பணம்கேட்டு தொழிலாளிக்கிட்ட போகவேண்டின தேவையும் இல்லாம போயிடிச்சு. அப்போ, தொழிலாளியோட அன்னியோன்னிய


லெஸ்லி குணவர்தன

மும் பரிச்சயமும் தலைமைக்கு இல்லாம போயிடுச்சு. இதைவிட அரசாங்கம் தொழிற்சங்கத்துக்கு அலுவலகமும், முழுநேர ஊழியருக்கு சம்பளமும் கொடுக்க முன்வந்துச்சு. இது தலைமையை அதோகெதின்னு அலுவலகத்தோடேயே கட்டிப்போட்டுடுச்சு. சௌகரியங்கள் போராட்ட உணர்வை மழுங்கடிச்சிடிச்சுன்னா தொழிற்சங்கம் செத்த பாம்புதான்."

இடைவெளி விட்டுக்கொண்டு அவர் தொடர்ந்தார். "அதோட தொழிற்சங்கம் நிர்வாகத்தோட 5வருட உடன்பாடொன்னைச் செய்து கொள்ளுற வழிமுறை ஒன்னு பாலாதம்புவோட சி.எம்.யு. தொழிற்சங்கத்தால அறிமுகமாகிச்சுது. இப்படி உடன்பாடு செய்துகொண்டால் அந்த 5 வருடத்துக்கு எந்தப் போராட்டத்தையும் முன்னெடுக்க முடியாம, அப்பப்ப எழும்பிற தொழிலாளர் பிரச்சினைக்கு வழிகாண முடியாம, ஒரு பிடிப்பில்லாம தொழிற்சங்க இயக்கம் சோர்ந்து போயிடும்."

"தொழிலாளர் வர்க்கத்தை தலைமைகள் காட்டிக் கொடுத்துவிட்டனவென்று எப்படி உங்களால் கூற முடியும்?" என்று கேட்டேன்.

**"தொழிலாளர்களுக்காகப் போராடி முடிஞ்சவரைக்கும் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தேன் எங்கிற மன நிறைவைத் தவிர வெறும் கையோடதான் வீட்டுக்குப் போனேன்."**



"தம்பி, இந்த இடதுசாரி வரலாறு ஒரு நீண்ட கதை. சொல்லுறேன், கேளுங்க...."

அவர் சொன்ன அந்த நீண்ட கதையைச் சுருக்கித் தருவது எப்படி என்பதுதான் இப்போது என் திண்டாட்டம். இதோ, என்னால் முடிந்தவரை....

இலங்கையில் முதன் முதலில் தோன்றிய தொழிற்சங்கம், மலையாளத் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட அச்சுத் தொழிலாளர் சங்கம்.


பிலிப் குணவர்தன



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதன்பின்தான் ஏ.ஈ. குணசங்கவால் இலங்கைத் தொழிலாளர் கட்சியும் (Labour Party) இலங்கைத் தொழிலாளர் சங்கமென்ற தொழிற்சங்கமும் உருவாக்கப் பட்டன.

இதன்பின் என். எம். பெரேரா, பிலிப். குணவர்த்தன, பேணாட் சொய்சா, ஆகியோர் தலைமையில் 1935 காலகட்டத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி அமைக்கப்பட்டது. அதேவேளை லெனினிஸ போல்சுவிக் கட்சி என்ற பெயரில் இயங்கிவந்த கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்த்தன ஆகியோரும் இத்தருணத்தில் சமசமாஜக் கட்சியில் இணைந்தனர்.



**மலையக மக்கள் வாக்குரிமையை இழந்தபின் அவர்கள் மத்தியிலான வேலைத்திட்டங்களிலும் இடதுசாரிகளுக்கு அக்கறை குன்றிப் போய்விட்டது.**

லங்கா சமசமாஜக் கட்சியினர் இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஹிட்லரை ஆதரித்தார்கள். இது ஒரு தீர்க்கதரிசனமற்ற முடிவு. ஹிட்லர் சோவியத் யூனியனைத் தாக்கத் தொடங்கியதும் இந் நிலைப்பாடு குறித்து கட்சிக்குள் பிளவு தோன்றி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது. எஸ்.ஏ. விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், எம்.ஏ. மென்டிஸ் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இது உருவானது.

இதேவேளை 1946ல் வெள்ளையர் நிர்வாகத்துக்கெதிராக நடத்திய தொழிற்சங்கப் போராட்ட வெற்றியைத் தொடர்ந்து 1947ல் 35ரூபா சம்பள உயர்வு கோரிப் போராட்டமொன்று நடைபெற்றது. ஆனால் அதனை என்.எம். பெரேரா 10ரூபா சம்பள உயர்வாகக் குறைக்க உடன்பட்டதே இவர்களால் தொழிலாளர் போராட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சமரசம். இதனால் அத் தொழிலாளர் போராட்டம் பலஹீனமடைந்தது.

இதுபோல் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர் போராட்டங்களில் உறுதியான தலைமைத்துவம் இருக்கவில்லை.

எனினும் 1947ல் நடந்த தேர்தலில் இடதுசாரிகள் அதிகளவு பிரதிநிதித்துவத்துடன் பாராளுமன்றம் சென்றார்கள். ஆனால் ஐ.தே.க. அரசாங்கம் 1948ல் பிரஜா உரிமைச் சட்டத்தின் மூலம் மலையகத் தமிழர்களை வாக்குரிமை அற்றவர்களாக்கியதால் அவர்களால் ஆதரிக்கப்பட்ட இடதுசரிகளின் பலம் அடுத்த தேர்தலில் குறைந்தது. மலையக மக்கள் வாக்குரிமையை இழந்தபின் அவர்கள் மத்தியிலான வேலைத்திட்டங்களிலும் இடதுசாரிகளுக்கு அக்கறை குன்றிப் போய்விட்டது. இவர்களும் வர்க்கப் புரட்சியை மறந்து பாராளுமன்ற நலன்களுக்கமையவே இயங்கலானார்கள்.



பீற்றர் கெனமன்



பேனாட் சொய்சா


டி.எஸ்.சேனநாயக்கவின் மரணத்தின் பின் ஐ.தே.க. உடைந்து, பண்டாரநாயக்கா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (எஸ்.எல்.எப்.பி.) உருவாகியது. 1958ல் பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்ட பின் அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அரசாங்கம் அமைந்தது.



என்.எம். பெரேரா

அப்போது சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் ஒரு கூட்டணியை ஏற்படுத்தி அதன் கீழ் 21 அம்சப் போராட்டமொன்றை முன்னெடுத்தது. ஆனால் இடைநடுவில் இக் கூட்டணி ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு, லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் கூட்டரசாங்கம் அமைத்துக் கொண்டன. என்.எம்.பெரேரா நிதியமைச்சரானார். போராட்டம் கைவிடப்பட்டது. 10 ரூபா சம்பள உயர்வு என்ற ஒரு கோரிக்கைக்கு மட்டும் ஆக இரண்டரை ரூபா சம்பள உயர்வு வழங்கப் பட்டது.

இதையடுத்து 1965ல் நடந்த தேர்தலில் ஐ.தே.க. தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கம் அமைத்தது. அப்போது டட்லி - செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ் வேளையில்தான் கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் எஸ்.எல்.எப்.பி. யுடன் சேர்ந்து தமிழருக்கெதிரான வரலாற்றுத்



கொல்வின்.ஆர்.டி. சில்வா

துரோகமொன்றைச் செய்தார்கள். தமிழ் நிர்வாக மொழிச் சட்ட மூலத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள். டட்லி - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. (முன்னர் இதுபோல் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தமும் ஐ.தே.க. இனவாதிகளின் நிர்ப்பந்தத்தால் கிழித்தெறியப்பட்டது)

தொடர்ந்து 70ல் வந்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் கூட்டணியமைத்து ஆட்சிக்கு வந்தனர். அம் முக்கூட்டு அரசாங்கத்தில் இடதுசாரிகளுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் கிடைத்தன.

என்.எம். பெரேராவுக்கு நிதியமைச்சர் பதவியும் கொல்வின் ஆர்.டி.சில்வாவுக்கு நீதியமைச்சர் பதவியும் லெஸ்லி குணவர்தனவுக்கு விவசாய அமைச்சர் பதவியும் பீற்றர் கெனமனுக்கு வீடு, அபிவிருத்தி அமைச்சர் பதவியும் கிடைத்தன. ஆனால் இதனால் தொழிலாளர் வர்க்கம் எந்தவிதப் பலனையும் பெறவில்லை.

காட்டிக் கொடுப்புகளும் துரோகங்களும்தான் இங்கு நடந்தன.

நிதியமைச்சர் என்.எம்.பெரேரா, தோட்டத் தொழிலாளர்களின் மாதச் சம்பளக் கோரிக்கையை, தோட்டத் தொழிற்துறை ஒரு விவசாயத் துறை என்று கூறி நிராகரித்துவிட்டார். (ஆனால் அங்கு தோட்ட நிர்வாகத்தினருக்கு மட்டும் மாதச் சம்பளம் கிடைப்பதை நியாயப்படுத்த முடியாதவராகி விட்டார்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தொழிலாளர் தலைவர் ஒருவரே தொழிலாளர் முதுகில் குத்திய கசப்பான வரலாற்றுப் பதிவு அது.

நிதியமைச்சர் கொல்வின் ஆர். டி.சில்வா தமிழர்களுக்கெதிரான பாரிய வரலாற்றுத் துரோகமொன்றைச் செய்தார். 72ல் புதிய, குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய அவர், அதில் சிறுபாண்மையினரைப் பாதிக்கும் எந்தச் சட்டத்தையும் பாராளுமன்றத்தில் இயற்றலாகாதென முன்னைய சோல்பெரி அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்த சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பான 25ஆவது சரத்தை ரத்துச் செய்தார். இதனால் இக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை தமிழர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் எதிர்த்தனர். தமிழ் பிரதேசம் எங்கும் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது. இன்றைய இனப்பிரச்சினையின் மோசமான விளைவுகளுக்கு அடித்தளமிட்ட காரணிகளில் இதுவும் ஒன்று.

இவ்வாறான துரோகங்களால் இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களிடையேயும் மலையக மக்களிடையேயும் அவநம்பிக்கையைப் பெற்றது. அத்தோடு தொழிலாள வர்க்கத்தின் உந்து சக்தியையும் இழக்க வைத்தது.


பாலதம்பு

அதுமட்டுமன்றி இடதுசாரிக் கட்சிகள் மேலும் பிளவுபட்டன.

கம்யூனிஸ்ட் கட்சி உடைந்து சண்முகதாசன் தலைமையில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது. பின்னர் அதுவும் பல உடைவுகளுக்குள்ளாகி பிரேமலால் குமாரசூரிய தலைமையில் ஒரு பிரிவும், ரோகண விஜயவீரவின் தலைமையில் ஜே.வி.பி.யும் இவற்றைவிட மாக்ஸிச லெனினிசக் கட்சி, புதிய ஜனநாயகக் கட்சி ஆகியவையும் தோன்றின. லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து உடைந்து விக்கிரமபாகு தலைமையில் நவசமசமாஜக் கட்சி உருவானது. இவ்வாறான உடைவுகளும் தொழிலாளர் வர்க்கத்தைக் கூறுபோட்டன.

'ரஷ்யாவில் மழைபெய்தால் இங்கே குடைபிடிப்பவர்கள்' என்ற


சண்முகதாசன்

நையாண்டிக்குப் பொருந்தக்கூடியவாறே, இவ் இடதுசாரித் தலைமைகள் எமது நாட்டு தொழிலாளர் வர்க்கத்தின், அரசியலின், முரண்பாடுகளின் யதார்த்த நிலைமைக்கமைய அல்லாமல் தாம் பின்பற்றிய தலைமை நாடுகளுக்கமையவே தமது கொள்


ரோகண விஜயவீர

கைகளையும் நடவடிக்கைகளையும் அமைத்துக் கொண்டார்கள். அந் நாடுகளின் நட்பு நாடுகளுக்கும் பகைமை நாடுகளுக்கும் ஏற்ப தமது உறவையும் பகைமையையும் நிர்ணயித்தார்கள். இதனால் யதார்த்தத்தை விடுத்த செயற்கை மாதிரிகளை இங்கே நிலைநாட்ட முனைந்து தோல்வியடைந்தார்கள்.

**இவ்வாறான துரோகங்களால் இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களிடையேயும் மலையக மக்களிடையேயும் அவநம்பிக்கையைப் பெற்றது.**




இந்த நீண்ட கதையை ஒருவாறு அம் மூத்த தொழிற்சங்கவாதி கூறி முடித்தபோது நான் இறுதியாகக் கேட்ட கேள்வி இது.

“அப்படியானால் தொழிலாளர் இயக்கத்தை மீண்டும் பலப்படுத்த என்ன செய்ய வேண்டுமென்று கூறுகிறீர்கள்?”

அவர் வேதனை கலந்த சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டுச் சொன்னார். “கடந்த காலச் சந்தர்ப்பவாதப் போக்குகளையும் காட்டிக் கொடுப்புகளையும் சுயவிமர்சனம் செய்து, சரியான நிலைப்பாடுகளை வகுத்துக் கொண்டு தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தின் அவசியத்தைப் புரிய வைத்தால் இன்றைய அறிவுவாய்ந்த தொழிலாளர் வர்க்கத்தால் நாளடைவில் தொழிலாளர் இயக்கத்தைக் கட்டி வளர்க்க முடியும்.”

ஒரு வரலாற்றையே தேக்கி வைத்திருந்த அந்த முதிர்ந்த உருவம் விடைபெற்றுக்கொண்டு பஸ்ஸில் ஏறி நெரிசல் மிகுந்த சாதாரண மனிதக் கூட்டத்துக்குள் மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான். ●






www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மே தினம்

ஒரு வருடத்தில் ஒரே ஒரு தினம்தான் மே தினம் என அழைக்கப்படுகிறது. தொழிலாளர் தினமான இத்தினத்தில் உலகெங்கும் தொழிலாளர்கள் வீதியில் இறங்கி கோஷம் எழுப்பும் நிகழ்ச்சி வருடா வருடம் நடக்கின்றது.

ஆனால் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்பு அல்லது 50 வருடங்களுக்கு முன்பு



நினைவுகூரப்பட்ட மேதினங்களில் இருந்தது போல் ஓர் எழுச்சி நிலைமையை இப்போதெல்லாம் காண முடியவில்லை.

> இலங்கையில் இன்று மே தினம் ஏதோ சம்பிர-தாயம் போல் நினைவுகூரப் படுகிறது.



உலகின் நன்கு பிரபலமான மதங்களுக்கு இருப்பது போலவே ஒரு வரலாற்று ரீதியான கதை *(Historical Story)* மே தினத்திற்கும் உண்டு. வருடா வருடம் மறக்காமல் அத்தினம் கொண்டாடப்படுவது அவ்வரலாற்றுப் பின்னணியின் காரணமாகத்தான்.

*1886*ஆம் ஆண்டு மே *1*ஆம் திகதி, தொழிலாளவர்க்கத்துக்கே இயமன் எனக் கருதப்படுகின்ற அமெரிக்க நாட்டின் சிக்காகோ நகரில் **ஹெ மார்க்கட் சதுக்கத்தில்** ஒன்றுகூடிய அமெரிக்கத் தொழிலாளர்கள் *8* மணி நேர வேலை செய்வதற்கான உரிமையைக் கோரி நின்றனர்.

அத்தொழிலாளர் கூட்டத்தைக் கலைப்பதற்காகச் சென்ற பொலீசார் வைத்த துப்பாக்கி வேட்டுக்களில் மரித்து வீழ்ந்த தொழிலாளர்களின் குருதியினால் தான் மே தினத்துக்கு சிவப்பு நிறம் சேர்ந்து கொண்டது.

குறிப்பான வரலாற்றுச் சம்பவம் இதுவாக இருந்தாலும் அக்கால கட்டத்தில் ஐரோப்பா முழுவதிலும் வாழ்ந்த தொழிலாளர்களின் நிலைமை இதுபோல் மோசமாகத்தான் இருந்தது. இங்கிலாந்தின் நிலைமை பற்றி **ஏங்கெல்ஸ்** எனும் சமூக விஞ்ஞானி தொழிலாள வர்க்க தத்துவத்தை படைத்த **கார்ல் மார்க்ஸ்’க்கு** எழுதிய கடிதத்தின்படி இங்கிலாந்தில் வாழ்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் தந்தையின் முகத்தைக் காண்பதே ஒரு அரிதான சம்பவமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒன்றில் தந்தை சுகவீனமுற்று வீட்டில் இருந்தால் அல்லது தொழிலை இழந்து வீட்டிற்கு வந்தால் அல்லது மரணித்தால்தான் பிள்ளைகள் தந்தையின் முகத்தைக் காணக்கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதிகாலை ஐந்து மணிக்குப் போகும் தந்தை *16*மணி நேரம் உழைத்துவிட்டு வந்தார்கள். இதற்கு ‘ஓவர்டைம்’ வழங்கப்படுவதில்லை. அத்தொழிலாளர்கள் *16*மணி நேரம் உழைத்தால் தான் தன் குழந்தை குட்டிகளுக்கு ஏதோ கால் வயிற்றுக்காவது கஞ்சி ஊற்ற முடியுமென்ற நிலைமை.

உடல் களைக்க உழைத்து விட்டு தள்ளாடித் தடுமாறி வீடு வந்து சேர்ந்து குகை போன்ற இருளடைந்து கிடக்கும் தம் வசிப்பிடத்திற்குள் ஏதோ மிருகங்கள் போல் முடங்கி உறங்கிப் போய்விடுவதே இவர்களின் வாழ்க்கை நடைமுறையாகி இருந்தது.

இவர்களின் இறப்புக்கள் பெரும்பாலும் காச நோய் அல்லது வாந்திபேதி என்பவற்றாலேயே நிகழ்ந்தன. உண்மை யாதெனில் இன்று சொர்க்கமாக வர்ணிக்கப்படும் ஐரோப்பாவானது அக்காலத்தில் தொழிலாளர்களுக்கு கொடிய நரகமாகவே இருந்தது.

*1886* மே *1*ஆம் திகதி சிக்காகோவில் ஆரம்பிக்கப்பட்ட அவ்வெழுச்சி *1888*ல் உலகளாவியதாகப் பரவியது. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளவும் பட்டது. இன்று *2000*ஆம் ஆண்டில் அது *114*வது தடவையாக நினைவு கூரவும் படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கையில் இன்று மே தினம் ஏதோ சம்பிரதாயம் போல் நினைவு கூரப்படுகிறது. மே தினத்தைப் பற்றிய கருத்து **ஏ.ஈ. குணசிங்க** அவர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அது *1935*களிலேயே இலங்கை சம சமாஜக் கட்சியினால் *(L.S.S.P)* அரசியல் உணர்வோடு நினைவு கூரப்பட்டது எனலாம்.

இன்று முதலாளித்துவ கட்சிகள் கூட இம் மேதினத்தை கொண்டாடுகின்றன.

ஒரு காலத்தில் ஆட்சியாளர்களின் அத்திவாரத்தை உலுக்கிய மே ஊர்வலங்கள் என்பது இன்று ஆட்சியாளர்களும் காலாட்டியபடி அமர்ந்து பார்த்து ரசிக்கின்ற கேளிக்கை நிகழ்வாகி விட்டதுதான் வேதனை.

# இன்னும் எஞ்சியுள்ள..

**- கௌரி மனோகரன் -**



மெதுவாகத் தன் தலையைத் திருப்பி ஒரு பார்வை. பதிலேதுமில்லை. தாவீதின் தலை மீண்டும் குனிந்து கொண்டது.

"கேட்பதற்கு பதில் சொல். நான் பொலீஸ்காரன்."

"நான் ஏதும் செய்யவில்லை, குற்றமானதாக."

"பரவாயில்லை. நீ இங்கு இருக்கக் கூடாது. இது உனக்குத் தெரியுமா?"

"ஏன்? நான் இந்த நாட்டுப் பிரஜை. பிரஜாவுரிமை அற்றவனல்ல."

"அதுசரி. நீ எங்காவது போகலாம். இந்த வட்டாரத்தைத் தவிர."

"ஏன் இந்த வட்டாரத்தில் வாழ எனக்கு உரிமையில்லையா?"

**"நீ உன் உரிமையைக் கோருவது சரி. அது மற்றவர்களின் உரிமையை மறுக்கும் தொனியில் இருக்கக்கூடாது. அதுதான் பிழை."**

"நான் அப்படி என்ன செய்துவிட்டேன். என்னை நிம்மதியாக விடு."

அந்த சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிக்காய் பரிஸ் பட்டணம் பரபரப்பாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது. அறுபது வருட இடைவெளிக்குப் பின் மீண்டுமொரு முறை தொழிலாளிகளும், அறிவாளிகளும் குவிந்து கிடக்கும் உலகின் குப்பைமேடான இப்பட்டணத்தை ஒழுங்குபடுத்தியெடுப்பதற்கு பிரெஞ்சின் அரச யந்திரம். பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியிருந்தது. அல்ஜீரிய இஸ்லாமியத் தீவிரவாதிகளிடமிருந்து எந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஏற்பட்டு விடக்கூடாதென்பது தொடக்கம் சாலைகளை சுத்தம் செய்து முடிப்பது வரை கடலளவு கவலைகள் அதற்கு. உதைபந்தாட்டப் போட்டி நடப்பதற்கென்றே எண்பதாயிரம் இருக்கைகளைக் கொண்ட அந்தப் பிரமாண்டமான மைதான அரங்கு கட்டி முடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பட்டணத்தின் வடக்கு நோக்கிய புறநகர்ப் பகுதியான சென்.டெனிஸ் பிரதேசத்தில்.

படையினரின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள்...

பேருந்துகளின் நிறந்தீட்டல்கள்...

போட்டி முடிவுகளை உடனுக்குடன் அறிவிக்க போக்குவரத்துக் கம்பனியால் அமைக்கப்படும் தற்காலிக மத்திய நிலையங்கள்....

ஆங்காங்கே அநேகமான ஐரோப்பிய மொழிகளில் அறிவிப்புப் பலகைகள்....

கொக்காகோலாவின் விளம்பர உத்தியாளர்களின் கெட்டித்தனங்கள்....

உலகில் எல்லாமே இந்தக் கிண்ணந்தான் என்ற மாயையில் கட்டுண்ட மக்களின் விவாதங்கள் வீதிவீதியாய்.... வீடுவரை.

பட்டணத்தின் இத்தனை நிகழ்வுகளுக்கும் பதினெட்டாம் வட்டாரமே மகுடம். காரணம் அதுவே சென்.டெனிஸ் செல்வதற்கான அண்மிய பகுதி. அதே வேளை இங்குதான் வெளிநாட்டார் எனச் சொல்லப்படுவோரின் பெரும்பான்மைக் குடியிருப்புகள்.

கள்வர், காடையர் எனப்படுவோரின் உல்லாச உலாத்தல்கள்.

வீதித் தொழில் செய்யும் விபச்சாரிகள், போதைப் பொருளினை புகலிடமாக்கியோர், வதிவிடமற்ற வைன்கேசுகள் எனப்படுவோர்களின் எஞ்சியுள்ள வாழ்க்கையின் சில நாட்கள்.

சமூகத்தின் எல்லைகள் எஞ்சியிருந்த இந்தக் கூட்டத்தினரின் தஞ்சமாகிப் போன வீதிகளின் சந்து பொந்துகளும், சுரங்க ரயில்களின் சந்தடி குறைந்த மூலை முடுக்கு வழி நடைபாதைகளும் பொலீசாரின் கழுகுப் பார்வைக்குள். இவர்களையெல்லாம் அந்நியச் செலாவணியை அள்ளிக் கொண்டு வரும் வெளிநாட்டாருக்கு மறைப்பதெப்படி. எங்கே எப்படி இவர்களை அப்புறப்படுத்த முடியும்!

தாவீது இவன் பிரஞ்சு காலனித்துவத்தில் இன்னும் எஞ்சியுள்ள 'மாட்டினிக்' தீவைச் சேர்ந்தவன். இரண்டாம் உலகப் போரில் குடும்பங்களை இழந்து பிரெஞ்சு நாட்டிற்காய்ப் போராடியவன். தகுந்த 'கடதாசி' அத்தாட்சிகளின்றி தன் வாழ்க்கையின் தன் தேசத்திற்கான அர்ப்பணிப்பை நிரூபிக்க வழியின்றி இன்றோ நாளையோவென்று தன் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டு சுரங்க வீதிகளில் வாழ்பவன், வைன் போத்தல் சகிதம்.

"இங்கு நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

மெதுவாக எழுந்து நடக்க முயன்ற தாவீது கிழவனின் அந்த நீண்ட காற்சட்டை பின்புறம் முழுக்க நனைந்திருந்தது. அவனது சிறுநீரால் மட்டுமல்ல மலத்தாலும் ஒரே துர் நெடி. மூக்கைப் பொத்திக்கொண்டான் பொலீஸ்காரன்.

"இதோபார்! இந்த இடத்தில் மலசலம் கழித்திருக்கிறாய். இது மற்றவர்களுக்கு தொந்தரவைக் கொடுப்பதாகும் என்பது தெரியாதா?"

"அப்படியானால் நான் எங்கு அதைச் செய்வது. எனக்கென்று தான் வீடு இல்லையே. உனக்கு அது தெரியாதா?"




**காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே**
**காலமிதைத் தவற விட்டால் கண்ணுறக்கமில்லை**

www.tamilarangam.net



"எனக்குத் தெரிகிறது. ஆனாலும் பொது மலசலகூடங்களுக்கு பாரிசில் குறைவில்லையே. மதுபான சாலைகளுக்குள் கூட நீ அதைச் செய்யலாம்."

"மதுபான சாலைகளுக்குள் என்னை அனுமதிக்கமாட்டார்களே! பொது மலசலகூடங்கள் பணமின்றித் திறந்துகொள்ளாதே."

"அதுவொன்றும் பெரிய தொகையல்லவே. ஒன்றோ இரண்டோ பிராங்குகள்தான்"

"அது உனக்கு பெரிதாயில்லாமலிருக்கலாம். ஆனால் எனக்கு?"

"நீ அதிகம் கதைக்கிறாய்"

"அது ஒன்றும் குற்றமில்லையே. நாங்கள் இன்னும் பிரெஞ்சு நாட்டில்தானே உள்ளோம்"

"இருக்கலாம். ஆனாலும் பரிஸ் பட்டணத்துச் சாலைகளில் மலசலம் கழிப்பது சட்டப்படி குற்றமாக்கப்பட்டுள்ளது"

"சட்டம் யாருக்காக உண்டாக்கப்பட்டது. பணம் உள்ளவர்களுக்காக பணமுள்ளவர்களால். அது தெரியுமா உனக்கு. சட்டம் எங்களை கவனத்தில் எடுக்கவில்லையே. இப்பட்டணத்துச் செல்வச் சீமாட்டிகளின் நாய், பூனைகளெல்லாம் காலையும் மாலையும் சாலைகளை என்னபாடுபடுத்துகின்றன. அதுவெலலாம் மற்றவர்களுக்குத் தொந்தரவில்லையா என்ன?"

"அவற்றையெல்லாம் துப்புரவு செய்ய நகரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது."

"அப்படியானால் எங்கள் மலசலங்களையும் கழுவ...."

ஜீப் வண்டி அண்மையில் உறுமிக்கொண்டு வந்து நின்றது. நான்கு பொலீஸ்காரர்கள் கைவிலங்குகளுடன் அதிலிருந்து திமுதிமுவென்று குதித்து வந்தனர். ஒரு பிடி உமிப்பாரம் கூட தூக்க நாதியற்ற இந்த தாவீதை நோக்கி...

- நன்றி: எக்ஸில்-2.




டாண், டாண், டாண், டாண் நல்லூர் மணி காதில் ஒலித்தது. என்ன இது? மணியும் நாலாயிட்டுது சசியைக் காணவில்லை? ம்... அதோ வருகிறான். தகரப் பேணியை கையில் பிடித்தபடி... அச்சிறிய தகரப் பேணியால் எனக்கு நீர் ஊற்றுவான். நிதமும் நடப்பது தான். இச்சிறுவன் தன் அன்பு நீர் ஊற்றும்போது எனக்கு பெருமழையில் நனைந்த சிலிர்ப்புத் தோன்றும்.

சசியின் தாய் என்னை வளர்த்து ஆளாக்கினாள். அவள் எனக்கு நீர் ஊற்றும்போது அவளது தாய் சொல்லுவாள், "என்னடி உந்த மரத்தை வித்துத்தான் உனக்குத் தாலி செய்ய வேணுமோ? பேசாமல் வாளியை வைச்சிட்டுப் படியன்"

ஆனால் அவள் அப்படி நினைக்கவில்லை. எனக்கு அதிசயமாய் இருக்கும். யாராவது இந்த வயதில் தியேட்டருக்கும், ரியூசனுக்கும் போறதை விட்டுட்டு ஒரு மரத்தோடை நிண்டு அலட்டுவாளா?

ஆனால் அவளுக்குத் திருமணமாகிப் பிள்ளை பிறந்த பிறகும் கூட எனக்கு நீர் ஊற்றுவாள். என்னால் அவள் குடும்பத்தில் கூட சண்டை நடந்தது. பின்னேரம் இவள் சசியை இடுப்பில் வைத்துக்கொண்டு நீர் ஊற்றக் குனியும்போது இருவரின் மண்டையும் சிறிது மோதியதில் சசி அழ ஆரம்பித்தான். தகப்பன் பார்த்துக் கொண்டிருந்தவன் அவளுக்கு அடிக்க வாளியை ஓங்கினான். எனக்கு கைகள் இருந்தனதான்... தடுத்திருக்க வேண்டும். இயலாதவனாய் நின்றேன். இதற்குத்தான் வள்ளுவனும் என்னை மக்கட் பண்பில்லாதவருடன் ஒப்பிட்டானோ தெரியவில்லை. நான் மிகுந்த ஆற்றாமை அடைந்தேன். என்னால் ஒருத்திக்கு அடி விழுகிறது. நினைத்தபொழுது துக்கம் பொங்கியது. ஆனால் அந்த விசரி எனக்கு கீழ் நின்று அழுகிறாள். என்ன சொல்லித் தேற்றுவேன் நான்? அந்த அன்புச் சுரங்கம் ஒரு நாள் காலாவதியானது. சசி பிறந்தான். அவள் இறந்தாள். அந்த துன்பத்தைச் சுமந்து சுமந்து நான் மரமானேன்.

சசியிடம் அவனது பாட்டி என் வரலாற்றைச் சொல்லியிருப்பாள் போலிருக்கிறது. சசி வந்து என்னை உற்றுப் பார்ப்பான். என் கீழ் இருந்து அடிவானில் மறையும் சூரியனையே கண்கொட்டாமல் பார்ப்பான். கன்னங்கள் இரண்டையும் கண்ணீர் நனைக்கும். அப்பொழுதுகளில் என் மன இறுக்கத்தை குறைக்க காற்றில் ஆடுவேன்.

சசி பள்ளியில் நடப்பதையெல்லாம் என்னிடம் கூறுவான். ஆசிரியர் அடிப்பதைக் கூறும் போது அவனது உதடு அழுகையால் துடிக்கும். அவன் அழுகை என் இதயத்தைப் பிழியும். எனக்கு மனம் இருக்கிறது. உள்ளுக்குள் பொருமி அழுகிறேனே... மனம்தானே?

சசியின் தந்தைக்கு குப்பை கூட்டுவதில் சரியான சோம்பல். முணுமுணுப்பான். இதைச் சாட்டாக கொண்டு என்னைத் தறிக்க யோசித்தான். என் கீழ் இருந்து பேப்பரில் தன் கடன்களையெல்லாம் கூட்டிக் கழித்தான். கையில் இரண்டாயிரம் தேறுமென சொல்லிக் கொண்டான். நான் என்னை வளர்த்த எசமானிக்கு என் உடலைத் தியாகம் செய்ய முன்வந்தேன். ஒரு தாயின் கணவனுக்கு இந்த வகையில் கடன் கழிப்பது என் கடமையல்லவா?

நான் எதிர்பார்த்தது ஒன்று தவிர மற்றவை முறையாக நிறைவேறின. நான் நிராயுதபாணியானேன். நான் அடியோடு தறிக்கப்பட்டேன். சசியின் கூக்குரல் என் காதைக் கிழிக்கச் செய்தது. தந்தையின் பிடியில் இருந்து தப்ப முடியாமல் அவரைத் திருப்பி தாக்க முற்பட்டான் சசி. நான் மங்கிப் போய் ஒளி இழந்தேன்.

இப்போதும் நான் மண்ணிற்குள் உயிர்ப்புடன் இருந்தேன். என் மீது தண்ணீரும், கண்ணீரும் விடுபவனை நான் மனக்கண்ணால் கண்டேன். என் புதுத்தளிர்கள் அவனை அன்புடன் தடவிக்கொடுத்தன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சரோஜா என்றொரு ரோஜா

தமிழ் மட்டுமே தெரிந்த, திரைப்படத் துறை சம்பந்தமாக எந்த ஒரு விசேட புலமையும் அற்ற நான் ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் 'சரோஜா' என்ற ஒரு சிங்களத் திரைப்படத்தைப் பார்க்க வாய்ப்புக் கிட்டியது.

எத்தனையோ சிங்களப் படங்கள் வந்து போயுள்ளன. இந்தப் படம் எமது நாட்டின் இன்றைய எரியும் பிரச்சினையான தமிழ் - சிங்கள இன முரண்பாட்டை (யுத்தத்தை) மையமாகக் கொண்டதனாலும், அக்காரணங்களுக்காகவே சர்வதேச சினிமா ரசனையாளர்களின் கவனத்தை ஈர்த்து பங்களாதேஷிலும் அமெரிக்காவிலும் நடந்த சர்வதேசத் திரைப்பட விழாக்களில் சிறப்பு பரிசுகளை வென்றதனாலும் இப்படத்தின் பால் சாதாரண பார்வையாளனை ஆர்வம் கொள்ளத் தூண்டுகிறது எனலாம்.

படக் கதையின் சாராம்சம் இதுதான்:

வடமத்திய மாகாண (அனுராதபுர மாவட்டத்தி)த்தின் எல்லைப்புறக் கிராமம் ஒன்றில் இக்கதை நிகழ்கிறது. எல்லைப்புறத் தமிழ்க் கிராமம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் தீவிர நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கை அரச ராணுவம் நடவடிக்கையில் இறங்குகின்றது.

தனது மகனை புலிகளின் கட்டாய இராணுவச் சேர்ப்பில் இழந்து பின்னர் அவ்வாறே தானும் சேர்க்கப்பட்ட ஒரு தமிழ் குடும்பஸ்தன், இயக்கத்தின் கட்டளையை நிறைவேற்றாத குற்றத்திற்காக மனைவியையும் சுட்ட பின்னர், தனது 7 வயது சரோஜா என்ற பெண் குழந்தையுடன் காட்டுக்குள் சூட்டுக் காயத்துடன் மறைந்து திரிகின்றான். எல்லையில் உள்ள ஆற்றில் குளித்து விளையாடும் சிங்களச் சிறுமிகளில் ஒருத்தியான 8 வயது வருணியின் தொடர்பு பட்டினியால் வாடும் சரோஜாவுக்குக் கிடைக்கிறது.

முதலில் களவாக சரோஜாவுக்கு உணவு வழங்கிய வருணி பின்னர் தாயின் எதிர்ப்பையும் மீறி தந்தையான ஆசிரியர் புஞ்சிபண்டாவின் அனுசரணையோடு சரோஜாவைத் தன் வீட்டுக்கு அழைத்து வருகிறாள். அதனைத் தொடர்ந்து காலில் காயத்துடன் கஷ்டப்படும் சரோஜாவின் தந்தை சுந்தரத்தையும் (மேர்வின் மகேசன்) வருணியின் வீட்டுக்கு அழைத்து வருகின்றனர்.

**சர்வதேச சினிமா ரசனையாளர்களின் கவனத்தை ஈர்த்து பங்களாதேஷிலும் அமெரிக்காவிலும் நடந்த சர்வதேசத் திரைப்பட விழாக்களில் சிறப்பு பரிசுகளை வென்றதனாலும் இப்படத்தின் பால் சாதாரண பார்வையாளனை ஆர்வம் கொள்ளத் தூண்டுகிறது**







www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிங்களப் பெயர் ஒன்றை வைத்துக் கொண்டு, புஞ்சிபண்டா குடும்பத்தின் உதவியுடன் வைத்தியசாலையில் சுந்தரம் சிகிச்சை பெறுகின்றான். ஆனால் அவனது கையில் தமிழில் பச்சை குத்தியிருந்ததை அவதானித்த தாதி மூலம் விஷயம் அம்பலமாகி பொலீசாரால் கைது செய்யப்படுகின்றான். சந்தேகத்திற்கிடமான ஒரு தமிழனை சிங்களக் கிராமத்தில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆசிரியர் புஞ்சிபண்டாவும் கைது செய்யப்பட்டு சுந்தரம் இருந்த அதே ரிமாண்ட் கூட்டில் அடைக்கப்படுகின்றார். ஆனால் குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாததனால் இருவரும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படுகினறனர்.

குற்றமற்றவர்கள் என நீதிமன்றம் விடுவித்தாலும் ஊர் மக்கள் புஞ்சிபண்டா குடும்பத்தை சிங்கள இனத்தின் துரோகியாகப் பார்த்து அவர்களைப் புறக்கணிக்கின்றனர். ஊரிலுள்ள ஒரே கடைக்காரன் அவருக்கு பத்திரிகை விற்கக் கூட மறுக்கின்றான்.

ஏற்கனவே மாணவன் ஒருவன் துட்ட கெமுனு பற்றி எழுதிய தமிழ்த் துவேஷ மனப்பான்மை கொண்ட கட்டுரையை விமர்சித்ததன் மூலம் துட்ட கெமுனுவையே கேள்விக்குள்ளாக்கிய ஆசிரியர் புஞ்சிபண்டா, சுந்தரத்தை மறைத்து வைத்திருந்ததன் மூலம் மேலும் ஊர் மக்களின் கடுமையான கோபத்திற்கும் வெறுப்புக்கும் ஆளாகின்றார்.

தமது பிள்ளைகளை புஞ்சிபண்டா இருக்கும்வரை பாடசாலைக்கு அனுப்ப ஊர் மக்கள் மறுக்கின்றனர். இதனால் பாடசாலை நிர்வாகம் அவரை வடக்கிலுள்ள மன்னாருக்கு இடம்மாற்றுகின்றது.

விடைபெறுவதற்கு முன் பாடசாலையில் பெற்றோர் மாணவருடன் நடந்த கூட்டத்தில் புஞ்சிபண்டா உரையாற்றுகின்றார். இன ஐக்கியத்தை வலியுறுத்தி உணர்வுபூர்வமாக அவர் நிகழ்த்தும் உரை பொது மக்களின் உள்ளத்தைத் தொடுகின்றது. அத்துடன் சுந்தரத்தை மேடைக்கு அழைத்து தமது சகோரத்துவ உணர்வையும் வெளிப்படுத்துகின்றார்.

ஏற்கனவே சுந்தரத்தின் இருப்பை முஸ்லிம் வேடமிட்ட தமது உளவாளி மூலம் அறிந்துகொண்ட இயக்க உறுப்பினர்கள் இருவர் சுந்தரத்தை மேடையில் வைத்தே சுட்டுக் கொல்கின்றனர்.

தாயையும் தந்தையையும் இழந்துவிட்ட சரோஜாவை தமது இன்னொரு மகளாக ஏற்றுக்கொண்டு புஞ்சிபண்டா குடும்பம் தமது வீட்டுப் பொருட்களுடன் மன்னாருக்கு புறப்பட்டுச் செல்கின்றனர். மனம் மாறிய ஊர் மக்கள் கலங்கிய கண்களுடன் அவர்களை வழி அனுப்பி வைக்கின்றனர். படம் முடிகின்றது.



**இரு சிறுமிகளினதும் நடிப்பு, உதாரணம் காட்ட முடியாத அளவுக்கு இயல்பாக இருப்பதுடன் பல கட்டங்களில் மனதை நெருடி கண்ணீர் சிந்த வைக்கின்றது.**

**தயாரிப்பாளர்களின் துணிகர முயற்சி என்பதற்கு அப்பால், இதற்கான சாதாரண சிங்கள மக்களின் (பார்வையாளர்களின்) பிரதிபலிப்பு மிகவும் அக்கறைக்குரியதாகவும் சாதகமானதாகவும் இருந்ததை திரை அரங்குகளில் காண முடிந்தது.**

வழமையான தென்னிந்திய மசாலா தமிழ்ப் படக் குப்பைகளுடன் ஒப்பிடுகையில் இப்படம் ஒரு சிறந்த தயாரிப்பு என்றே கூற வேண்டும். கோடிக்கணக்கான பணச் செலவோ, அரைகுறை ஆடைகளுடனான ஆட்டங்களோ, விரசம் சொட்டும் பாடல்களோ, பலரை ஒரே நேரத்தில் அடித்துச் சாய்க்கும் கதாநாயகனோ இதில் இல்லை. படத்தின் பாத்திரங்கள் மிகவும் இயல்பாக வளர்க்கப்பட்டுள்ளனர். பகைப் புலம் மிகவும் அருமையாக வடமத்திய மாகாண குடியேற்றத் திட்டக் கிராமங்களின் சாயலை அப்படியே அப்பி வைத்துள்ளது போல் அமைந்துள்ளது.

இப் படத்தை கதாநாயகன், கதாநாயகி, வில்லன், நகைச்சுவைப் பாத்திரம் என்ற புளித்துப்போன தமிழ் சினிமா அடிப்படையில் இல்லாமல் சரோஜா, வருணி என்ற இரு தமிழ் - சிங்கள சிறுமிகள் ஊடாகவே! நகர்த்திச் செல்லும் பாங்கு உண்மையில் சிங்கள, வங்காள அல்லது மலையாள படங்களுக்கே உரியது. தமிழ்ப் படங்களில் இத்தகைய பாங்கை எள்ளளவும் காணமுடியாது. இரு சிறுமிகளினதும் நடிப்பு, உதாரணம் காட்ட முடியாத அளவுக்கு இயல்பாக இருப்பதுடன் பல கட்டங்களில் மனதை நெருடி கண்ணீர் சிந்த வைக்கின்றது.

திரைப்படத்தில் சில மிகைக் காட்சிகள் இருக்கின்ற போதும், பொதுவாக படத்தின் நோக்கத்தில் வெற்றியடைந்துள்ளது என்றே கூற வேண்டும். குறிப்பாக சிங்களப் பார்வையாளர்களை நோக்கி எடுக்கப்பட்ட இப்படம் (அதுவும் சரோஜா என்ற தமிழ்ப் பெயர் தலைப்புடன்) ஒரு துணிகரமான முயற்சி என்றே கூற வேண்டும்.

தயாரிப்பாளர்களின் துணிகர முயற்சி என்பதற்கு அப்பால், இதற்கான சாதாரண சிங்கள மக்களின் (பார்வையாளர்களின்) பிரதிபலிப்பு மிகவும் அக்கறைக்குரியதாகவும் சாதகமானதாகவும் இருந்ததை திரை அரங்குகளில் காண முடிந்தது.

அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகும் எல்லைப்புற கிராம சிங்கள மக்களின் கோர அனுபவங்கள் உணர்வுகளுக்கு மத்தியில் துணிகரமாகச் சொல்ல வேண்டியதை இப் படம் சொல்கின்றது. அதுவே இப்படத்தின் பாரிய வெற்றி.

இந்த ஒரு கையைச் சந்தித்து ஓசை எழுப்ப, இன்னொரு கை தமிழ்ப் பகுதியிலிருந்து இதே அர்த்தத்தில் எப்போது நீட்டப்படப் போகின்றது என்பதே மானிட நேயமுள்ளவர்களின் எதிர்பார்ப்பாகும்.

**- சண்முகம் ஸ்ரீவித்யா**



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓ! இயேசுவே...

"ஒருவன் உனக்கு ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உன் மறு கன்னத்தையும் காட்டு" என தன் சீடர்களுக்கு அறிவுரை கூறி வழிகாட்டியவர் யேசுநாதர்.

தன்னைச் சிலுவையில் அறைவதற்காகக் கைதுசெய்ய வந்த காவலர் ஒருவரின் காதை அவரது ஒரு சீடர் வாள் கொண்டு வெட்ட, தன் சீடரைத் தடுத்து வெட்டுண்ட காதை சொஸ்தப்படுத்தியவர் யேசு.

அமைதியையும் சமாதானத்தையும் பொறுமையையும் இவ் உலக மக்களுக்காகப் போதித்த யேசுபிரான் கூட இச் சமூகத்தின் சில செயல்களைக் கண்டு ஆத்திரமடைந்ததுண்டு. இறை வழிபாட்டுக்காக கட்டப்பட்ட ஆலயத்தை, பணம் தேடும் வியாபாரகூடமாக மாற்றியதைக் கண்டு ஆத்திரமுற்று வியாபாரம் செய்தவர்களை அடித்துத் துரத்திப் பின்னர் அமைதியடைந்தவர் யேசு.



பெரிய வெள்ளி தினத்தில் முள் பதித்த சாட்டையால் முதுகில் அறையும் மெக்ஸிகோ வாசி.


அப் பெருமகனை - அரசுக்கு எதிராகப் புரட்சி செய்தவர், தேவதூஷணம் பேசியவர் எனக் குற்றம் சாட்டி, பகிரங்கமாக சிலுவையில் அறைந்து கொலை செய்த தினத்தைத்தான் பெரிய வெள்ளிக் கிழமையென உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் நினைவுகூருகின்றனர்.



சுவரில் குருதிக் கரங்கள் பதித்தல்

சிலுவையில் அறைந்து கொல்லுதல் என்னும் நடைமுறை பண்டைய ரோம ஆட்சிக் காலத்தில் அரசியல் குற்றவளிகளுக்கு வழங்கப்பட்ட அதி உயர் தண்டணையாக இருந்தது. ரோம சாம்ராஜ்யத்துக்கு முன் இந்தக் கொடிய தண்டனை பேர்ஷியாவிலேயே முதலில் வழக்கிலிருந்து பின்னர் ரோமுக்கு வந்தது.

**இது ஒரு கொடிய தண்டனைதான்! தோள்மீது சிலுவையைச் சுமத்தி ஆடைகள் எல்லாம் உரியப்பட்டு, அம்மணமாகத் தெருத்தெருவாக இழுத்துச் சென்று உயிரோடு சிலுவையில் வைத்து அறைந்து...**



உண்மையிலேயே இது ஒரு கொடிய தண்டனைதான். தோள்மீது சிலுவையைச் சுமத்தி, ஆடைகள் எல்லாம் உரியப்பட்டு, அம்மணமாகத் தெருத்தெருவாக இழுத்துச் சென்று உயிரோடு சிலுவையில் வைத்து அறைவதென்பது இன்றைய காலத்தில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் சித்திரவதையின் உச்சமான, சிலுவையில் தொங்கும் அச் சின்னமே கிறிஸ்தவ மக்களின் புனிதச் சின்னமாக இன்று நிலைத்து விட்டது. கடவுளுக்கெதிராக மனிதன் செய்த பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தமாக மனிதனுக்குத் தண்டனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்தக் குருதி...!



பிலிப்பைன்ஸில் கணவனின் முதுகுத் தோலை கூரிய ஆயுதத்தால் உரிக்கும் மனைவி

வழங்க விரும்பாத கடவுள் தன் மகனையே மனிதனாக அவதரிக்கச் செய்து இக் கொடிய தண்டனையை அவருக்கே வழங்கி, அதன்மூலம் மனிதனின் பாவங்கள் கழுவப்பட்டதாக கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கை.

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ மதம் உலகத்தில் பரவத் தொடங்கியபோது அதனைப் பின்பற்றியவர்கள் யேசுநாதரைச் சிலுவையில் அறைந்த பெரிய வெள்ளி தினத்தன்று தங்களைத் தாங்களே கூரிய முட்கள் கொண்ட சாட்டைகளால் அடித்துக்கொண்டனர்.

இன்னும் சிலர் பெரிய வெள்ளிக் கிழமைக்கு முந்திய நாற்பது நாட்கள் கடும் நோன்பு இருந்து பெரிய வெள்ளியன்று பாரிய சிலுவையை முதுகிலே சுமந்து பல கிலோமீற்றர் தூரம் நடந்து செல்வர். யேசுவுக்குச் சூட்டியது போலவே பாரிய முட்கள் கொண்ட முடிகளைத் தலையிலே சொருகிக் கொள்வர். தாம் சிலுவையைச் சுமந்து போகும்போது சாட்டைகளைக் கொண்டு தம் உடலில் தோல் கழிந்து இரத்தம் வழியும்வரை அடிக்கச் சொல்வர். இன்னும் சிலர் இறுதியாக, யேசுவைப் போலவே தம்மையும் சிலுவையில் வைத்து அறைந்தும் கொள்வர்.

இது நடக்கின்ற போது பலர் கரடு முரடான கட்டாம் தரையில் முழங்காலால் பல கிலோமீற்றர் தூரம் நடந்து செல்வர். இன்னும் சிலர் தமது கரங்களிலும் கால்களிலும் கூரிய ஊசிகளைக் கொண்டு குத்தி இரத்தம் ஒழுகச் செய்வர். இவர்கள் ஏன் இப்படித் தங்களைச் சுயசித்திரவதை செய்துகொள்கின்றனர் என்பது மிக ஆச்சரியமான விடயம்தான். ஆனால் இது ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்புதான் நடந்ததென்பதல்ல. இன்று நவீனமயப்படுத்தப்பட்ட உலகிலும் சில முன்னேறிய நாடுகளில் இது நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் பரவலாக கத்தோலிக்க திருச்சபையும்



**இறைவன் மீதுள்ள பயத்தால் எல்லாம் வல்ல இறைவன் நம்மை தண்டிப்பதற்கு முன் நாமே நம்மை தண்டித்துக் கொள்வதன் மூலம் எம் பாவங்கள் கழுவப்பட்டுவிடும் என்பதுதான் நம்பிக்கையின் அடிப்படை.**

மெக்ஸிகோவில் முட்கிரீடம் அணிந்து சிலுவை சுமக்கும் பக்தர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதைக் கட்டாயம் செய்யும்படி வற்புறுத்தாவிட்டாலும் இவ்வாறு செய்பவர்களைத் தடுக்க முற்படுவதும் இல்லை.
இச் சுயவதைச் செயற்பாட்டுக்குப் பின்னாலுள்ள தீவிர நம்பிக்கைதான் என்ன?

நாம் ஏற்கெனவே அமுதில் வெளிப்படுத்தியிருந்ததைப்போல, இந்து மதத்தில், முஸ்லிம் மதத்தில் உள்ளதைப் போலவே கிறிஸ்தவ மதத்திலும் இறைவன் மீதுள்ள பயம்தான் காரணமாகிறது. அதாவது எல்லாம் வல்ல இறைவன் நம்மை தண்டிப்பதற்கு முன் நாமே நம்மை தண்டித்துக் கொள்வதன் மூலம் எம் பாவங்கள் கழுவப்பட்டுவிடும் என்பதுதான் அடிப்படை. அதாவது இறைவனுக்கு எம்மைத் தண்டிக்கும் உரிமை உண்டு என்பதை நாம் மனதார ஏற்றுக் கொண்டு அத்தண்டனையை நாம் விருப்பத்தோடு அனுபவிக்கிறோம்.




சுய சித்திரவதையின் போது ஏற்படும் வேதனையை தாங்கிக் கொள்கிறோம். பண்டைய காலத்தில் நீரினால், நெருப்பினால், பூகம்பத்தினால், இடி மின்னலினால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களை கடவுளுக்கெதிராக நாம் செய்த தவறுக்கு அவர் வழங்கிய தண்டனையாகவே மக்கள் பார்த்தனர்.

கிறிஸ்தவ மதத்தின் பழைய ஏற்பாடு என்னும் நூலிலும் இவ்வாறான பல சந்தர்ப்பங்களை நாம் காணலாம். மன்னராட்சி உலகில் ஏற்படத் தொடங்கியதும் மக்களைத் தண்டிக்கும் உரிமையை தம்மை அறியாமலேயே மக்கள் அம்மன்னருக்கு வழங்கி விட்டனர். அல்லது மன்னர் தானாகவே அவ்வதிகாரத்தை எடுத்துக் கொண்டார்.

அரசினால் குற்றவாளியாகக் காணப்பட்டவர்கள் பகிரங்கமாக கூரான ஊசி மரத்தின் மீது உட்கார வைத்து, உடல் இரண்டாகக் கிழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். சிலுவையில் அறைந்து கொல்லுதலும் அதன் தொடர்ச்சியாக வந்த ஒரு தண்டனை முறைதான்.

கிறிஸ்தவ மதத்திலும் ஏனைய மதங்களிலும் கூட பாவம் செய்பவர்களுக்கு நரகம் என்று ஓரிடம் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதும் அந்நரகத்திலே பாவிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற தண்டனை பற்றிக் கூறப்படும் போதும் மிகக் கடுமையான தண்டனைகளே அங்கும் விபரிக்கப்படுகின்றது.

இவ்வாறான பய உணர்வினால் தான் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியவர்களும் தாம் செய்த பாவத்திற்காக இறை குமாரன் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட அப்பெரிய வெள்ளிக்கிழமைத் தினத்தன்று தம்மையே சித்திரவதை செய்து கொள்ளுகின்றனர்

கத்தோலிக்க மக்கள் அதிகமாக வாழும் சில நாடுகளில் இன்னமும் அந்த நடைமுறைகள் இருந்து வருவதுதான் ஆச்சரியத்துக்குரியதாக இருக்கிறது. கிறிஸ்தவ மதத்தில் பல பிரிவுகள் இருந்தாலும் இன்றும் உலகத்தில் பெரும்பான்மையானவர்கள் கத்தோலிக்கர்களே.

இறைவனுக்கு முன்னால் தான் செய்த பாவங்களுக்காக இரகசியமாகத் தன்னை வதைத்துக் கொள்வதென்பதை விட அச்சித்திரவதையை பகிரங்கமாகச் செய்து கொள்வதுதான் அதிகமாக எம் பாவங்களை நீக்க வல்லது என்று இவர்கள் நம்புவதானாலேயே இதை வீதிகளிலே நடந்த வண்ணம் செய்கிறார்கள்.


பிலிப்பைன்ஸில் தம்மைத் தாமே சாட்டையாலடித்தபடி பாவவிமோசனம் கோரி பாதயாத்திரை

தன்னை ஒத்த உருவத்தில் மனிதனைப் படைத்த இறைவன் மனிதன் தன்னைத் தானே இவ்வளவு கொடிய முறையில் வதைத்துக் கொள்வதை விரும்புவாரா என்று கூட இவர்கள் சிந்திப்பதில்லை. மாறாக நான் என்னை வதைத்துக்கொள்ளாவிட்டால் இதை விட மோசமாக கடவுள் என்னை வதைப்பார் என்கின்ற ஒரு மனப் பிராந்தி நிலையில் இருந்தே இவர்கள் இதைச் செய்வதாகத் தெரிகின்றது.

இது விஞ்ஞான ரீதியாக பின்தங்கிய வளர்ச்சியடையாத நாடுகளில் நடந்தால் கூட அதை ஓரளவுக்கு நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் மிகவும் முன்னேறிய ஐரோப்பிய நாடுகளில் இது நடப்பதுதான் மிக வியப்பூட்டுவதாக இருக்கிறது. •





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமுது

## சந்தா விபரம்

### உள்நாட்டு சந்தா (ரூபாவில்)

| | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|
| நேரடி விநியோகம் கொழும்பு நகருக்குள்) | 360.00 | 180.00 | 90.00 |
| தபால்மூல விநியோகம் | 552.00 | 276.00 | 138.00 |

### வெளிநாட்டு சந்தா (அமெரிக்க டாலரில்)

| நாடு | | 1வருடம் | 6மாதம் | 3மாதம் |
|---|---|---|---|---|
| இந்தியா | $ | 10.00 | 5.00 | 3.00 |
| பாகிஸ்தான் | $ | 10.00 | 5.00 | 3.00 |
| மாலைதீவு | $ | 10.00 | 5.00 | 3.00 |
| சிங்கப்பூர் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| மத்திய கிழக்கு | $ | 12.00 | 6.00 | 3.00 |
| ஹொங்கொங் | $ | 12.00 | 6.00 | 3.00 |
| இங்கிலாந்து | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அவுஸ்ரேலியா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| ரஷ்யா | $ | 13.50 | 7.00 | 3.50 |
| அமெரிக்கா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| கனடா | $ | 16.50 | 8.25 | 4.25 |
| மேற்கிந்தியா | $ | 16.50 | 8.25 | 4.25 |

**காசோலைகள், அனுப்பப்படவேண்டிய பெயர்:**
The Associated Newspapers of Ceylon Ltd.


**முகவரி:**
Marketing Manager,
The Associated Newspapers of Ceylon Ltd,
P.o. Box 1198,
Lake House,
Colombo,
Sri Lanka.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

## 14%

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

## 11%

**செமிப்பு கணக்குகளுக்கு**

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

PRAMUKA BANK

**பிரமுக**
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
**வங்கி**
லிமிட்டட்

*வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி*

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### துயரம் தராத(ா)... தூரம்

சலனப்படாத என்
பருவத்தை
புருவ வீச்சால்
புரட்டி விட்ட புள்!

திறந்த உதடுகளால்
தரமுடியா தேனிசை,
உரத்த சத்தத்தால்
உணரப்படா உண்மை
இதோ அவள்
விழிகளின் மௌனத்தால்
விளைகின்றதே!

நயாகராவின்
நீர்வீழ்ச்சி நிலையாய்
அவள் கார்குழல்!
நித்திரை விழிகளுக்குள்ளும்
ஒரு முத்திரையாய்
அவள் முகம்
புல்லாங்குழல்
இசையைக் கூட
புரட்டிவிடும் அவள்
இதழ் மூடிய சிரிப்பொலி!
டாவின்சியின்
மோனலிசா தராத மோகம்!
அவள் -
ஆபாசங்களை அப்புறப்படுத்திய
அபூர்வச் சின்னம்!

இப்படித்தான்
அவளை எழுதினேன்
இன்னுமவள் இருக்கிறாள்,
இன்னொருவன் மனைவியாய்!

- மானிபூர் ரட்ணேஸ்

### தாலாட்டு

ரோஜாப்பூ
அழுகிறது!
முள்குத்தி வலிக்குது
என்று!
00 00 00
சூரியகாந்திப் பூ
துடிக்கிறது!
மாலைப் பொழுது
சூரியனை விழுங்குகிறது
என்று!
00 00 00
நந்தவனம்
தவிக்கிறது
இவ்விரு குழந்தைகளையும்
எப்படித் தாலாட்டுவது என்று!

- எம். சுயர்சன், கோண்டாவில்

### ஒரு துளி உயிர்

என் சுதந்திர தேசத்தின் நடுவே
நீண்ட துவாரமுள்ள
மண்டையோடுகளை
காகங்கள்
கொத்திக்கொள்கின்றன.
இலையுதிர்ந்துபோன
மரங்களுள்ள
வீதிச் சுவருக்குமேல்
கிழிந்து போன
ஆடைகளுக்குள்
சதைத் துண்டுகளும்
கொஞ்சம் இரத்தத் துளிகளும்.

திடீர் திடீர் வெடிச்சத்தம்
உயிர் நடுங்கிக்கொள்கிறது
இடையிலுள்ள
பொழுதுகளில்
எனது உம்மாவினதும்
வாப்பாவினதும்
எலும்புகளை முகர்ந்து
அடையாளம் காண்கிறேன்
கம்பி வேலிகளின்
இடுக்குகளில்....

விடுதலை போன்று
கொட்டாவி விட்டு
இரண்டு கைகளையும் நீட்டி
மிகச் சுதந்திரமாக
மல்லாந்து படுத்துக்கொள்ள
நினைத்து
மெதுவாகச்
சாய்ந்துகொள்கிறேன்
என் தலை
ஏனைய தலைகளோடு
முட்டிக்கொள்கிறது.

- முஹம்மது றபீக்,
பொத்துவில்

### தேன் நிறத்து அந்தியின் - குறும்புச் சிலந்தி

அந்தரங்க நினைவில்
உன் வாசனை கிளர்கையில்
நாட்களும் மிக மணக்கும்.

இடத்தில் தங்காமல்
இரண்டறக் கலந்து
உயிரெலாம்....
ஊர்ந்து திரிகிற
சுகச் சொப்பனங்கள்!

ஊடுருவி...
தலைமுடி கோதி...
கிறங்கும் விழிகளுக்குள்
நீச்சலடித்து,
தவிக்க விட்டோடுகிற
தாவணித் தென்றல்!

நாண வலைக்குள்
என்னைச் சிக்கவைத்து
தன்னை உண்ணச் சொல்லும்
என் குறும்புச் சிலந்தி!

பிரியத் துடிப்பில்
ஆருயிர் முழுதும்
ஊத்துண்டு...
உன் சிறு நரம்பிலும்
விடாது பரவ
அவாவுறும்தான்!

அது -
பருகப் பருக...
பெருக்கெடுக்கும் விடாய்!


இது -
ஆனந்தக் கிளையில்
சிறகு தட்டி,
சொண்டுக்குள்
சொண்டு வைத்துக்
குலாவும் கார்காலம்!

நட்சத்திர ஒளி துலங்கும்
தேன் நிறத்து
அந்தியொன்றில்
மட்டற்ற ஊற்றாக...
மனம் பொங்கி
வழிந்த காதல்!

அன்பின் வேர்களில்
உயிர் நோகும்
இன்னல்கள் சுமந்து
உருவான பிணைப்பு!

மடி மீது துயிலாமல்...
தோள் மீது துவளாமல்...
எங்கிருந்து இந்த...
மகுடியை ஊதுகிறாய்?
மயங்கிச் சுருள்கிற
தெந்தன் உயிர்!!!

- அனார்



### ஒரு மடல்

ஓவியத்திடமிருந்து
காவியத்துக்கு....
உன்னிடமிருந்து அன்பான
பதிலும்...
பாராட்டும் கிட்டும் என்று நான்
நினைத்திருக்கவேயில்லை.
எதிர்பாராத அதிசயமாக...
ஆனந்தமாக இருந்தது....
இதயம் கசிந்து, இளகி எனக்காக
கவிதை எழுதியதற்கும், என்
பங்குக்கு வெகு சாதாரணமாய்,
ஒரு நன்றியைத் தெரிவிக்கவும்
ஒப்புவதில்லை
மனதில் அதை விட மேலான
உணர்வுகள் பொங்குகின்றன...
பழுவை இறக்கி வைத்துவிட்டுப்
போய்விட்டாய்
இந்தப் பாசத்தின் பாரத்தை
என்னை சுமக்கவிட்டு....
ஒரு புறம் சுமையாக... மறுபுறம்
சுகமாக...
இந்த உணர்வுகளே
இப்படித்தான்,
மருந்தென்று தடவத் தடவ
கடைசியில் காயமாகிவிடும்.

- அக்கரையூர் நகீப்

### (வெள்ளி) நிலா

இரவுச் சண்டியனுடன் மோதும்
ஒளிச் சுண்டெலி...
சூரியன் வீட்டுச் சொத்தில்
வயிறு வளர்க்கும் கோழை...
வெட்ட வெட்ட வளரும்
வெள்ளி நகம்....
காதலுக்கு சாட்சியான
ஊமை ஜீவன்...
கவிஞனுக்கு வற்றாத
கற்பனை ஊற்று....
நட்சத்திரப் பையன்கள்
ஜொள்ளுவிடும்
கல்லூரி மாணவி...
பார்வதி பையனுக்குச்
சோறூட்டத் தரையிறங்கிய மாமா
ஆற்றங்கரையில் சோறாக்கி
மகிழ
அட்டகாச விளக்கொன்று...
மாலையில் வந்து காலையில்
மறையும் பூமியின் சிநேகிதி...

- ரயிஸ் அகமட், விருதோடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# நாளை விடியும்

பாலா சங்குபிள்ளை

பொழுது புலரும் நேரம். ஆதவன் அடிவானத்திலிருந்து மேலே வர நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். இரவு பெய்த மழையினால் தேயிலைச் செடிகள் நனைந்து குளிர்ந்திருந்தன. செம்மண் பாதையில் நீர் சலசலத்து ஓடிய ஒலி சலங்கையாக காதுகளுக்கு இனிமை தந்தது.

லட்சுமி கண் விழித்தாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. இரவு முழுவதும் தூக்கமில்லை. மனதில் பல்வேறு எண்ண அலைகள் ஆர்ப்பரித்தமையினால் கண்கள் மூட மறுத்தன.

மெதுவாக எழுந்தாள். தலை விண் விண்ணென்று வலித்தது. தந்தை மாரியப்பன் விடியற்காலையிலேயே பெரட்டுக்களத்துக்கு போய்விட்டிருந்தார்.

புயலே அடித்தாலும் அவர் சரியான நேரத்துக்கு வேலைக்குப் போகாமல் இருக்கமாட்டார். காய்ச்சல் வந்தால் கூட படுக்கையில் கிடக்காமல் உழைத்து ஓடாகப் போய்க் கொண்டிருக்கிறார்.

தம்பி மருது இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். டவுண் பாடசாலையில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டான். இன்னமும் பெறுபேறுகள் வரவில்லை. அதுவரை சும்மா இருக்க விரும்பாமல் டவுணிலிருக்கும் ஒரு தையலகத்தில் வேலை செய்து வருகிறான்.

லட்சுமிக்கு பன்னிரண்டு வயதாகும்போது தாய் இறந்துவிட்டாள்.

லட்சுமி கெட்டிக்காரி. குடும்பப் பாரத்தைத் தன் தோளில் சுமந்து தந்தைக்கு பெரும் உதவியாக இருக்கிறாள். வீட்டு வேலைகளையும் செய்தபடி தொடர்ந்து படித்து, தற்போது ஆசிரியையாக இருக்கிறாள்.

சண்முகம் லட்சுமிக்கு அடுத்தவன். மருதுவின் அண்ணன். பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறான். அவனது படிப்புக்குத்தான் பணம் எக்கச்சக்கமாக செலவாகிறது.

லட்சுமி குசினிக்குச் சென்றாள். மழையினால் நனைந்து ஈரமாகியிருந்த குசினியின் தரையை பழைய சாக்கினால் துடைத்தாள். அடுப்பைப் பற்றவைத்து தண்ணீரைச் சுடவைத்தாள்.

சண்முகம் படிப்பை முடித்து ஒரு நல்ல வேலையில் அமர்ந்துவிட்டால் அப்புறம் கஷ்டமில்லாமல் இருக்க முடியும். லட்சுமி வெறுமையான தன் கழுத்தை தடவிக் கொண்டாள். அவள் தனக்காக செய்து கொண்டிருந்த ஒரு தங்கச் சங்கிலியும் அடகுக் கடைக்குப் போய்விட்டிருந்தது.

லட்சுமி மாநிறம். சேற்றிலே முளைத்த செந்தாமரையைப் போல அழகாகவே இருந்தாள். என்னதான் துன்பம் வந்தாலும் அவள் முகத்திலிருக்கும் புன்னகை மட்டும் எப்போதுமே மாறாதிருக்கும்.

சீனியையும் தேயிலையையும் எடுத்து தேநீர் தயாரித்து கண்ணாடி கிளாசில் ஊற்றினாள். பால் இருக்கவில்லை. மருது பாலில்லாமல் தேநீர் குடிக்கமாட்டான். என்ன செய்வது?

மருது எழுந்திருந்தான். அவன் ஒன்பது மணிக்கு மேல்தான் டவுணுக்குப் போவான். நன்றாகப் படித்து ஒரு வைத்தியராக வர வேண்டும் என்பது அவன் ஆசை. ஆனால் தன் தந்தையை நினைக்கும் போது தான் பரிதாபமாக இருந்தது. இவ்வளவு நாளும் அவர் மிகவும் கஷ்டப்பட்டு நொந்த நூலாகிவிட்டார். சண்முகம் படிப்பில் முன்னுக்கு வரவேண்டுமென்று அவர் மிகவும் பின்னுக்குப் போய்விட்டார். மருது பெருமூச்சுடன் முகம் கழுவ குசினியின் பின்புறம் சென்றான்.

லட்சுமி அவசர அவசரமாக கைப்பையையும் சில புத்தகங்களையும் சுமந்து கொண்டு வெளியே வந்தாள். இலேசாக மழை தூறுவதைப் போல இருந்தது. ஞாபகமாக குடையை எடுத்துக்கொண்டாள்.

லட்சுமி பணிபுரியும் அதே பாடசாலையில்தான் அரவிந்தனும் வேலை செய்தான். அரவிந்தன் பார்ப்பதற்கு அழகாக எடுப்பாக இருப்பான். லட்சுமியும், அரவிந்தனும் ஆரம்பத்தில் தொழில் ரீதியாகத்தான் பழகினார்கள். லட்சுமியின் உள்ளம் சிறிது சிறிதாக அவன்பால் ஈர்ப்படையத் தொடங்கியது.

அவள் பொதுவாகவே ஆண்களிடம் அதிகமாகக் கதைக்க மாட்டாள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பாள். கட்டுப்பாடாக இருந்தவளை அரவிந்தனின் காந்தப் பார்வை கவரத் தொடங்கியது.

சாடைமாடையாக ஆரம்பித்த அவர்களின் காதல் சகலரும் அறியக்கூடிய விதத்தில் பரவத் தொடங்கியது. ஆனால் என்றுமே அவர்கள் எல்லை மீறியதில்லை. அரவிந்தன் பல முறை அவளை சினிமா, பார்க் என அழைத்தாலும், அவள் அதை விரும்பவில்லை. அரவிந்தனின் போக்கில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அவளை அடிக்கடி சந்திப்பதை, அவளுடன் பேசுவதை தவிர்ப்பதைப் போலிருந்தது. அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இரண்டு நாட்களுக்கு முன் அவனுடன் பேசியபோது, அவளுடன் பேச வேண்டும் என்று சொன்னான்.

00 00 00

லட்சுமியின் தந்தை மாரியப்பனால் அன்று ஒழுங்காக வேலை செய்ய முடியவில்லை. அவர் நினைவுகள் யாவும் மூத்த மகன் சண்முகத்தைப் பற்றியதாகவே இருந்தது. நேற்று அவர் டவுணுக்குப் போயிருந்த போது அவருடன் வேலை செய்யும் சோதிமுத்துவின் மகன் சின்னத்தம்பியைச் சந்தித்தார். சில மாதங்களாக சண்முகம் யாரோ ஒரு பெண்ணுடன் காணப்படுகிறானாம்.

இந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்தே மாரியப்பனுக்கு எதுவுமே ஓடவில்லை. கடந்த ஒரு மாதமாக சண்முகத்திடமிருந்து எந்த கடிதமும் வரவில்லை. அவருக்கு அவனைப் போய்ப் பார்க்கவும் நேரமில்லை. போவதாயிருந்தால் பணம் தேவை. நாளை சனிக் கிழமை.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தூக்கம்

மருதுவையும் அழைத்துக் கொண்டு கண்டிக்குப் போக வேண்டும். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்.

00 00 00

மருது பாடசாலைக்குச் சென்றான். அங்கே ஒரே கூட்டமாக இருந்தது. பெறுபேறுகள் வந்து விட்டனவோ... படபடக்கும் மனதுடன் வேகமாக ஓடினான். இடையில் அவனது வகுப்பு ஆசிரியர் பாலமோகன் எதிர்பட்டார்.

"வா... மருது... வா.. எங்களோட பாடசாலை பேரையும் என்னையும் காப்பாத்திட்டேடா ராஜா.."

"என்ன சேர்...?"

"நுவரெலியா மாவட்டத்திலேயே நீதாண்டா திறமையா சித்தியடைஞ்சிருக்கே... நீ யூனிவர்சிட்டி போறது நிச்சயம்டா..."

மருதுவின் கண்கள் கலங்கின. அவர் அவனை முதுகில் தட்டிக் கொடுத்தார். இந்த விஷயத்தை அப்பா, அக்கா, அண்ணா கேள்விப்பட்டால் மிகவும் சந்தோஷப்படுவார்கள். அப்படியானால் அவன் ஒரு டாக்டர் தானா? அவனுக்கு ஆகாயத்தில் மிதப்பது போலிருந்தது.

00 00 00

லட்சுமி மெதுவாக நாற்காலியை விட்டு எழுந்தாள். சிறிய இடைவேளைக்காக மணியடிக்க மாணவர்கள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக வெளியே பாய்ந்தார்கள். வெளியே இலேசாக வெயில் அடித்துக்கொண்டிருந்தது. வானிலே வர்ணஜாலம் காட்டும் வானவில் தோன்றியிருந்தது.

லட்சுமி பெருமூச்செறிந்தாள். அவள் காதலும் வானம் போல நிலைத்திருக்குமோ அல்லது வானவில்லைப் போல நிறம் காட்டி மறைந்துவிடுமா?

ஒரு மணி நேரம் விடுப்பு எடுத்துக்கொண்டு பாடசாலைக்குப் பக்கத்திலிருந்த அவளின் சக ஆசிரியையும் தோழியுமான ஆனந்தியின் வீட்டுக்குச் சென்றாள். ஆனந்தி திருமணம் முடித்தவள். பொதுவாக அரவிந்தனை அங்கே வைத்துத்தான் லட்சுமி சந்திப்பாள்.

லட்சுமி அங்கே சென்றபோது அரவிந்தன் அவளுக்காக காத்திருந்தான். ஆனந்தி உள்ளே தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

"வா... லட்சுமி.. இப்படி வந்து உட்கார்..."

"நான் ஒண்ணும் உட்கார வரலை. சொல்ல வேண்டியதை சீக்கிரம் சொல்லிடுங்க..."

"ரொம்ப கோபமா இருக்கேன்னு நினைக்கிறேன்..."

"ஆமா, நீங்க நடந்துக்கிற முறையைப் பார்த்தா கோபம் வராதா...?"

"நான் இப்ப சொல்லப் போற விஷயத்தைக் கேட்ட நிச்சயமா உனக்கு என் மேல கோபம் மட்டுமில்ல வெறுப்பும் வரும்..."

"எதுவாயிருந்தாலும் என்னால தாங்கிக்கொள்ள முடியும். பயப்படாம சொல்லுங்க..."

"லட்சுமி உன்னையே கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்நாள் முழுதும் சந்தோசமாக இருக்கணும்னுதான் நான் ஆசைப்பட்டேன். ஆனா அப்பாவுக்கு இதுல விருப்பமில்ல. நீங்க சாதியில குறைவாம். அதுவுமில்லாம லயத்துல வேற இருக்கீங்களாம்... அதுனால..."

"போதும் நிறுத்துங்க - உங்கட மீதி கதைய நான் கேட்கிறதுக்குத் தயாரில்ல. ரெண்டு வாரத்துக்கு முன்னமே நல்ல வசதியுள்ள இடத்தில கொழுத்த சீதனத்தோட பொண்ணு பார்த்து முடிச்ச கதையெல்லாம் எனக்கு முன்னமே தெரியும். உங்களை மாதிரி ஆளுங்க எங்களைப் போல ஏழை பொண்ணுங்களை காதலிக்கிற மாதிரி நடிச்சி கசக்கிட்டு அப்புறம் கதை சொல்லி கைவிடுற கதையெல்லாம் எனக்கும் தெரியும். ஆனா நான் உங்க மேலே வச்சது உண்மையான காதல். நீங்களோ என்னை வலை வீசிப் பிடிச்சி நிலைகுலைய வச்சிட்டு இப்போ கதை

"நீதான் தூங்கிருவியே -
இன்னிக்கு
சிங்க வாகனத்தில்
அம்மன் வரும்
நான் எல்லாம் பார்ப்பேன்!"

கோலங்களை யாரும்
மிதியாமல் போக
வாசலில் காவலிருக்கும்
பிள்ளைகள் பேசிக்கொள்ளும்.

கொட்டாவிக் காற்று
கண்ணைச் சுற்றுகையில்
அம்மையிடம்
பிள்ளை சொல்லிச் சாயும்
"ஏம் மா
சப்பரம் வர்றப்போ
எழுப்பு"
ஆனால் எந்தப் பிள்ளை
சாள வாயுடன்
சப்பரம் பார்க்க
எழுந்து வந்து
தூக்கம் துறந்தது....

- கலாப்ரியா

சொல்லிக்கிட்டிருக்கீங்க... நீங்க எல்லாம் என்ன மனுசன்.... சீதனத்துக்காக தன்மானத்தையே அடகு வைக்கிற உங்களுக்கெல்லாம் எதுக்கு காதல் கத்தரிக்காயெல்லாம்...?"

"லட்சுமி நீ என்னைப் பத்தி தப்பா நினைச்சி..."

"இல்லயில்லை நல்லாத்தான் புரிஞ்சிக்கிட்டேன். காசுக்காக வேஷம் போடுற உங்களோட தொடர்பே இனி வேணாம். உங்களை நம்பி வர்றவள்கிட்டயாவது உண்மையா நடந்துக்குங்க."

லட்சுமி அவனை ஒரு புழுவைப் போல பார்த்தாள். அவள் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. தொடர்ந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. தலை குனிந்திருந்த அவனை தலை நிமிர்ந்து பார்த்தவள் சட்டென அந்த இடத்தை விட்டு விரைந்தாள்.

00 00 00

பஸ் கண்டி பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டது. மாரியப்பன் யன்னலருகே இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தார். பக்கத்தில் கவலையுடன் தந்தையின் முகத்தைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான் மருது.

காலையில் நடந்த சம்பவங்கள் மருதுவின் மனதில் வந்து போனது.

"இதோ பாருங்கப்பா... இனி சொல்லாம கொள்ளாம அடிக்கடி யுனிவர்சிட்டிக்கு வந்து என்னைப் பார்க்கிற வேலையெல்லாம் வச்சிக்காதீங்க. நான் இங்க ஒரு பெண்ணை விரும்புறது உண்மைதான். அவ பெரிய இடத்து யாழ்ப்பாணப் பொண்ணு. அவகிட்ட என்னோட அப்பா ஒரு எஸ்டேட் உரிமையாளருன்னும் அவர்கிட்ட கோவிச்சிக்கிட்டு இங்க வந்து படிக்கிறேன்னும் சொல்லியிருக்கேன். நீங்க எனக்காக கஷ்டப்பட்டீங்க உண்மைதான். ஆனா அதுக்காக நீங்க சொன்னதெல்லாம் கேட்க என்னால முடியாது. நான் இன்னும் கொஞ்ச நாள்ல பட்டதாரி ஆயிடுவேன். எனக்குன்னு அந்தஸ்து, கௌரவம் வந்துடும். பட்டம் வாங்கினதும் எனக்கு கல்யாணம். அப்புறம் நான் லட்சாதிபதி மாப்பிள்ளை. நீங்க என்னோட படிப்புக்காக செலவழிச்சதையெல்லாம் வட்டியும் முதலுமா திருப்பி தந்திடுவேன்..."

மாரியப்பன் அனல் பறக்கும் கண்களுடன் சண்முகத்தைப் பார்த்தார். "டேய் போதும்டா... என்ன பேச்சுப் பேசுறே... நீ எல்லாம் என்ன படிச்சி என்னடா ஆவப்போகுது. நீ எங்கேயிருந்து இங்கே வந்தேன்னுறதை மறந்துட்டு பேசுற இல்ல. நாங்கல்லாம் தோட்டத்துல புல்லு வெட்டுறவங்கதான். ஆனா உன்னைப் போல புல்லுருவிகளை புள்ளையா பெத்ததுக்காக வெட்கப்படுறேன். வேதனைப்படுறேன். நீ பிற்காலத்துல எங்களுக்கு உதவியா இருப்பேன்னு நினைச்சேன். ம்.... உன்னோட பணம் எங்களுக்கு தேவையில்லை. உன்கிட்ட பிச்சை வாங்குறளவுக்கு நாங்க தரம் கெட்டுப் போகலை. நீ உனக்கு விருப்பமானவளையே கட்டிக்கிட்டு சொத்து சொகத்தோட சந்தோஷமா இரு."

சிந்தனை கலைந்த மருது அப்பாவை நோக்கினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அவன் சட்டென அவரின் கைகளைப் பற்றினான்.

"அழாதீங்கப்பா... அண்ணன் போனா போகட்டும்பா... நானிருக்கேன். நான் உங்களை நிராதரவா விடமாட்டேன். அதிகமா படிச்சா அறிவு பெருகும்பாங்க. ஆனா இப்படி அறிவுகெட்டத்தனமா நடப்பாங்கன்னு நேர்ல பார்த்திட்டேன். அண்ணனைப் படிக்க வைக்க நீங்க இரத்தத்தை வியர்வையா சிந்தினீங்க. ஆனா அவன் உங்களை ஏமாத்திட்டான். அப்பா நான்கூட நல்ல முறையில பாஸ் பண்ணியிருக்கேன். ஆனா நான் தொடர்ந்து படிக்கப் போறதில்ல..."

மாரியப்பன் கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தார்.

"ஆமாப்பா... நான் தீர்மானிச்சுட்டேன். பெத்து வளர்த்தவங்களை துச்சமா நினைக்க வைக்கிற அந்தப் படிப்பு எனக்குத் தேவையில்ல. தையல் கடையில் வேலை செய்யிற நான் சீக்கிரமா சொந்தமா தொழில் தொடங்குவேன். உங்களோட கடனையெல்லாம் அடைப்பேன். அக்காவோட கல்யாணத்தை நல்லபடியா நடத்திக் காட்டுவேன். என்னை நம்புங்கப்பா. எல்லோருமே ஒரே குட்டையிலே ஊறின மட்டையில்ல. நீங்க கவலைப்படாதீங்க. அண்ணன் போனா போகட்டும். என்னால வானத்தை வில்லா வளைக்க முடியாதுதான். ஆனா நம்ம குடும்பத்தை பாதுகாக்கிற வேலியா நிச்சயம் இருப்பேன்..."

மாரியப்பன் கண்களைத் துடைத்துக் கொண்டார். மனதில் ஒரு நம்பிக்கை ஒளி கீற்று பிறந்தது. மருது இவ்வளவு தெளிவாகப் பேசுவான் என்று அவர் நினைத்திருக்கவில்லை. அவன் வார்த்தைகள் அவருக்குத் தெம்பூட்டின. எல்லாமே முடிந்துவிட்டதென முடிவு செய்தவரின் உள்ளத்தில் இதோ விடிவுக்கான ஒளி என ஓர் வெளிச்சம் தெரிந்தது. மருதுவின் கைகளைப் பற்றிக் கொண்டார். அந்தப் பிடியில் உறுதியும், தன்னம்பிக்கையும் இருந்தது.

பஸ் வேகமாக ஓடியது. அவர் மனதிலிருந்த இருளும் ஓடி மறையத் தொடங்கியது. ●

நாளை அதிகாலையில்
தூக்கிலிடப்படவிருக்கும்
ஒருவனின்/ஒருத்தியின்
கடைசிச் சூரியனிலிருந்து
கடைசி இரவிலிருந்து,
கடைசி உணவிலிருந்து,
விடுபடுவதற்கான அர்த்தமற்ற
கடைசிக் கனவிலிருந்து,
கொலைக் களத்தை
நோக்கிய கடைசி நடையின்
தனிமையிலிருந்து கிளம்பி
நம்மேல் படியும்
ஆழ்ந்த குளிர்
நடுநடுங்கச் செய்கிறது.



சமீபத்தில் சென்னையில் மரண தண்டனைக்கு எதிராக தமிழ் எழுத்தாளர்களின் மாநாடு நடந்தது. அம்மகாநாட்டில் சில சிந்தனையாளர்கள் மரண தண்டனையை அரசமைப்பின் வன்முறையாக இனங்கண்ட அதே சமயத்தில், அரசின் வன்முறைக்கு எதிராக இயங்கும் போராளிகளின் வன்முறையை தவிர்க்க முடியாததாகவும், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாகவும், முழு மனதுடன் ஆதரித்ததைப் பார்க்க முடிந்தது. மரண தண்டனைக்கு எதிரான கருத்து என்பது மனிதர்களைக் கொல்வது பற்றிய அடிப்படைக் கேள்விகளை எழுப்புவதற்குப் பதில் சில கொலைகளை ஆதரிப்பதும் சில கொலைகளை எதிர்ப்பதுமான ஒரு நிலைப்பாடாக இருப்பது இந்த இயக்கத்தையே அர்த்தமிழக்கச் செய்துவிடும்.

உலகெங்கிலும் உள்ள சக்தி வாய்ந்த பல விடுதலை அமைப்புகள் திட்டமிட்ட வகையில் நிகழ்த்தி வந்திருக்கும் படுகொலைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் எண்ணற்ற சான்றுகள் உள்ளன. அவை அரச பயங்கரவாதத்திற்கு எந்த விதத்திலும் குறையாதவை. கருத்து முரண்பாடு கொண்டவர்களையும் அரசியல் எதிரிகளையும் இந்த இயக்கங்கள் இரக்கமின்றித் தீர்த்துக்கட்டியிருக்கின்றன. எண்ணற்ற அப்பாவி மக்கள் யுத்த தந்திரத்தின் பகடைக்காய்களாக படுகொலைக்கு ஆளாகியிருக்கிறனர்.

இந்த உண்மை மரணத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எண்ணற்ற இலங்கை முஸ்லிம், சிங்கள பொதுமக்களுக்கும் மாற்றுக் கருத்துக்கள் கொண்ட தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் தெரியும். அதேபோல இங்கே தங்களை புலிகளின் தீவிர ஆதரவாளர்களாகக் காட்டிக்கொள்ள துடிக்கும் தமிழ் பற்றாளர்களுக்கும் தெரியும்.

அதே போல கம்யூனிசத்தின் மகத்தான விடுதலைக்காக, முடிவுகளால் வழிமுறைகளை நியாயப்படுத்தி விடலாம் என்று நம்பி புரட்சிகர வரலாறெங்கும் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளும், புரட்சிகர அரசுகளை நிலைநிறுத்தச் செய்யப்பட்ட படுகொலைகளும் அழிக்க முடியாத இரத்த சாட்சிகளாகி நிற்க, அவற்றின் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் இன்னும் 'கொலைகளின் தவிர்க்க முடியாமையை' பல இடதுசாரிகள் ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். மனிதக் கொலை தொடர்பாக மார்க்ஸியம் ஆழமான அறவியல் கேள்விகளை எதிர்கொள்ளாதது போலவே இவர்களும் இன்றுவரை இந்தக் கேள்விகளை எதிர்கொள்ளவில்லை.

இவற்றை ஒதுக்கித் தள்ளும் உரிமை யாருக்கும் இல்லை. பாசிசத்திற்குத் தேசிய முகமுண்டு. இன முகமுண்டு, மத முகமுண்டு, மொழி முகமுண்டு, சோசலிச முகமுண்டு. ஆனால் மரணத்திற்கு எந்த முகமும் இல்லை. இது அர்த்தமற்ற இருள். கலைக்க முடியாத மௌனம். மீள முடியாத வெளியேற்றம். மாற்ற முடியாத கட்டளை. மரணத்தைச் சொல்ல தர்க்க மொழிகளில்லை. அறத்தின் மொழியும் கவிதையின் மொழியுமே உண்டு.

குற்றவாளிகளை அழித்ததின் மூலம் குற்றங்கள் அழிக்கப்பட்டதற்கு வரலாற்றில் எந்தத் தடயமும் இல்லை. மாறாக குற்றங்களின் பட்டியலும் அழிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. கொலைக்கான அதிகாரம் தனக்குள் முடிவற்ற சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது. அந்த அதிகாரத்தின் வாயை நாம் நிரந்தரமாக மூடாவிட்டால் எவருக்கு எதிராகவும் யாருக்கு எதிராகவும், அது எப்போது வேண்டுமானாலும் திறக்கலாம். பாரபட்சமும், தனிப்பட்ட மனச்சாய்வுகளும் கொண்ட ஓர் அமைப்பில் நீதியின் அர்த்தம் என்ன? தண்டனையின் அர்த்தம் என்ன? கருணைக்கும் மன்னித்தலுக்கும் அப்பால் மனித நீதியை உருவாக்குவது சாத்தியம்தானா?

நாளை அதிகாலையில் தூக்கிலிடப்படவிருக்கும் ஒருவனின், ஒருத்தியின் கடைசிச் சூரியனிலிருந்து கடைசி இரவிலிருந்து, கடைசி உணவிலிருந்து, விடுபடுவதற்கான அர்த்தமற்ற கடைசிக் கனவிலிருந்து, கொலைக் களத்தை நோக்கிய கடைசி நடையின் தனிமையிலிருந்து கிளம்பி நம்மேல் படியும் ஆழ்ந்த குளிர் நடுநடுங்கச் செய்கிறது.

**- மனுஷ்யபுத்திரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னோர் உயிரைக் காத்து...

**மனித சஞ்சாரமற்ற ஒரு பிரதேசத்தில் பயணஞ் செய்யும் பொழுது ஆபத்தில் சிக்கிய தன் தந்தையைக் காப்பாற்ற, அந்தச் சிறுமி தன்னாலியன்ற முதலுதவிகளைச் செய்து, பல கிலோ மீற்றர்கள் அவரை இழுத்துக் கொண்டு மனித சஞ்சாரமுள்ள இடத்திற்கு வந்து சேர்ந்தாள். சிறுமியின் முயற்சியால் தந்தை காப்பாற்றப்பட்டார்.**

உலகில் விலை மதிக்க முடியாதது மனித உயிர். விஞ்ஞானம் வியாபித்த இவ் 21ம் நூற்றாண்டில் உடலை விட்டு உயிர் பிரிந்தபின் அதை மீளப் பெற எந்த விஞ்ஞானிகளாலும், ஆராய்ச்சியாளர்களாலும் முடியவில்லை. உயிர் அவ்வளவு அரியது, மீளப் பெற முடியாதது.

போர்க்களத்தில் புகுந்து பல எதிரிகளை வீழ்த்திய போராளியை நாம் வீரன் என்கிறோம். விளையாட்டிலே மிளிரும் வீரனுக்குப் பரிசு கிடைக்கிறது. இப்படி ஒவ்வொரு வீரரையும் கைகொடுத்து தூக்கிவிட பல நூறு நிறுவனங்கள் தமது விளம்பர நோக்கத்துக்காகவேனும் பார்த்து நிற்கின்றன.

வீதி வழியாகச் செல்கின்ற ஒருவர் வீதியைக் கடக்க முயல்கின்ற வேளையில் எதிரே ஒரு வாகனம் வருகிறது. இன்னும் ஒரு சில விநாடிகளில் விபத்துக்குள்ளாக இருக்கும் அந்த மனிதரை அவதானித்த ஒரு இளைஞன் ஓடி வந்து அவர் விபத்துக்குள்ளாகாதவாறு இழுத்து காப்பாற்றி விடுகிறார். ஆனால் காப்பாற்றியவரின் கால் விபத்துக்குள்ளாகிவிடுகிறது. காப்பாற்றியவர் மயிரிழையில் உயிர் தப்பினார். தன் உயிரைக் கூட மதிக்காமல் இன்னொரு உயிரைக் காப்பாற்றிய இந்த நல்ல ஆத்மாவை நாம் எப்படி அழைக்கிறோம். சமூகத்தில் நாம் இவருக்குக் கொடுக்கக்கூடிய மதிப்பு என்ன?



நாம் வாழும் சமூகத்திலிருந்து உருவாகிய மக்கள் பல்வேறு துறைகளுக்குச் சென்று வீரர்களாகும்போது, அவர்களை வீரரென்று அத்துறை சார்ந்தவர்கள் மதிப்பளிக்கும் போது... நம் சமூகத்திலே உருவாகும் வீரர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்கிறோம்?

சிறுநீரக நோயினால் அவதிப்படும் ஒருவருக்கு தானாக முன்வந்து தனது சிறுநீரகங்களில் ஒன்றை அன்பளிப்புச் செய்யும் ஒரு நல்லவருக்கு நமது பாராட்டுதலும், பரிசும் எந்தளவுக்கு? குறைந்தபட்சம் அவர் ஒரு வீரர் என்றாவது நம் அடிமனது சொல்கிறதா?

இந்த ஆதங்கம் நெடுநாளாக ஒரு மனிதனை வாட்டிக் கொண்டே இருந்தது. இதற்கோர் முடிவு காண இரவு பகலாகச் சிந்தித்தார். தனதுயிரை துச்சமாக மதித்து, இனம், மதம், மொழி, நிறம் என்ற பேதங்கள் பாராது இன்னொரு மனித உயிரை ஆபத்திலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





யம் பற்றிப் பேசி நானே முன்னின்று ஒரு அமைப்பை ஏற்படுத்தினேன் என்றார் **கசுன் பீ. சந்திரரத்ன** .

சந்திரரத்ன ஓர் சட்டத்தரணி. தற்போது தபாற் திணைக்கள ஆலோசகர். அவரைச் சந்திக்க 'வேர்ல்ட் டிரேட் சென்ரர்' ஏழாம் மாடிக்குச் சென்றபோது இனிமையாக எங்களை வரவேற்றுப் பேசினார். தன் வேலைப் பழுக்களோடு ஓய்வு நேரத்தை தான் உருவாக்கிய மன்றத்துக்காகச் செலவிடுபவர். இதற்காக எந்த ஊதியமும் இவருக்குக் கிடைப்பதில்லை.

இன்னொரு உயிரைக் காப்பாற்ற தன் உயிரைப் பணயம்

1993இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றம் 94 முதல் விருது வழங்கும் வைபவத்தை ஆரம்பித்தது. அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து 2000ஆம் ஆண்டு மார்ச் 20ம் திகதி கொழும்பு 'சௌசிரி பாயவில்' ஒரு பிரமாண்டமான விழாவில் 99ஆம் ஆண்டில் வீரச் செயல் புரிந்த சுமார் 35 பேரை கௌரவித்தது.

உலகளாவியரீதியில் பல்வேறு நாடுகளில் வீரச் செயல்களைக் கௌரவிக்கும் மன்றங்கள் இருந்தாலும் இவை போரில் வீரச் செயல் புரிபவர்களையே அதிகமாக கௌரவிக்கின்றன. வீரச் செயல் புரியும் சிவிலியன்கள் கௌரவிக்கப்படுவது குறைவு.




காப்பாற்றுகின்ற ஒருவருக்கு, எப்படி அவர் வீரத்திற்கும் தியாகத்திற்கும் உரிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கலாம் என்று சிந்திக்கத் தொடங்கினார். அதற்கான ஒரு மன்றத்தை அவர் நிறுவினார்.

அந்தத் தனி மனிதன் தனது இந்த சிந்தனைத் தூண்டலின் பெறுமதி 2 ரூபாய் என்கிறார். 2 ரூபாயால் ஏற்பட்ட சிந்தனையா என வியந்தோம். ஆம் என்று அவர் விளக்கத்தையும் தந்தார்.

"ஒரு நாள் கொழும்பு நகர் 'பேமண்ட்' வழியாக நான் நடந்து செல்லும்போது ஒருவர் பழைய *Readers Digest* சஞ்சிகையை ஒரு ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்தார். இரண்டு ரூபா கொடுத்து இரண்டு வாங்கினேன். அதில் வெளியாகியிருந்த வீரச் சிறுமியொருவரின் கதையை வாசித்தேன்.

அமெரிக்காவில், மனித சஞ்சாரமற்ற ஒரு பிரதேசத்தில் பயணஞ் செய்யும் பொழுது ஆபத்தில் சிக்கிய தன் தந்தையைக் காப்பாற்ற, அந்தச் சிறுமி தன்னாலியன்ற சில முதலுதவிகளைச் செய்து, பல கிலோ மீற்றர்கள் அவரை இழுத்துக்கொண்டு மனித சஞ்சாரமுள்ள இடத்திற்கு வந்து சேர்ந்தாள். கடைசியில் சிறுமியின் முயற்சியால் தந்தை காப்பாற்றப்பட்டார்.

இச்சம்பவத்தை பத்திரிகைகள் வெளியிட்டதும் அப்போதைய ஜனாதிபதி றொனால்ட் ரேகன் அந்தச் சிறுமியை வெள்ளை மாளிகைக்கு வரவழைத்து தன்னுடன் புகைப்படம் பிடித்து '*American Hero With Ronald Regan*' என்று எழுதி கையொப்பமிட்டு அனுப்பியிருந்தார்.

இந்தச் சம்பவத்தை வாசித்த எனக்கு எமது நாட்டிலும் இவ்வாறான ஏராளமான செயல்கள் நடைபெறுகின்றனவே. இவற்றை எவரும் கவனத்தில் எடுப்பதே இல்லையே என்பது உறுத்த, அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுக்கு எனது அபிப்பிராயத்தை எழுதி அனுப்பினேன். சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதன் பிறகுதான் என் நண்பர் வட்டத்தோடு இந்த விட

**தனதுயிரை துச்சமாக மதித்து, இனம், மதம், மொழி, நிறம் என்ற பேதங்கள் பாராது இன்னொரு உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்ற ஒருவருக்கு, எப்படி அவர் வீரத்திற்கும் தியாகத்திற்கும் உரிய சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுப்பது...**

வைத்து செயற்படுபவர்களே உண்மை வீரர்கள் என்ற எனது கருத்தை பல அரசியல் தலைவர்களிடம் சொல்லிப் பலனேற்படாததால் நானே அவர்களை கௌரவிப்பதற்கான ஒரு மன்றத்தை உருவாக்கினேன். **"பொது மக்களின் வீரத் தன்மைக்கான மன்றம்"** (*Foundation For Civilian Brevery*) என்ற பெயரில் அது இயங்கி வருகிறது.

விருதுகள் பல வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

1. பொதுஜன வீரப் பதக்கம் - (தங்கம், வெள்ளி, வெண்கலம்)
2. பொதுஜன வீர பத்திரிகையாளருக்கான பதக்கம் (சார் அலீம் விருது)
3. பொதுஜன வீர மாணவர் உயிர்காத்தல் விருது (சமாதான நீதவான் ரஞ்சித் எம். தீரரத்ன விருது)
4. பொதுஜன வீர தியாகத்துக்கான விருது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5. பொதுஜன வீர மாணவர் கட்டுரைக்கான விருது (அன்ட்ரு த சில்வா விருது)

இப்படிப் பல் துறைகளாகப் பிரித்து அத்துறைகளில் வீரர்கள் என்று கருதுபவர்களுக்கு கௌரவம் அளிக்கப்படுகின்றது.

அம்பாறையில் 1996 ஜுன் 21ந் திகதி தென்னை மரம் ஏறி ஒருவர் தேங்காய் பறிக்கையில் அவரின் கை தோள்பட்டை விலகியதால் ஒரு கையால் ஓலையில் தொங்கிக் கொண்டு தன்னைக் காப்பாற்றுமாறு கதறினார். இச்சம்பவத்தைக் கண்ட நந்தசேன என்பவர் விர்ரென காரியத்தில் இறங்கினார். சட்டென்று மரத்தில் ஏறி தன் இரண்டு கால்களாலும் ஓலையில் தொங்கியவாறு அவரைக் காப்பாற்றி கிரமமாக கீழே இறக்கி விட்டார்.

நந்தசேனவின் தைரியத்தினாலும், தியாகத்தினாலும் தேங்காய் பறிப்பவரின் உயிர் காப்பாற்றப்பட்டது. அம்பாறை டி. எஸ். சேனநாயக்க கல்லூரியில் தொழிலாளராகக் கடமையாற்றும் நந்தசேன பாராட்டப்பட்டு கௌரவிக்கபட்டதோடு 5000 ரூபா பணப் பரிசும், 50,000 பெறுமதியான காப்புறுதியும் வழங்கப்பட்டது.

பரிசு பெற்ற மற்றுமொரு சம்பவமும் மனதை நெகிழ வைப்பது. **அமில, தரிந்து, உபுல்** என்ற மூன்று சிறுவர்களும் பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருக்கும்போது நூல் அறுபட பட்டம் பறந்தோடியது. பட்டத்தைப் பிடிக்க மூவரும் சென்று ஒரு நீர்வீழ்ச்சி பள்ளத்தாக்கில் நின்று விட்டனர். ஓரமாக வயல் வரம்பு...

நடந்து சென்ற மூவரில் அமில சறுக்கி பள்ளத்தாக்கில் விழ உடனே உபுல் அமிலவைக் காப்பாற்ற நீரில் பாய்ந்தார். உபுலை வரவேண்டாம் என்று அமில எச்சரிக்கை விடுத்தும் உபுல் அதைக் கேட்கவில்லை. கடைசியில் இருவருமே வெளியே தலை காட்டாததால் தரிந்து நீரில் பாய்ந்தான். எப்படியோ உபுல் காப்பாற்றப்பட்டான். தன் தந்தையை அழைத்துவந்து முதலுதவி செய்தான். தரிந்துவின் வீரத் தன்மையால் ஒரு உயிர் காப்பாற்றப்பட்டது.

இப்படி எத்தனையோ சம்பவங்கள் நம் மத்தியில் நடந்திருந்தாலும் நாம் அதை வீரமென்று கருதுவதில்லை.

ஆனால் இவர்களே உண்மையான வீரர்கள். சுயேச்சையாகவே தமது உயிரைப் பணயம் வைத்து இன்னொரு உயிரைக் காப்பாற்ற முன்வந்தவர்கள். இவர்கள்தான் உண்மையான வீரர்கள் என்கிறார் கசுன் பீ. சந்திரரத்ன.

ஆயிரம் ரூபா பண உதவியோடு ஆரம்பிக்கப்பட்ட வீரத் தன்மைக்கான மன்றத்தில் இன்று 1 1/2 லட்ச ரூபாய்க்கு மேல் நன்கொடை சேர்ந்திருக்கிறதாம். இது மக்கள் அங்கீகரிப்புக்கான அர்த்தம் என்றே கசுன் கூறுகிறார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி இன்னொரு உயிரைக் காப்பாற்றும் எவருக்கும் இந்த மன்றத்தின் மூலம் கௌரவம் அளிக்கப்படுகிறது. தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து செய்திகள் கிடைப்பது மிக மிக குறைவாதலால் தமிழ், முஸ்லீம்கள் விடுபட நேரிடுகிறதாம்.

எனவே தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் நடைபெறும் இவ்வாறான சம்பவங்களை ஆதாரத்துடன் எழுதி அனுப்பினால் அது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு பரிசுகளும் கௌரவமும் அளிக்கப்படும் என்கிறார் அவர்.

குல பேதங்களாலும், இனப் பிரச்சினையாலும், போட்டி பொறாமையாலும் மனிதன் மனிதனை அழித்துக் கொள்ளும் முயற்சி மும்முரமடைந்திருக்கும் இக் கால கட்டத்தில் உயிர் காக்க முன்வரும் உத்தமர்களை கௌரவிக்க நடக்கும் ஏற்பாடுகள் பாராட்டத்தக்கவை.

கசுன் பீ. சந்திரரத்னவின் முயற்சி இன்று உலகளாவியிருக்கிறது. இன்டர்நெட், ஈமெயில் ஊடாக உலக நாடுகளோடு இம் மகா புருஷர்களை இணைத்து மனிதப் புனிதர்களை இனங்காண வைக்கிறார். வளர்க அவர் பணி.

இது பொதுமக்களின் வீரத் தன்மைக்கான மன்றத்தின் முகவரி:

*"Kalyari"*
*Bekkegama Road,*
*Walana, Panadura.*
*Phone: 034-33073*

# கரப்பான்களுக்குமா குடும்பக் கட்டுப்பாடு?

வீடுகளில் அதிக தொல்லைதரும் பூச்சியென்றால் அது கரப்பான்தான். கரப்பான் என்றவுடனேயே முகம் சுளிக்காதவர்கள் எவரும் இல்லை. இவை எமது உணவுப் பண்டங்களை அசிங்கமாக்கி நோய் பரப்புவது மட்டுமல்ல, உடுப்புகள், ஆவணங்கள் போன்ற யாவற்றையும் அரித்து விடுகிறது. ஒரு அறையை நாம் சில நாட்கள் பூட்டி வைத்துவிட்டால், அல்லது ஒரு பெட்டியை, லாச்சியை சில நாட்களுக்கு துப்பரவு செய்யாவிட்டால் எங்கிருந்தாவது வந்து சேர்ந்து, குடியிருந்து குஞ்சும் பொரித்துவிடுகிறது. இந்தக் கரப்பான்கள் பெருகுவதைத் தடுக்க பலவேறு பூச்சிநாசினிகளையும் நாம் பாவித்துப் பார்த்து விட்டோம். அதையும் மீறி அவை பெருகுகின்றன என்பது ஒருபுற மிருக்க இக் கிருமிநாசினிகள் பாதுகாப்பானவையுமல்ல.

எனவே பாதுகாப்பான முறையில் கரப்பான்களை ஒழித்துக் கட்ட புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள், கரப்பான் பெருகுவதைத் தடுக்கக் கூடிய ஹோர்மோன் ஒன்றை அவற்றின் உடலிலிருந்தே கண்டுபிடித்துள்ளனர்.

இதன்மூலம் எதிர்காலத்தில் இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விடுதலை கிடைக்கும் என, இது தொடர்பாக அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற இரசாயன விஞ்ஞான சங்கத்தின் மாநாடொன்றில் கோனேல் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் **ஜெப்ரி ஸ்கொட்** தெரிவித்தார்.



உலகில் வேகமாகப் பெருகும் பூச்சிகளில் ஒன்று கரப்பான். மனிதனுக்கு தொல்லையாக இருப்பதும் இதன் இனப்பெருக்க வேகமே. உலகில் பெருந்தொகையான இரசாயனப் பொருட்கள் கரப்பொத்தான்களை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக கரப்பான்கள் அழிகின்றனவோ என்னவோ சூழல் மாசடைவது உண்மை.

**ஜெப்ரி ஸ்கொட், சிமோவென்** ஆகிய இருவரும் ஆண் கரப்பானின் பாலியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் மரபணு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். **P450** என்னும் இந்த மரபணுவின் குளோன் பிரதிகள் ஐந்தையும் இவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். இந்த மரபணு உண்டாக்கும் ஓமோன், கரப்பானின் பாலியல் நடவடிக்கையை முடக்குவதால் நாளடைவில் அவை மலடாக்கப்பட்டு அவற்றின் பெருக்கம் குறைந்துவிடலாமென நம்பப்படுகிறது.

நடக்குமா பார்ப்போம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எம். எச். எம். ஷம்ஸ்

# மனிதன்

நாய் குரைக்கிறது.

"சனியன்... மனுஷனை நிம்மதியாகத் தூங்கவாவது விடுகிறதா? பதினொன்றரை கழியும் வரை எழுதி எழுதி... மூளையும் களைத்து.. உடம்பெல்லாம் மாய்ந்து... படுக்கைக்கு வந்து பத்து நிமிஷம் கூட ஆகவில்லை. அதற்குள் இந்த ஜென்மம் இப்படிக் குரைத்துத் தள்ளுதே.

"நாய் வீட்டைக் காக்கும்" என்ற பாலர் வாக்கியத்தை உண்மைப்படுத்துவதற்குத்தானா இத்தனை முழக்கம்?

எரிச்சலோடு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். முன் வீடும் சுவரும் கற்சிலைகளாக - எதிரே மின்கம்பம் தூங்கி வழிய, பாதை மலைப்பாம்பு போல செத்துக் கிடக்க - உலகமே சாவீடாக... ஏன் இந்த நாய் மட்டும்?

அரைத் தூக்கக் கண்கள், மங்கிய நிலவொளியில் ஏதும் தட்டுப்படுகிறதா என்று துழாவ, 'கேட்'டுக்கு வெளியே பாதையில் இதே போல ஒரு நாய்ச் சகோதரம், விசாலமான பாதை தாராளமாக இருக்கும் போது குந்துவதற்கு என் வீட்டு கேட்டடிதானா இதற்குக் கிடைத்தது?

சே... அந்தப் பிராணியைப் பற்றி எனக்கேன் கவலை? இது என் வீட்டு நாய். காலை, மாலை, இரவு என்று எஞ்சுகிற எச்சில்களையெல்லாம் மிச்சமின்றி நக்கித் தீர்த்துவிட்டுமா இந்த நன்றிக் கேடு?

"நாய் நன்றியுள்ள மிருகம்" இதுவும் பாலர் பாடம்தான். கட்டாக்காலிச் சொறிநாய் வீட்டுக்கு வராமல் இது குரைத்து எச்சரிக்கின்றதா? அதுவும் நன்றிக் குணம்தான். ஆனால் காது வெடிக்கும் காட்டுக் கூச்சல் எதற்கு? அந்தக் கட்டாக்காலி நாய் கூட செவிடாக இருக்க முடியாதே!

நான் அளவுக்கதிகம் அலட்டிக் கொள்வது போன்ற ஓர் உள் உறுத்தல். நிசப்தத்தில் கற்பனை ஊற்று பீறிட்டுப் பாயுமாமே.

எனது நல்லதிர்ஷ்டம், சொறிநாய் கேட்டடியைக் காலி செய்து என் வீட்டு நாய்க்கு ஓய்வு கொடுத்தவாறே நகர்ந்தது.

நான் தொண்டையைச் செருமி ஜன்னலுக்கு வெளியே காறித் துப்பிவிட்டுத் திரும்ப, எனது நன்றிப் பிராணி ஜன்னலண்டை வந்து ஒரு புன்சிரிப்புடன் (அப்படி ஒரு நினைப்பு எனக்கு) வாலாட்டிவிட்டு விராந்தையில் படுத்து தலையை கேட்புறமாக நீட்டி வைத்தவாறு சுருண்டுகொண்டது.

அப்போதுதான் அந்த வாலாட்டம் என் நெஞ்சுக்குள் சாட்டையடி போல சுளீரென்று தாக்கியது.

இன்று - நாயைப் பட்டினி போடும் திட்டத்தின் மூன்றாவது நாள்.

இன்று பகல்கூட சாப்பாட்டு நேரம் தாண்ட, கொல்லையிலே அந்தப் பூவரச மரத்தடி என்ற தனது ஜாகையை விட்டு அடக்கமாக எழுந்து மரியாதையாகக் கிறுகி பின்னுடலைத் தாழ்த்தி வழக்கமான வாலாட்டுதலையும் நிகழ்த்தி பரிதாபமாகப் பார்த்தது.

அடித் தொண்டையிலிருந்து எழுந்த மெல்லிய ஊளைச் சத்தம் மனிதப் புலம்பல் போல உள்ளத்தை அறுத்தது.

மிகவும் சிரமத்துடன் மனதை கல்லாக்கிக்கொண்டு அதற்குரிய நோன்பை நிறைவேற்றும் சங்கற்பத்தோடு வாசலுக்குத் திரும்பிவிட்டேன். அப்போதும் கூட அது குரைத்து ஆர்ப்பாட்டம் பண்ணவில்லை. மூன்று நாள் பட்டினி என்பதற்காக கோபித்து அடம்பிடிக்கவில்லை. குசினிக்குள் புகுந்து பலாத்காரம் பண்ணவுமில்லை.



மரியாதையிலும் வாலாட்டலிலும் மாற்றம் தென்படாவிட்டாலும் அதன் நடையிலே சின்ன மாற்றம். உற்சாகமில்லை... விழப்போவது போல ஒரு தள்ளாட்டம்.

அதன தோற்றம் நெஞ்சுக்குள் சுடுநீரைக் கொட்டினாலும் மூன்றாம் நாள்தானே பிரச்சினை முடிந்துவிடும் - இப்படி ஓர் எதிர்பார்ப்போடு என்னையே நான் சமாதானப்படுத்திக்கொள்ள -

"என்ன இந்த சனியென எப்ப வெரட்டப் போறீங்க" - மனைவியின் குரல்.

"நாம என்ன நாயா வளக்கிறோம்? ஏதோ அநாதையா சிறிசில வந்தது. பாவமெண்டு மிஞ்சினது களப் போட்டம். அது இங்கேயே தங்கிவிடும் எண்டு சாத்திரமா பாத்தோம்" கொஞ்சம் சூடாகவே சொன்னேன்.

"இந்தப் பழங்கதையெல்லாம் இப்ப ஒதவாது. ஒங்கட செல்லப் புள்ள போடுற கூத்து வள் வரவரக் கூடுது"

"செல்லப் புள்ளயா? நானா அத வளக்கிறன்? அது பாட்டில வளருது"

"நீங்க எப்பவும் ஊட்டில இருந்தாத்தானே. வாளியில தண்ணி




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அல்லாத காரணத்தால்...



வெச்சா வந்து நக்குது... போன கெழம விராந்தயில சத்தி எடுத்து... ஊடு முழுக்க ஒரே நாத்தம்... ஒண்டில் அந்த சனியன அகத்தி உடோணும். இல்லாட்டி நான் அதுக்கு நல்ல பாடம் படிப்பிப்பன்''

பலநாள் அமுங்கியிருந்த ஆத்திரம் எரிமலையாக, நான் ஊமையானேன் கதிரைக்குள்.

"எனா சேர், ஒங்கட ஊடு சிங்கள ஊடு மாதிரி இரிக்கி...

அண்ணாந்து பார்க்க, மலைவீட்டு மாரிதாத்தா.

அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தேன்.

"நாய் நஜீஸ் (அசுத்தம்) இல்லியா சேர்? அது மேல்ல பட்டா ஏழு தரம் கழுவோணும் எண்டு எங்கட மார்க்கம் சொல்லுதே... இது ஒங்களுக்குத் தெரியவா?'' எனக்கு மார்க்கம் சொல்லித்தர இவ என்ன பெரிய...

நான் பொறுமையிழந்து வாயெடுக்க-

"நாய் வளக்கிற ஊட்டுக்குள்ள மலக்குகள் (தேவர்கள்) வரமாட்டாங்களே. இந்த நஜீஸ் நாயெ தொரத்தி உடுங்க ஸேர்''

நான் சூடாகப் பதில் கொடுத்திருப்பேன்.. மாரி தாத்தா ஒரு தற்குறி. பாரம்பரியமாக எது மார்க்கம் என்று தெரிந்து வைத் திருக் கிறாவோ அதற்கப்பால் எதுவும் தெரியாது. சொன்னாலும் ஒத்துக்கொள்ளாத மர மண்டை.

நான் மௌனம் காத்த ஞானியாக - மாரிதாத்தா காலை இழுத்து இழுத்து நடந்தார்.

போதும் பழைய நினைவுகள்! இனி நான் தூங்க வேண்டும். கட்டிலில் சாய்ந்து கண்களை மூடினேன்.

அந்த ஜீவன் - எலும்பும் தோலுமாக.. கண்களில் நீர் வழிய... வாலாட்டவும் பலமின்றி.. தள்ளாடித் தள்ளாடி.. பரிதாபமாக... என் கண்களுக்குள்.

சே! நாய்தான் அமைதியாகி விட்டதே. நான் மட்டும் அதன் நினைவுகளை நெருஞ்சியாகக் கொட்டிக் கொண்டு ஏன் அவதிப்பட வேண்டும்? மறு பக்கம் திரும்பிப் படுத்தேன். எங்கு பார்த்தாலும் அரையிருட்டில் நாய்... நாய்... நாய்!

ஆண்டவனே எனக்கு நிம்மதியைத் தா!

எப்படியோ மனதைக் கட்டிப் போடுவதில் ஓரளவு வெற்றிவாகை சூடி கண்கள் அதனை அனுபவிக்கும்போது -

வள்... வள்.. வள்!

முதற்குரைப்பை விட மூன்று மடங்கு பலமாக, அந்தச் சொறி நாயின் பிரவேசமா?

அநாதை நாய்க்கு கைகொடுத்த எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.

ஒரு நாள் கிணற்றடிக்குப் போன சின்னவனைப் பின்தொடர்ந்து வந்தது அந்த நாய்க் குட்டி. அவன் ஓட - அதுவும் துரத்த - ஆஹா பஞ்சுப் பொதி உருள்வது போல பிஞ்சுப் பார்வையில் குருகுருப்பு.

"பசந்தான நாய்க்குட்டி வாப்பா'' என்று சின்னவன் முதற் சான்றிழை வழங்க, அந்தத் தமிழை விளங்கிக் கொண்ட மாதிரி அதுவும் இங்கேயே தங்கிவிட்டது. கொல்லைப் புறத்துக்கு வரும் ஆடுகளை மழலைக் குரலில் குரைத்துத் துரத்திச் செல்லும்போது எல்லோருக்கும் ஓர் இலவசமான ரசனை. குட்டி நாயல்லவா? நல்ல வரவேற்பு. அதனை எம் வீட்டு அங்கத்தவனாக நாம் கருதாவிட்டாலும் அது அப்படியே நினைத்துக்கொண்டு ஒட்டிக் கொண்டது.

கன்னிப் பருவம்... நாய்க் காதலர்கள் வருகை.. மன்மத சல்லாபம்.. இரவில் வில்லன் - கதாநாயகன் சண்டைகள்... அரைத் தூக்கத்தில் எங்கள் கல்லடி - சொல்லடி... பிறகு இது ஈவிரக்கமின்றி ஏழு குட்டிகளைப் போட்டு குசேலர் குடும்பமாக தலையிடி தர... இப்படி அதன் வரலாற்றில் கசப்பான பக்கங்கள் தொடர்ந்தன.

வள்... வள்.. வள்..!

நடுநிசி வானம் சுக்கு நூறாக -

சே! என்ன வாழ்க்கை இது! மனுஷனுக்கு தூக்கம், நிம்மதி இல்லாவிட்டால் எது இருந்தால் என்ன? குரைப்பு ஓய்ந்தபாடில்லை. கதவைத் திறந்து இரண்டு போடு போட்டால்தான் மனம் ஓயும். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்த நான் ஜன்னல் வழியாக வெளியே பார்வையைச் செலுத்த,

என் தேகம் குறுகி பனிக்கட்டியாயிற்று.

ஒரு தலை. மனிதத் தலை. சுவருக்கு மேற்புறமாக மெல்ல நகர்வது தெரிந்தது. நாய் சுவரை நோக்கி எகிறிப் பாய்ந்தது. மிக ஆக்ரோஷமாக குரைத்துக் கொண்டே... இருந்தது.

அப்பாடா! தலை மறைந்தது. போய்விட்டான் ஆசாமி. ஆனால் நாயோ குரைப்பதை நிறுத்தவில்லை. மீண்டும் ஒரு துள்ளு



www.tamilarangam.net





**சே! நாய்தான் அமைதியாகி விட்டதே. நான் மட்டும் அதன் நினைவுகளை நெருஞ்சியாகக் கொட்டிக் கொண்டு ஏன் அவதிப்பட வேண்டும்? மறுபக்கம் திரும்பிப் படுத்தேன். எங்கு பார்த்தாலும் அரையிருட்டில் நாய்... நாய்... நாய்!**

துள்ளியது. வயிறு தரையில் தட்ட தொப்பென்று மண்ணில் விழுந்தது. சுவரோரத்தை விட்டு நகராமல் சிரமப்பட்டுக் குரைத்து... ஊளையிட்டு.. முனகி... கொஞ்ச நேரத்தில் விறாந்தைக் குத் திரும்பியது. அமைதி.

இங்கே விசுவாசமான ஒரு காவலாளி இருப்பதை திருட்டுப் பயல் அறிந்திருக்கமாட்டான். இந்த நாயும் இல்லாவிட்டால் என்ன நடந்திருக்கும்?

நிச்சயம் அவன் சுவரேறிக் குதித்து உள்ளே வந்திருப்பான். கூரையில் ஏறி ஓடுகளை விரித்து வீட்டுக்குள் இறங்கி - நான்தான் கண் மூடிக்கிடப்பேனே - என்னைக் கத்தியால் குத்தி நான் இரத்தத்தில் மிதக்க என் மனைவியின் வாயில் துணியை அமத்தி....

போதும்! பயங்கர நினைவுகளை மனதுக்குள் வளர்த்துக் கொள்வதால் யாருக்கு என்ன நன்மை? கள்ளன்தான் போய் விட்டானே!

மூன்று நாள் பட்டினி... உடம்பில் சக்தியில்லை... என்றாலும் இரவுக் கடமைக்காக வழக்கமான இடத்துக்கு வந்து தனது இயலாமையைக் கூட கணக்கெடுக்காமல் எப்படியோ திருடனைத் துரத்தி விட்டதே.

மனிதர்களில் மட்டுமா மகாத்மாக்கள்?

மீண்டும் நீர் வழியும் கண்கள்... எலும்பு துருத்திய உடல்... தள்ளாடிய நடை... கண்ணுக்குள்.

"நான் இனி விடியும் வரை தூங்க முடியாது. இந்த நாய் - இல்லையில்லை அதன் நினைவு என்னைத் துரத்துவது நிற்காது. சிலர் மனிதனுக்குத் தீமை செய்தே நிம்மதியைப் பறித்து விடுவார்கள். இது நன்மை செய்தே என் நிம்மதியைக் குலைக்கிறதே!

"ஒண்டில் இந்த சனியென நீங்க அகத்தி உடோனும். இல்லாட்டி நான் அதுக்கு நல்ல பாடம் படிப்பிப்பேன்" மனுஷியின் அந்த சவாலைக் கேட்ட நான் அமைதியாக -

"ஏன் அத கொண்டு போடத் திட்டமா? அநியாயமா பாவத்தத் தேடிக் கொள்ள போறியா? நபி நாயகம் சொன்ன ஹதீஸ் (வாக்கு) தெரியுமா?

ஒரு வேசிப் பொம்புள ஒரு நாள் கிணத்தடியால போனாவாம். அப்ப நடுப் பகல். கடும் வெயில். ஒரு நாய் தாவம் தாங்க முடியாமல் நாக்கத் தொங்கப் போட்டுக் கொண்டு கிணத்தடிக்கு வந்து அந்தப் பொம்புளயப் பாத்திச்சாம். பொம்புளக்கி நிலம வெளங்கிடிச்சி. உடனே நாய்க்கு குடிக்க தண்ணி குடுத்தாவாம். அந்த நன்மை காரணமாக அல்லா அவள மன்னிச்சு சொர்க்கத்துக்கு அனுப்பி வெச்சானாம்.

சம்பவத்தைச் சொல்லும் வரை முகத்தைக் கோணிக் கொண்டிருந்த என் இல்லத்தரசி குறுக்கிட்டாள்.

"நான் சாப்பாடே குடுத்திருக்கேனே... அப்ப அல்லா எனக்கு எவ்வளவு நன்மையத் தருவான்... அத உடுங்கோ... இந்த சனியன்ட கரச்சல எப்படிச் சரி நிறுத்தோணும்"

"என்னை என்ன செய்யச் சொல்றாய்?"

"அதெ ஊட்டிலிருந்து தொரத்தி உடோணும்"

"சரி, நான் தொரத்த விருப்பம்... அது போகாட்டி என்ன செய்யிறது?"

"நான் கேள்விப்பட்டிருக்கேன். நாயெ மூணு நாளெக்கி பட்டினி போட்டா மூண்டாவது நாளெக்கி ஊட்டயுட்டு பெய்த்திடுமாம்"

அப்பாடா! நாயின் உயிருக்கு ஆபத்தில்லாமல் பிரச்சினையைத் தீர்க்க வழி சொல்லிவிட்டாள் மனுஷி.

"பெண் புத்தி பின் புத்தி" என்றதெல்லாம் நிலப் பிரபுத்துவ காலப் பழமொழி. நாங்கள் தான் பின் புத்திக்காரர்கள். உலகத்துக்கு அமைதியீனம் ஏற்பட்டது யாரால்? ஆண்களால்தானே?

நான் மனுஷியின் யோசனையை ஏற்றுக்கொண்டேன். இன்று இரவை எப்படியாவது கடத்தி விட்டால் நாளைக்கு நாலாவது நாள். நாய்த் தொல்லை தீர்ந்தது. நிம்மதி.

நேரம் ஒரு மணியைத் தாண்டியிருக்க வேண்டும். நாயின் அரவம் இல்லை. திருடனைத் துரத்திவிட்ட திருப்தியில் ஓய்ந்திருக்கும். ஆனால் வேறொரு சத்தம் ஆரம்பித்தது - பயங்கர இடி முழக்கம்... பெருங்காற்றின் அகோரக் கூச்சல்... மரங்கள் தலைவிரிகோலமாக பேயாட்டம் போடும் இரைச்சல்.... மழை!

வழக்கம் போல காலை விடிந்தது. ராத்தூக்கம் போதாமையால் சூரியக் கதிர் அறையைத் தட்டிய பின்பே எனது பள்ளி எழுச்சி.

கழுவித் துடைத்த நிலத்தின் முகம் இரவு மழையை இனம் காட்டியது.

குளியலுக்கான ஆயத்தத்தோடு கிணற்றடி செல்ல - எங்கள் நாய் காலை வணக்கமாக சில வாலாட்டல்களைச் சமர்ப்பிப்பது வழக்கம். இன்று அந்த நிகழ்ச்சி இடம்பெறவில்லை.

பெண் பேச்சு உண்மையாகி விட்டதா? மூன்று நாள் பட்டினியோடு நாய் பிரியாவிடை பெற்றுவிட்டதா?
எங்கிருந்தாலும் வாழ்க! வருத்தத்தோடாவது வாழ்த்தாமல் வழியில்லை.

"உங்க கூட்டாளியக் காணல்ல" ஒரு வெற்றிப் புன்னகையுடன் மனுஷி எதிரில்.

இரவு நடந்த சமாச்சாரங்களைச் சொல்லலாமா? அவசியமில்லை. கதாநாயகனே போய்விட்டபின் கதைக்குத்தான் என்ன அவசரம்?




**ஊர்த் தீயை**
**அணைக்கலாம்**
**உலைத் தீயிலும்**
**ஒரு கண் இருக்கட்டும்.**
**எட்டு மணி நேரம்**
**வேலை செய்ய வேண்டும்**
**எட்டு மணி நேரம்**
**தூங்க வேண்டும்.**
**எத்தனை மணி நேரம்**
**வாழ வேண்டும்?**

**- விக்ரமாதித்யன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இனி பயமில்லாமல் தண்ணி வாளிய வெக்கலாம். ஊடும் கொஞ்சம் துப்பரவா இரிக்கிம்."

தீர்ப்பு வெளிவந்துவிட்டது. எனக்கென்ன? அநாதை நாய் இருந்தால் என்ன தொலைந்தால் என்ன?

"வாப்போவ்! இங்க ஓடியாங்கோ..." சின்னவனின் குரலில் அதிர்ச்சி. கழிவறையின் கூரை இடிந்து விழுந்து விட்டதா? ஓடினேன். கண்கள் வீட்டின் பின்புற ஜன்னலில் குத்தி நின்றன.

ஜன்னல் கதவு கீழே கிடக்க கம்பிகள் உடைந்து - இல்லை உடைக்கப்பட்டு - நான் சிலையாய் நிற்க பையன் ஜன்னலினூடாக வீட்டுக்குள் பார்த்தான். "வாப்பா ராவு ஊட்டுக்கு கள்ளன் வந்தீக்கியான்" பெருமூச்சுடன் வார்த்தைகள் முட்டிச் சிதறின.

இருவரும் வீட்டுக்குள் ஓடினோம். நீண்டகாலமாக பின்கட்டில் அபாய அறிவிப்புச் செய்து கொண்டிருந்த ஜன்னல்தான் அது. அதை மாற்றி புது ஜன்னல் போடும் திட்டம் துண்டு விழும் பட்ஜட்டில் ஓரம் கட்டிவிட்ட சங்கதி.

மனைவி ஒப்பாரி வைத்துக் கொண்டே வந்து அங்கிருந்த பழைய அலுமாரியைப் பார்க்க, அதன் கதவும் விரிந்திருந்தது. நிர்வாண கோலத்தில்.

"ஏண்ட புடவெயளெல்லாம் போச்சே" காலை அமைதியைக் கிழித்தது ஓலம்.

"வேறு என்ன போயிடிச்சென்று பாரு" வீட்டிலிருந்த மற்ற அலுமாரிகள் பத்திரமாக இருந்தன. மனுஷி பாவிக்கும் பிடவைகளும் பழைய உடுப்புகளும்தான் அபேஸ் ஆகியிருந்தன. யார் செய்த புண்ணியமோ?

"பன்னிரெண்டு மணிக்கெல்லாம் நாய் குரைத்தது. நான் எழும்பிப் பார்த்தேன். முன்புறத் தாப்பெயால ஒருத்தன் எட்டிப் பாத்தான். நாய் குலச்சத்தோட போயிட்டான்" என்று இரவுச் சம்பவத்தை சுருக்கமாகச் சொன்னேன்.

"இது ஒரு நாலு மணிக்கி மட்டும் நடந்தீக்கோணும். அப்ப நல்ல மழ. நான் முழிச்சிக் கொண்டன்.... கொல்லப் பொறமா நாய் கொலச்ச சத்தம் கேட்டுது... மிச்ச நேரம் கொலச்சது. மழயில படுக்க எடம் இல்லாம தான் கொலச்சதெண்டு நெனச்சி பேசாம மறுபொக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டன்" இது மனுஷி.

"நாய் கொலச்சது எனக்கும் கேட்டது வாப்பா. மிச்ச நேரம் கொலச்ச பொறவு ஒரு பெரிய சத்தம் கேட்டது... அடுத்த ஊட்டு காதர் மாமா தான் நாய்க்கி அடிச்சீப்பாரு எண்டு நெனச்சன்... அதுக்குப் பொறவு நாயட சத்தம் கேக்கல்ல."

சின்னவனின் வாக்குமூலம்.

திருட்டு நடந்துவிட்டது. எப்படியோ தலையோடு வந்தது தலைப்பாகையோடு போச்சுது. முடிந்துபோன விஷயத்தைப் பற்றி கவலைப்பட்டு என்ன பயன்?

பிடவைகள் திருடன் கைக்குப் போய்விட்டாலும் நாய்ச் சனியன் தொலைந்துவிட்ட நிம்மதி மனுஷியின் முகத்தில் களைகட்டியிருந்தது.

பிரியாவிடை பெற்ற நாய் கடைசி நாள் சேவையைச் செய்து விட்டுத்தான் போயுள்ளது. அப்படியானால் அதே திருடன் கொல்லைப்புறமாக வந்து கைவரிசையைக் காட்டும்போது அது என்ன செய்தது? குரைப்பைச் சகிக்காமல் அடுத்த வீட்டு காதர் நானா கொடுத்த அடியை கடைசி அன்பளிப்பாக வாங்கிக் கொண்டு ஓடிவிட்டதா? எனக்குள் ஒரே குழப்பம்.

"வாப்போவ்! ஓடியாங்கோ... இங்க பாருங்கோ"

உச்சஸ்தாயியில் சின்னவனின் குரல்... கிணற்றுக்குப் பின்புறம் வாழை மரத்தடியிலிருந்து ஓங்கி ஒலித்தது.

நான் மறுபடி ஓட்டம். ஆண்டவனே இது என்ன அநியாயம்! என் உள்ளமும் உடலும் பதற... கண்கள் நிலைக்குத்தி நிற்க அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஓடிப்போய்விட்ட ஜீவன்... வீட்டிலிருந்தல்ல இந்த உலகத்தை விட்டே பிரியாவிடை பெற்ற நிலையில்.

மனுஷியும் என் பின்னால் நாடியில் கையைக் குத்தியவாறு பெருமூச்சுவிட்டாள். அவளது கண்களிலும் நீர் கட்டியிருந்தது.

யாரும் பேசவில்லை. மண்டை பிளந்து இரத்தப் பிரவாகம் கட்டியாகி முகத்திலும் கழுத்திலும் மாலையாக - எக்குண்ட வயிற்றுக்குழியின் ஓரமாக எலும்புகள் துருத்திய நிலையில் அது தனது தியாக யாத்திரையை முடித்திருந்தது.

'வாப்பா நாயட வாயெப் பாத்தீங்களா?"



**திருடன் கொல்லைப்புறமாக வந்து கைவரிசையைக் காட்டும்போது அது என்ன செய்தது? குரைப்பைச் சகிக்காமல் அடுத்த வீட்டு காதர் நானா கொடுத்த அடியை கடைசி அன்பளிப்பாக வாங்கிக் கொண்டு ஓடிவிட்டதா?**

நான் உற்றுப் பார்த்தேன். கிழிந்துபோன சாரத்தின் துண்டொன்று பல்லிடுக்கில் நார் நாராக விசிறிக் கிடந்தது.

உண்ணா நோன்பு நோற்றதற்கு திருடனின் சாரத் துண்டொன்றையும் அவனது பலமான மரண அடியையும் பரிசாகப் பெற்று மரணித்துவிட்ட அந்த ஜீவன் நஜீஸ் நாயா?

அதற்கு நான் சமாதி கட்டவில்லை - மனிதன் அல்லாத காரணத்தால். ●



### விலங்குகளின் பாசம்

நாய்க் குட்டியைக் கட்டியணைக்கிறது அன்பு காட்டுகிறது குரங்கு. வியப்பாக இருக்கிறதல்லவா? எம்மிடம் இல்லாத ஒன்றை இன்னொருவரிடம் பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கும். யாரும் சொல்லிக் கொடுக்காமல் தானாக ஊறும் இந்தப் பாசம் ஐந்தறிவு படைத்த விலங்குகளுக்கு எப்படி வந்தது?

இந்தக் குரங்கை வளர்க்கும் பங்களாதேஷ்காரர் சொன்னதாவது, இந்த நாய்க்குட்டி பிறந்து ஆறுமாதத்தில் அதன் தாய் இறந்துவிட்டதாம். அன்று முதல் அநாதையாகிவிட்ட இந்த நாய்க்குட்டியை அரவணைத்து அன்புகாட்டி வருகிறதாம் இந்தக் குரங்கு.

நாம் முதலில் மனிதர்களிடமாவது அன்பு காட்டக் கற்றுக் கொள்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கடத்தல் பொருட்கள்

அட்டவணை - 01. இலங்கை பொலிஸ் (1989 - 1995)

| தகைமை | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 19[illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| பொலிஸ் மா அதிபர் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | |
| பிரதி பொலிஸ் மா அதிபர் | 24 | 23 | 23 | 27 | 40 | 47 | [illegible] |
| பொலிஸ் அத்தியட்சகர்/ உதவி பொலிஸ் அத்தியட்சகர் | 403 | 381 | 364 | 414 | 495 | 549 | 5[illegible] |
| போக்குவரத்துப் பொலிசார்/ பொலிஸ் உதவிப் பரிசோதகர் | 2561 | 2978 | 2772 | 3005 | 3251 | 3300 | 321[illegible] |
| சார்ஜன் மேஜர் | 114 | 97 | 92 | 86 | 58 | 89 | [illegible] |
| பொலிசாரும் சாரதிகளும் | 21995 | 23692 | 23401 | 21975 | 21776 | 19720 | 2038[illegible] |
| பெண் பொலிசார் | 1024 | 1041 | 1023 | 1059 | 1042 | 990 | 99[illegible] |
| ஏனையவர்கள் | 340 | - | - | - | - | - | |
| மொத்தம் | 29,149 | 30,977 | 30,579 | 30,642 | 30,407 | 30,236 | 30,60[illegible] |

# குற்றவாளிகளும்



தினந்தோறும் வெளியாகும் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கும் போது குற்றச் செயல்கள் சம்பந்தமான செய்திகள் ஏராளமாக இருப்பதைக் காணலாம். இவை ஒவ்வொன்றையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது சர்வதேச அளவிலான குற்றச் செயல்களையும் நமது நாடு விஞ்சிவிடும் போல் தெரிகிறது.

குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டுமென்ற கருத்து நியாயமானதே. ஆனாலும் இன்று குற்றஞ் செய்தவர்கள்தானா தண்டனை பெறுகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எமது நாட்டின் சிறைச்சாலைகளில் சிறைப்பட்டுள்ள எல்லோரும் உண்மையான குற்றவாளிகளா?

இதற்கான விடையும் குற்றவாளிகளின் உலகத்திலேயே மறைந்திருக்கிறது. இலங்கையில் நடத்தப்படும் 90 வீதமான குற்றச் செயல்கள் தனி நபரினால் செய்யப்பட்டதல்ல என்று இப்போது தெரிய வந்திருக்கிறது. இலங்கையில் இன்று குற்றச் செயல்கள் என்பது பெரும் தொழிற்சாலையாக விஸ்வரூபமெடுத்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்வோர் அவசர கோபத்தினால் அல்லது தீராப் பசியினால் குற்றச் செயல்கள் புரிபவர்களல்ல. மாறாக நன்கு பயிற்றப்பட்ட தொழில் ரீதியாகச் செய்யும் குற்றவாளிகள் ஏனைய தொழிலாளர்களைப் போன்றே குற்றச் செயல் தொழிற்சாலைகளிலும் முதலாளிமார், நிர்வாகஸ்தர்கள் இருப்பர். இவர்களின் கீழ் சம்பளத்துக்கு வேலை செய்யும் பணியாட்களும் இருக்கின்றனர். கொலை, தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை எடுத்துச் செல்லுதல், மற்றும் விற்பனை செய்தல், கொள்ளையடித்தல், விலைமாதர்களுக்குத் தரகர் வேலை செய்தல், கப்பம் வாங்குதல், மிரட்டுதல், பலாத்காரமாக சொத்துக்களை அபகரித்தல் போன்ற சேவைகள் இந்த வேலைக்காரர்களினதும், வேலைக்காரிகளினதும் ஊதியம் பெறும் வழிகளாகும்.

இவர்களுக்கு மாதச் சம்பளத்துக்குப் புறம்பாக ஒரு விடயத்தை கச்சிதமாக முடித்துவிட்டால் 'மேலதிக கொடுப்பன'வும் கொடுக்கப்படுகிறது. ஏனைய தொழிற்சாலைகளில் இலாபத்துக்காக போட்டி நடைபெறுவதைப் போல குற்றச் செயல் தொழிற்சாலையிலும் நடைபெறுகின்றன.

அட்டவணை - 02.
இலங்கையில் நடைபெற்ற பயங்கர குற்றச் செயல்கள் 1989 - 1994 வரை

| குற்றங்கள் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|---|
| கடத்தல் | 604 | 800 | 545 | 706 | 619 | 1241 |
| தீ வைத்தல், தாக்குதல் | 6798 | 5968 | 5621 | 4713 | 3403 | 6345 |
| வீட்டுடைப்பு | 8437 | 9895 | 9508 | 9577 | 9097 | 10211 |
| மாட்டுக் களவு | 553 | 715 | 1035 | 923 | 793 | 847 |
| கடும் சேதம் விளைவித்தல் | 1110 | 1282 | 1669 | 1890 | 1779 | 0235 |
| கொலை | 8127 | 1985 | 1561 | 1423 | 1286 | 1336 |
| கொலை முயற்சி | 1122 | 368 | 313 | 321 | 366 | 442 |
| கத்திக்குத்து | 5847 | 5616 | 6522 | 6473 | 6353 | 7385 |
| பாலியல் சேஷ்டை/வல்லுறவு | 373 | 369 | 374 | 371 | 386 | 518 |
| திட்டமிட்ட சதி | 30 | 32 | 52 | 53 | 64 | 70 |
| | 197 | 49 | 34 | 42 | 122 | 97 |
| கொள்ளை / களவு | 12285 | 5702 | 3934 | 3638 | 3189 | 3618 |
| சைக்கிள் திருட்டு | 1862 | 1629 | 192 | 1850 | 1843 | 1708 |
| பணம் பறித்தல் | 109 | 57 | 82 | 44 | 35 | 52 |
| ஏமாற்றுதல் | 2271 | 2803 | 3392 | 3493 | 3238 | 4281 |
| சொத்துக்கள் திருட்டு | 8767 | 10482 | 11149 | 10937 | 10811 | 11597 |
| வேறு களவுகள் | 233 | 351 | 428 | 418 | 502 | 404 |
| கள்ள நோட்டு | 157 | 101 | 96 | 60 | 79 | 72 |
| தேசத் துரோகம் | 29 | 21 | 8 | 10 | 3 | 43 |
| சட்டவிரோத ஆயுதங்கள் | 143 | 20 | 38 | 18 | 20 | 41 |
| ஊழல் குற்றச்சாட்டு | 3 | 19 | 3 | 3 | 1 | 1 |
| மொத்தம் | 59,056 | 48,264 | 48,356 | 46,963 | 43,990 | 52,344 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒவ்வொரு குற்றச் செயல் நிறுவனங்களினதும் போட்டி காரணமாக சில குற்றவாளிகள் பல வேறு குற்றச் செயல் நிறுவனங்களாலும் கொலை செய்யப்படுவது அல்லது அழிக்கப்படுவது இந்த போட்டி நிலைமையினாலாகும். குற்றச் செயல்கள் புரிவோரின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தபோதிலும் அவர்களை வழிநடத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

இதனை நடத்திச் செல்லும் சூத்திரதாரிகள் பொலிசாரினால் கைது செய்யப்படுவது மிகக் குறைவாகும். இவர்களைப் பிடிப்பதற்கான வரம் இன்னும் பொலீசாருக்குக் கிடைக்கவில்லை.



# தண்டனையும்

இருந்த போதிலும் சில குற்றவாளிகளைப் பொலீசார் பிடிக்கவே செய்கின்றனர். ஆனால் இவர்களில் 95வீதமானோர் குற்றச் செயல் தொழிற்சாலைகளில் அடிமட்ட ஊதியம் பெறுபவர்களே. சிறைச்சாலைகளில் தண்டனை பெறுபவர்களும் இவ்வாறானவர்களே. உண்மையான குற்றவாளிகள் தண்டனை பெறுவது எப்போது?

1980களின் கடைசிப் பகுதியும் 1990களின் ஆரம்பப் பகுதியும் எமது நாட்டில் குற்றச் செயல்கள் கொழுந்துவிட்டெரிந்த காலம் எனலாம். இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற குற்றச் செயல்கள், குற்றவாளிகளின் தன்மை போன்றவற்றை ஆராய்வதற்கு கீழேயுள்ள அட்டவணைகளில் பார்க்கலாம்.

முதலாவதாக நாம் பொலீஸ் திணைக்களத்துக்குள் நுழைவோம்.

இலங்கையின் நில விஸ்தீரணத்தை நோக்கும் போது மேற்படி பொலீஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தாராளமானதாகும். ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் இது வரவேற்கத்தக்க எண்ணிக்கையாகும். இருந்தும் இப் பொலீஸ் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்தார்களா என்பதைப் பார்க்க குற்றச் செயல் உலகத்தைச் சற்று எட்டிப் பார்ப்போம்.

**அட்டவணை 02.**இல் இருந்து விளங்குவதென்னவென்றால் அந்தந்த வருடங்களில் இலங்கையில் நடைபெற்ற குற்றச் செயல்களின் எண்ணிக்கையல்லாமல் பொலிசாரினால் பதிவு செய்யப்பட்ட பயங்கர குற்றங்களின் எண்ணிக்கையாகும். அதிலிருந்து இலங்கையில் வருடமொன்றுக்கு சுமார் 50,000 குற்றச் செயல்கள் நடைபெறுவதை நாம் அவதானிக்கலாம். ஆனால் இக்குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுகிறார்களா என்பதை **அட்டவணை 03** இனைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும்.

**அட்டவணை 03** ஐப் பார்க்கும்போது சிறைச்சாலைகளில் தற்போது இருக்கும் இட நெருக்கடிகள் ஏன் ஏற்படுகின்றதென்பது புரியும். அல்லது பொலீசாரின் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கும் விதம் பற்றிப் புரியும். எப்படியோ குற்றச் செயல்கள் மேலும் அதிகரிப்பதற்கு பொலீஸ் திணைக்களமும், சிறைச்சாலைகளும் காரணமாய் அமைந்திருக்கின்றன என்பது வெளிப்படையாகவே விளங்குகிறது. **அட்டவணை 04.** ஐப் பார்க்கும்போது இது புரியும்.

**அட்டவணை - 03.**
**குற்றவாளிகள் என நிருபிக்கப்படாமல் சிறையில் இருந்தோர்.**

| வருடம் | எண்ணிக்கை |
|---|---|
| 1998 | 36,945 |
| 1989 | 38,559 |
| 1990 | 57,905 |
| 1991 | 63,145 |
| 1992 | 66,456 |
| 1994 | 63,263 |



***3ம் 4ம் அட்டவணைகளைப்*** பார்க்கும் போது நாம் விளங்கக் கூடியது என்ன? 1988இல் குற்றவாளிகள் என உறுதி செய்யப்பட்ட 8299 பேரோடு குற்றவாளிகள் என உறுதி செய்யப்படாத 36,945 பேர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். 1994இல் குற்றவாளிகள் என உறுதி செய்யப்படாதவர்கள் 63,293 பேர் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார்கள். இவற்றை அவதானிக்கும்போது எமது நாட்டில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக எந்தளவு அசட்டையாகச் செயற்பட்டிருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

### ஹெரோய்ன் முதலிடம்

4ம் அட்டவணையைப் பார்க்கும்போது இலங்கையின் குற்றச் செயல்களுக்கு மத்தியில் தடை செய்யப்பட்டிருந்த போதைப் பொருள்களின் வியாபாரம் முதலிடத்தை வகிக்கிறது.

**அட்டவணை - 4.**
**1988 முதல் 1994 வரை குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறைவாசம் அனுபவித்தோர்**

| தண்டனைக்குள்ளான குற்றங்கள் | 1988 | % | 1989 | % | 1990 | % | 1991 | % | 1992 | % | 1993 | % | 1994 | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தடை செய்யப்பட்ட போதைவஸ்து | 2337 | 28.2 | 3091 | 38.6 | 6654 | 47.1 | 7642 | 40.2 | 5915 | 32.4 | 6656 | 35.7 | 5660 | 34.91 |
| கலால் வரி | 786 | 9.5 | 1275 | 15.9 | 2248 | 15.9 | 5723 | 30.1 | 4928 | 27.0 | 4873 | 26.1 | 4002 | 24.6 |
| ஏனையவை (2ம் அட்டவணையின்படி) | 5176 | 62.4 | 3648 | 45.5 | 5226 | 37.0 | 5654 | 29.7 | 7408 | 40.6 | 7115 | 38.2 | 6579 | 40.5 |
| மொத்தம் | 8299 | | 8014 | | 14128 | | 19019 | | 18251 | | 18644 | | 16241 | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அட்டவணை - 05.**
**குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறைவாசம் அனுபவிப்பவர்கள் (கல்வியறிவின் அடிப்படையில்)**

| கல்வி மட்டம் | வருடம்/எண்ணிக்கை 1991 | | வருடம்/எண்ணிக்கை 1992 | | வருடம்/எண்ணிக்கை 1993 | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ஆரம்பப் பள்ளி | 218 | 1601 | 296 | 924 | 318 | 1003 |
| 1 - 5ம் வகுப்பு வரை | 294 | 1764 | 227 | 2626 | 232 | 2149 |
| 5ம் வகுப்பு சித்தி | 199 | 5869 | 164 | 5307 | 165 | 6266 |
| 8ம் வகுப்பு சிததி | 191 | 7922 | 114 | 8120 | 60 | 7956 |
| க. பொ. த. (சா.த) சித்தி | 95 | 709 | 26 | 371 | 03 | 408 |
| க. பொ. த. (உ. த) சித்தி | 13 | 135 | 05 | 96 | 01 | 82 |
| பட்டதாரி | 01 | 01 | - | - | 01 | - |
| ஏனையவர்கள் | - | 07 | - | 02 | - | - |

**அட்டவணை - 06.**
**குற்றவாளிகளாகக் காணப்படாது சிறைவாசம் அனுபவிப்பவர்கள் கல்வியறிவின் அடிப்படையில்**

| கல்வி மட்டம் | வருடம்/எண்ணிக்கை 1991 | | வருடம்/எண்ணிக்கை 1992 | | வருடம்/எண்ணிக்கை 1993 | |
|---|---|---|---|---|---|---|
| | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் |
| ஆரம்பப் பள்ளி | 1095 | 5916 | 893 | 8013 | 1061 | 6630 |
| 1 - 5ம் வகுப்பு வரை | 1287 | 17657 | 1706 | 17090 | 1671 | 16644 |
| 5ம் வகுப்பு சித்தி | 777 | 18369 | 998 | 18553 | 963 | 16464 |
| 8ம் வகுப்பு சிததி | 492 | 14153 | 593 | 13837 | 488 | 16242 |
| க. பொ. த. (சா.த) சித்தி | 161 | 2595 | 93 | 3551 | 102 | 4056 |
| க. பொ. த. (உ. த) சித்தி | 55 | 503 | 24 | 1040 | 9 | 971 |
| பட்டதாரி | 3 | 52 | 3 | 61 | 1 | 44 |
| ஏனையவர்கள் | - | 20 | 1 | - | - | - |

இது முன்னேறிக்கொண்டே போகிறது. இதன் வளர்ச்சிப் போக்கை அவதானித்தால் ஹெரோய்ன் வியாபாரம் ஒரு தொழிற்சாலை போல் செயற்படுகிறது என்பது விளங்கும். பாதாள உலகம் என்று சொல்பவர்களின் பிரதான வருமான வழியும் ஹெரோய்ன் வியாபாரம்தான் என்பதில் சந்தேகமில்லை. இதனால் குற்றச் செயல்களைக் குறைப்பதா? ஹெரோய்ன் வியாபாரத்தை முறியடிப்பதா? என்ற இரண்டும் ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது.

இருந்தும் சட்டத்தைக் காப்பவர்கள் இது விடயத்தில் எடுத்திருக்கும் முயற்சிகள் வருந்தக் கூடியதே. பொலிசார் குற்றவாளிகளைப் பிடிக்க முயற்சி செய்திருந்தாலும் அதற்கான தண்டனையைப் பெறுபவர்கள் யார்?

சின்னச் சில்லறை ஹெரோய்ன் வியாபாரிகளைப் பிடித்து விடுவதால் இக்குற்றச் செயல்கள் ஒழிந்துவிடும் என்று எதிர்பார்ப்பது வீணவாவாகும். இதனால் ஒருபோதும் ஹெரோய்ன் விற்பனை போன்ற பெருங் குற்றச் செயல்களை ஒழிக்க முடியாது. இதில் ஈடுபட்டுள்ள பெரும் வியாபாரப் புள்ளிகளை பொலிசாருக்கு இனந் தெரியாதா? அல்லது அந்த 'கோட் பாதர்களை' மடக்க முடியாதா? இல்லையேல் அவர்களின் பின்னால் அரசியல் நிழலாடுகிறதா என்பது பொது மக்கள் கேட்கும் வினா?

குற்றச் செயல்களுக்கும் அறியாமைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாக சமூக குற்றச் செயல் விசேடத்துவம் பெற்றவர்கள் கூறுகிறார்கள். *5ம் 6ம் அட்டவணைகளைப்* பார்க்கும்போது அது எமக்குப் புலப்படுகிறது.

ஆனால் கல்வியறிவு பெறுபவர்களின் எண்ணிக்கை கூடினால் சிறைவாசம் செய்பவர்களின் எண்ணிக்கை குறையும் என்பது நியாயமானதும், இது ஒன்று மட்டும்தான் தீர்வெனவும் நாம் கூற முடியாது.

இலங்கையில் குற்றச் செயல்கள் அதிகரித்துச் செல்வதற்கு மூல காரணமாய் இருப்பது தொழிலில்லாமையே. பாதாள உலகத்தை ஆட்டிக் கொண்டிருப்பவர்கள் படித்தவர்களல்ல. ஆனால் அவர்களில் படித்தவர்களும் இவ் வேலையில் இணைந்து கொள்வது மடமையாலல்ல. மாறாக தொழிலில்லாமையினாலேயே. இந்த அடிப்படையில் குற்றச் செயல்களை ஒழிக்கும் பெயரில் வெறுமனே சின்னச் சின்னக் குற்றவாளிகளையும் பெரிய தாதாக்களின் ஏவொட்களையும் மட்டுமே கைது செய்து சிறைச்சாலைகளை நிரப்புவதை விடுத்து குற்றச் செயல்களின் ஆதி மூலங்களை மடக்கிப் பிடிக்க முயற்சி எடுக்காவிட்டாவிட்டால் குற்றச் செயல்களை ஒழிப்பது என்பது வெறும் வேடிக்கையாகும். இது வெறுமனே பொலீஸ் - கள்ளன் விளையாட்டாக மாறிவிடும்.

- நன்றி: யுக்திய.

**'பொறுக்ஸ்'**

தாய்ப் பாஷை என்பதற்காகவோ, நாட்டுப் பாஷை என்பதற்காகவோ எனக்குத் தமிழ்ப் பாஷையிடம் எவ்விதப் பற்றும் இல்லை. அல்லது, தமிழ் தனி பாஷை என்பதற்காகவோ, மிகப் பழைய பாஷை என்பதற்காகவோ, அகத்தியரால் உண்டாக்கப்பட்ட பாஷை என்பதற்காகவோ எனக்கு அதில் பற்று இல்லை. வஸ்துவுக்காக என்று எனக்கு ஒன்றினிடத்திலும் பற்று கிடையாது. அது மூடப் பற்று. மூடப் பக்தியே ஆகும்.

குணத்திற்காகவும், அக்குணத்தினால் ஏற்படும் நற்பயனுக்காகவும்தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கக் கூடும். எனது பாஷை, எனது தேசம், எனது மதம் எனபதற்காகவோ, எனது பழமையானது என்பதற்காகவோ ஒன்றையும் நான் பாராட்டுவதில்லை.

எனது நாடு எனது லட்சியத்திற்கு உதவாது என்று கருதினால், உதவும்படி செய்ய முடியாது என்று கருதினால் உடனே விட்டுவிட்டுப் போய்விடுவேன். அதுபோலவே, எனது பாஷை என்பதானது எனது லட்சியத்திற்கு, எனது மக்கள் முற்போக்கடைவதற்கு, மானத்துடன் வாழ்வதற்குப் பலனளிக்காது என்று கருதினால் உடனே அதை விட்டு விட்டு, பயனளிக்கக் கூடியதைப் பின்பற்றுவேன்.

- ஈ.வெ.ரா. பெரியார்.




**மலர்ந்தும் மலராத பாதி மலர் போல**
**வளரும் விழி வண்ணமே**
**வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக**
**விளைந்த கலை அன்னமே**
**- கண்ணதாசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விரும்பத்தகாத விருது

ஏப்ரல் 19ம் திகதி கொழும்பில் ஒரு சமாதான சன்மான வைபவம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் விருது வழங்கப்படவிருக்கின்ற முப்பதுக்கும் மேற்பட்டவர்களின் பெயர்கள் பதினாறாம் திகதி பத்திரிகையில் வெளியாகி இருந்தன.

இச்செய்தி பலரை ஆச்சரியத்திலாழ்த்தியது மட்டுமல்ல எரிச்சலடையவும் செய்துவிட்டது. காரணம் வேறொன்றும் அல்ல, ஒன்று இச்செய்தி பத்திரிகைகளில் வெளிவருகின்ற போது வடக்கே கடுமையான யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

சமாதானம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் எங்குமே இன்னும் சரியாக தென்படவிலலை.

இரண்டாவது சிலருக்கு தமது பெயர் இவ்வாறு பத்திரிகையில் வந்ததும் அதிக எரிச்சல் மூட்டுவதாக இருந்தது.

காரணம் கடந்த காலத்தில் சிங்களப் பிரதேசத்தல் இனவாதத்திற்கு எதிராகவும் யுத்தத்திற்கு எதிராகவும் சமாதானத்தை உருவாக்குவதற்காகவும் பணியாற்றிய பலர் இவ்வாறான விருதுகளை எதிர்பார்த்து பணியாற்றியவர்கள் அல்லர். அவ்வாறானவர்களுக்கு நிச்சயமாக இது எரிச்சலை ஊட்டியது ஒன்றும் புதுமை இல்லை.

இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சு இதனை ஒழுங்கு செய்திருந்தது.

இவ்வாறான சமாதான விருது வழங்குவதற்கான பெயர்கள் முன்மொழியப்பட்டதும் அப்பெயர்களை பகிரங்கப்படுத்துவதற்கு முன் அவ்வமைச்சின் அதிகாரிகள் அக்குறிப்பிட்ட நபர்களை கேட்டிருக்கலாம். அவ்வாறு கேட்டிருந்தால் சிலவேளை அவ்விருதை வாங்குவதற்கு தன்னை விடத் தகுதியான சிலரின் பெயர்களை அவர்கள் சொல்லியிருப்பார்கள். அல்லது தமக்கு அவ்விருது தேவையில்லை என அவர்கள் அதனை நிராகரிக்க வாய்ப்பிருந்திருக்கும். அவர்கள் தேவையற்ற சங்கடங்களுக்குள்ளாவது தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால் இவ்வமைச்சின் அதிகாரிகள் எவ்வித பொறுப்பும் இல்லாத வகையில் இக்காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை கண்டனத்தோடு கூற வேண்டியிருக்கிறது. ஏதோ சமாதானத்துக்காக பணியாற்றுவோர்கள் எல்லாம் விருது வாங்குவதற்கு காத்துக் கிடப்பவர்கள் போலவும் அரசாங்கம் ஒரு விருதைக் கொடுத்தால் அதைக் கட்டாயம் வந்து பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்பது போலவும் கடிதங்கள் அனுப்பியிருந்ததுதான் மிகவும் வேதனைக்குரியது.




**"ஏதோ சமாதானத்துக்காக பணியாற்றுவோர்கள் எல்லாம் விருது வாங்குவதற்கு காத்துக் கிடப்பவர்கள் போலவும், அரசாங்கம் ஒரு விருதைக் கொடுத்தால் அதைக் கட்டாயம் வந்து பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்பது போலவும்..."**

சமாதானத்துக்காக உழைத்தவர்களின் பெயர்களை தேர்ந்தெடுத்த அத்தேர்வுக் குழுவில் இருந்தவர்கள் யார் யார் என்பது இன்றுவரை யாருக்கும் தெரியாது. அது யாரெனத் தெரிந்தால்தான் இந்த நாட்டில் உண்மையாக சமாதானத்துக்காக உழைத்தவர்கள் யார் என்பதைப் பற்றி அவர்களுக்கு எவ்வளவு தூரம் தெரியும் என்ற கேள்வியை நாம் கேட்க முடியும்.

இவ் வைபவத்தில் வந்து மிக படாடோபமாக ஆடையணிந்து வந்து விருது வாங்கிச் சென்ற சிலரைப் பார்க்கும் போது இத் தேர்வுக் குழு பற்றிய சந்தேகமும் எரிச்சலுமே எமக்கு ஏற்படுகிறது.

இந்நாட்டில் சிவில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை அரசாங்கம் எதிர்த்தாலும், எதிர்க்கட்சி எதிர்த்தாலும், இனவாதிகள் எதிர்த்தாலும், பயங்கரவாதிகள் எதிர்த்தாலும் எல்லாவற்றையும் துச்சமாக மதித்து சமாதானத்துக்காக தொடர்ச்சியாக துணிந்து உழைத்தவர்களையும் உழைத்துக் கொண்டிருப்பவர்களையும் இவ் வைபவம் சிறுமைப்படுத்திவிட்டதோ என்றே கூறத் தோன்றுகின்றது.

தேசிய நல்லிணக்க இன விவகார அமைச்சு இவ்விருது வழங்கும் வைபவத்தை உண்மையிலேயே வேறு விதமாகவே நடத்தியிருக்க வேண்டும். இன்று நாட்டில் நடந்து கொண்டிருக்கும் இவ் அழிவுகரமான யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இதய சுத்தியோடு செயற்படும் அரசியல்வாதிகளுக்கு (தமிழ், சிங்கள, முஸ்லிம்) விருதுகள் வழங்குவதற்காக இதை ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்திருப்பின் சில வேளை இதைவிட அதிகம் குறைந்த செலவில் இவ் வைபவத்தை முடித்திருக்கலாம். காரணம் இச்சமாதான விருதைப் பெறுவதற்கு தகுதியான அரசியல்வாதிகள் எத்தனை பேர் என்பதை நாம் விரல்விட்டு எண்ணிவிட முடியும். அவ்வாறு செய்திருப்பின் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை ஓரளவுக்கேனும் இந்நாட்டின் அரசியல்வாதிகள் உணர்வதற்கு சிலவேளை வாய்ப்பேற்பட்டிருக்கும்.

இருந்தாலும் நடந்தது நடந்து முடிந்துவிட்டது. இனிமேலாவது இவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்படும் போது சற்று அக்கறையுடனும் ஆழமாகவும் சிந்தித்து செய்படுவது சாலச் சிறந்ததல்லவா?

**- எஸ். மனோரஞ்சன்**

## தூக்கம்

**தூக்கம் உன்**
**கண்களைத் தழுவட்டுமே**
**அமைதி உன் நெஞ்சில்**
**நிலவட்டுமே**
**தூக்கம் மட்டும் இங்கே**
**இல்லையென்றால்**
**துயர்களை விலக்க**
**வழியில்லையே...**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஜக்கி சானுடன் பில்லி வொங்

# பயிற்சி எம்மை மனிதனாக்கும்

சீனக் குங்.:.பூவை கற்பதானது உண்மையை அடைவதற்கான முடிவற்ற ஒரு நீண்ட பயணம். நீங்கள் எல்லையை அடையும் போது அங்கு புதியதொரு ஆரம்பம் தொடங்கும். இப் பயிற்சி உடல் ரீதியானவை மட்டுமல்ல ஆத்ம ரீதியானவையும் கூட.

குங்.:.பூவை பயில்வதென்பதை மனிதனாக வாழப் பயில்வதென்பதாகவே நாம் நம்புகிறோம். குங்.:.பூ வெறுமனே தற்காப்புக்கானது மட்டுமல்ல. அது வாழ்வு.

இங்கு, பயிற்சி எம்மைப் பொறுத்தவரையில் உணவு போன்றது. அதன் வேதனை எமக்கு ஒழுக்கத்தைத் தருவது. ஒழுக்கம் மனிதத்தின் சாரமும் கலையின் வேருமாகும். அதனால் ஒரு சிறந்த மனிதனாவதற்கு, ஒருவன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு துன்பப்பட வேண்டும். குங்.:.பூ பயிற்சி இவ்வாறே எம்மை மனிதனாக்குகிறது. இதை அனுபவபூர்வமாக உணர்ந்த நான் இம்முறை எனது குங்.:.பூ பள்ளி அனுபவங்கள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

## பள்ளியில் முதல் நாள்

எனக்கு 7 வயதிருக்கையில் ஒரு ஞாயிறு மாலையில் எனது மாமா ஹொங்கொங் **சைனீஸ் மாஷல் ஆட்ஸ் அசோசியேஷன்** என்ற குங்.:.பூ பயிற்சி நிலையத்தின் கிளையான .:.பூஜிங் சைனீஸ் ஒப்பேராவுக்கு அழைத்துச் சென்றார். அது ஹொங்கொங்கிலும் தாய்வானிலும் பாரம்பரிய சீன தற்காப்பு கலைகளுக்குப் பேர்போன பயிற்சி நிலையம்.

நான் **யூ ஜிம் யுவான்** என்ற குங்.:.பூ பேராசானிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். அவரே அப்பயிற்சி நிலையத்தின் தலைமைப் பயிற்றுனர். பயிற்சிக்கான உடன்படிக்கை எழுதப்பட்டது. அப்போது நான் உணர்ந்திருக்கவில்லை அடுத்த ஒரு தசாப்தத்துக்கு எனது வாழ்க்கை அதுதான் என்று.


நான் அன்று முதல், என்னை அறியாமலேயே அப்பள்ளிக்கு உரித்தான ஒரு சொத்தாக ஆக்கப்பட்டுவிட்டேன். எனது ஆசிரியரிடமிருந்து நான் பெற்ற முதல் வார்த்தை "குட்லக் ஸன்".

பள்ளியில் சேர்ந்து அலுவலக வாசலால் வெளியே வந்தபோது அங்கே ஏற்கனவே காத்திருந்த மாணவர்கள் என்னைப் பார்த்து "ஜியா ஜியாங் மியென்" எனக் கத்தினர். (ஜியா ஜியாங் மியென் என்பது ஒரு வகை சீன சூப்) எனக்குப் புரியவில்லை, ஏன் என்னைப் பார்த்து சூப் எனக் கத்துகிறார்கள் என்று. நான் அருகிலிருந்த ஒரு சக மாணவனிடம், சூப் ஏதாவது தரப் போகிறார்களா என்று கேட்டேன். "பாரம்பரிய சூப் கப்பை விரைவில் பெறுவாய். நாங்கள் ஏற்கனவே பெற்றுவிட்டோம்" என்றான் அவன்.

ஆனால் அவ்வாறு ஒன்றும் எவரும் தருவதாக இல்லை. மூன்று நான்கு தினங்களாக ஏனைய மாணவர்களைப் பார்த்து குங்.:.பூ பயிற்சிகளை என் பாட்டில் செய்து கொண்டிருந்தேன். நான் தப்புத் தப்பாக செய்து கொண்டிருந்த பயிற்சிகளை பார்த்த **யுவன் வூ** என்ற சிரேஷ்ட மாணவன் கோபத்துடன் என்னிடம் வந்தான். அவன் என்னைப் பார்த்து "கேளடா முட்டாள். நீ நினைக்கலாம் இதெல்லாம் ஒரு பகிடி விளையாட்டென்று. ஆனால் எங்களுக்கு இதுதான் சாப்பாடு, தண்ணீர், கனவு, வாழ்க்கை எல்லாமே" கோபத்துடன் கத்திய அவன் சில பின்புறமான குத்துக்கரணங்களை அச்சொட்டாக செய்து காட்டினான். "இப்படித்தான் செய்வது. கவனமாகப் பார்த்துச் செய்" என்று சொல்லி தட்டிக் கொடுத்துவிட்டு போனான்.

அந்த **யுவன் வூ** வேறு யாருமல்ல. இன்று உலகப் புகழ் பெற்ற குங்.:.பூ நடிகர் **ஜக்கி சான்**தான். யுவன் வூ என்பது அவரது பள்ளிப் பெயர். குங்.:.பூ பள்ளியில் எம் எல்லோருக்கும் ஆசிரியர் ஒவ்வொரு பள்ளிப் பெயரை வழங்குவார். ஜக்கி சானின் உண்மைப் பெயர் **கொங் செங்**. எனது பள்ளிப் பெயர் **யுவன் வொங்.**

ஒரு நாள் சில குறும்புத்தனமான மாணவர்கள் குருவின் தனிப்பட்ட அறைக்குள் சென்றார்கள். அங்கு பெறுமதியான பல கருவிகளும் பொருட்களும் இருக்கும். நானும் பின்னால் உள்ளே சென்றேன். அப்போது ஆசிரியர் வருவதைக் கண்டு எல்லோரும் ஓடிவிட்டார்கள். விவரம் தெரியாத நான் மட்டும் பிடிபட்டேன். என்னை வெளியே இழுத்து வந்த குரு, கைகளை உயரத்தில் கட்டிவிட்டு பிரம்பொன்றால் உடம்பெங்கும் தழும்பு வர செம்மையாக அடித்தார். நான் துடித்தேன்.


ஜக்கி சான் உள்ளிட்ட பல குங் .:.பூ வீரர்களை உருவாக்கிய குரு **யூ ஜிம் யுவா(ன்)**னுடன் பில்லி வொங் பயிற்சியில்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரியாமல் செய்த தவறுக்கு இத்தனை கொடிய தண்டனையா என்று மனம் வெதும்பினேன். அப்போது குரு சிரேஷ்ட மாணவனான ஜக்கிசானையும் அவரது சகோதரர் பிராங்கிசானையும் எனக்கான முதலாவது பாடத்தை ஆரம்பிக்கும்படி கூறினார். (பிராங்கி சானும் இன்று பிரபலமான குங்ஃபூ நடிகர். அவரும் நானும் லொங் டேர் என்ற சினப் படத்தில் ஒன்றாக நடித்துள்ளோம்.)

அப்போதுதான் எனக்குப் புரிந்தது குரு தந்த இத் தண்டனைக்குப் பெயர்தான் மாணவர்கள் என்னைக் கேலி செய்த 'சீன சூப்' என்று.

அதாவது எனக்கான முறையான பயிற்சியின் ஆரம்ப விழா தான் இந்தக் கடுமையான பிரம்படி. முறையான பயிற்சியை ஆரம்பிப்பதற்கு குரு ஒரு தக்க தருணத்தைப் பார்த்தபடி இருப்பார். நாங்கள் முதன்முதல் விடும் தவறுக்கு வழங்கும் கடுமையான தண்டனையுடன் எமக்கான முறையான பயிற்சி ஆரம்பமாகும். அத் தண்டனையே இந்த "ஜியா ஜியாங் மியென்."- சீன சூப்!

அதற்கெல்லாம் அந் நிலையில் நின்றபடி நிதானமாக சாதாரணமாகப் பேசுவதுபோல் பதில் சொல்லியபடி இருக்க வேண்டும். - எமக்கு இது விசனம் தந்தாலும் உண்மையில் இது எமது பயிற்சிகளை, பயிற்சியாக வேறு பிரித்து எண்ணாமல் வாழ்வோடு



பள்ளி சக மாணவியான, ஜக்கி சானின் மனைவி 'லிங் ஃபுங் ஜியொவ்' வுடன் பில்லி வொங்

கருதியும் பயிற்சிகளுக்கு ஓய்வோ, தளர்வோ இல்லை. சுகயீனத்துக்கும் அங்கு பயிற்சி தான் மருந்து.

'நாள் செல்லச் செல்ல எவை எனக்குக் கடுமையாகப் பட்டனவோ அவை கைவரப்பெற்று

யோடு நின்றேன். இறுதியாக அவர் இக் குழுவின் தலைவனாக எனது பெயரை அறிவித்தார். நான் மகிழ்சியின் எல்லைக்குச் சென்றேன். என்னை நிரூபிக்கக் கிடைத்த சந்தர்ப்பம் அது. அந்த நிகழ்ச்சியை மிகத் திறம்பட நிகழ்த்தியதாக பலர் பாராட்டினாலும், குரு அதிலும் நான் விட்ட தவறுகளைக் குறித்து வைத்து தண்டனை தரத் தவறவில்லை.

10 வருடங்களின் பின் நான் பயிற்சி நிலையத்திலிருந்து விடைபெறும்போது எனது மனநிலை முற்றிலும் மாறியிருந்தது. முன்னர் பயிற்சிகளை வெறுத்த நான், இப்போது அந் நிலையத்தை விட்டுப் பிரிவதையிட்டு, தாயைப் பிரிவதுபோல் வேதனைப் பட்டேன்.

பின்னர் எனது திரைப்படத் துறையில் பிரவேசித்து **'ட்ரகன் வேர்ஸஸ் ட்ரகன்'** என்ற திரைப் படத்தில் நான் ஒரு ஆபத்தான சாகசக் காட்சியைச் செய்தேன். சில்லுப் பூட்டிய பாதணியில் உருண்டோடி வந்து மாடியிலிருந்து மாடி பாயும் அக்காட்சி வெற்றிகரமாகப் படமாக்கப்பட்டு விட்டது. ஆனால் எனது கால் முறிந்துவிட்டது.

எனக்கான முறையான பயிற்சி ஆரம்பமானது. ஜக்கியும், பிராங்கியும் எனது கால்களை இரு புறமுமாக அகல இழுத்தார்கள். நான் தாங்க முடியாத வலியில் கத்தினேன். அப்போதுதான் பயிற்சியானது எவ்வளவு கடுமை என்பதை உணர்ந்தேன்.

ஒருநாளல்ல. தினமும். எனது உடம்பு இயல்பாகச் செய்யும் வரை. ஒன்றைப் பழகிக் கொண்டால் மற்றொன்று. ஒவ்வொரு பயிற்சியும் உடலை வருத்தியெடுத்தது. அதில் விடும் தவறுகளுக்கு வேறு கடுமையான தண்டனைகள். இரக்கம், தயவு தாட்சண்யம், ஓய்வு ஒழிச்சல், ஆறுதல் என்று எதற்கும் அங்கு இடமில்லை.

கைகளில் தலைகீழாக நிற்கும் பயிற்சி ஒன்று அங்கு கட்டாயமானது. இங்கு நேரம் 20 நிமிடம் 30 நிமிடம் எனக் கூடிக் கொண்டு செல்லும். அதைக்கூட நாம் சும்மா செய்ய முடியாது. தலைகீழாக நின்றபடி எம் பாடக் குறிப்புகளைப் படிக்க வேண்டும். சிலவேளை பயிற்றுநர் எம்மிடம் கதைத்தபடி இருப்பார்.

**"குங் ஃபூவைப் பயில்வதென்பதை மனிதனாகப் பயில்வதென்பதாகவே நாம் நம்புகிறோம்"**

சேர்ந்த ஒன்றாக ஆக்கிக் கொள்வதற்கான வழிமுறை என்பதை நான் பின்னர் உணர்ந்தேன்.

ஒருமுறை எனக்கும் பிராங்கி சானுக்கும் தகராறு ஏற்பட்டது. நாமிருவரும் கடுமையாக மோதிக் கொண்டோம். அவ் வேளையில் குரு அங்கு வந்துவிட்டார். நாம் பயந்து சண்டையை நிறுத்திவிட்டு அவரைப் பார்த்தோம். ஆனால் அவரோ எம்மிருவரையும் ஒருவரை ஒருவர் வீழ்த்தும்வரை தொடர்ந்து சண்டையிடச் சொன்னார். எமக்கு ஆச்சரியம். எமது கோபம் மறைந்தது. சண்டையாலேயே சண்டையில் பயனில்லையென உணர்த்த குருவின் வழிமுறை இது.

பயிற்சி கடுமை. அதைச் செய்யத் தவறினால் தண்டனை அதைவிடக் கடுமை. சுகயீனம்

சுலபமானவையாகின. மேலும் மேலும் வித்தைகளைப் பயிலும் ஆர்வம் பொங்கியது. பிற்காலத்தில் நான் சிரேஷ்ட மாணவனாக, அஞ்சுகின்ற புதியவர்களிடம் கூறுவேன். "கவலைப்படாதீர்கள் பயிற்சி உங்களை ஒழுங்காக்கிவிடும்".

குரு ஒருநாள் பொது அரங்கொன்றில் எமது வித்தைகளைக் காட்ட அமைத்த அணிக்காக திறமையான மாணவர்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டார். ஆனால் எனது பெயரைக் குறிப்பிடவில்லை. நான் கவலை

எனினும் எனக்கு அச் சாகசத்தைப் பாராட்டி **"இன்டநேஷனல் குங் ஃபூ ஸ்டார்"** என்ற பட்டம் கிடைத்தது. இந்தப் பெருமை எனது குருவையன்றி யாரைச் சாரும்?

நான் மட்டுமல்ல, இன்று புகழின் உச்சியில் இருக்கும் ஜக்கி சானும்கூட தனது வெற்றிகளுக்கெல்லாம் எமது குரு யூ ஜிம் யுவானே காரணமென எப்போதுமே கூறி வருகிறார். எனது குருவைத் தலை வணங்கிக் கொண்டு விடைபெறுகிறேன்.

**- பில்லி வொங்**




**மூச்சை மெலிதாக இழுத்து விடுங்கள்**
**இங்கு எல்லாமே சரியாக உள்ளது**
**- ஆத்மாநாம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நெருப்பில் எரிந்த நீர்

**"நான் அழுத்தமாக நம்பும் விஷயங்களையே படமாக எடுக்கிறேன். நான் செய்ய விரும்புவதிலிருந்து ஒருபோதும் விலகி ஓடமாட்டேன். எனது படத்தில் ஒரு சிறு துண்டுக் காட்சி கூட எடுப்பதற்கு முன் இங்கே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறேன். இந்த நாட்டு தணிக்கை முறைகளுக்குட்பட்டே நான் செயற்படுகிறேன். ஏன் சாதாரண முறையில், எனது படங்கள் எடுத்து முடிக்கப்பட்ட பின் தணிக்கைக்குச் சென்றுவர அனுமதிக்கக் கூடாது?**

**இது கலாசார வன்முறையோ என்னவோ தெரியாது. ஆனால், எங்கள் காற்றும் கூட சகிப்புத் தன்மையற்றதாக இருக்கிறது."**



**- 'தண்ணீர்' பட இயக்குநர் தீபா மேத்தா**

## காசி

இந்துக்களின் புனித நகர். புனித கங்கையைச் சுமக்கும் நிலம். அதுமட்டுமில்லை. அது எதிரெதிர் எல்லைகளை இணைக்கும் சங்கம பூமியாகவும் திகழ்கிறது.

ஒருபுறம் பக்தியின் எல்லையை அங்கே காணலாமென்றால், மறுபுறம் ஏழ்மையின் எல்லைக்கும் அதுதான் நகரம்.

அங்கே அதிகூடிய வெப்பகாலமும் உண்டு. தீவிர குளிர்காலமும் உண்டு.

தீவிர ஆன்மீகப் பிரதேசமாக விளங்கும் அதே சமயம், பரபரப்பான வணிக பூமியாகவும் நெரிசலில் திணறுகிறது.

ஐம்பூதங்களினதும் பெயர்களில் தொடர்ச்சியாகப் படமெடுக்கத் திட்டமிட்டிருக்கும் சர்ச்சைக்குரிய இயக்குநர் தீபா மேத்தா, அந்த வரிசையில் மூன்றாவது படமான (Water) தண்ணீரை எடுக்கத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடம் காசி.

இவரது முன்னைய இரு படங்களும் (Earth, Fire) பரபரப்பான சர்ச்சைகளைத் தோற்றுவித்தவை. ஆனால் அவை இரண்டும் படமாக எடுத்து முடிக்கப்பட்டு வெளியான பின்பே பிரச்சினைக்குள்ளானவை. தண்ணீரோ ஒரு காட்சியைக் கூட படமாக்குவதற்கு முன்பே, அதன் திரைக் கதைப் பிரதி பற்றிய ஊகங்கள் கசிந்து, பலத்த எதிர்ப்பைத் தோற்றுவித்திருக்கிறது. படத்தை எடுக்கவே முடியாதபடியான வன்முறை மிரட்டலுக்குள்ளாகியிருக்கிறது.

எடுக்கப்படும் படங்கள் எல்லாம் தணிக்கைக் குழுவினரின் பார்வைக்குச் சென்று, அதன் பின்னரே திரையிட அனுமதிக்கப்படுகின்றன. அவர்கள் படத்தில் எதையாவது மாற்ற வேண்டும் என்று கருதினால், அதைப் பரிசீலிக்கவும் தயாராயிருக்கும் என்னை, படமே எடுப்பதற்கு முன்னால் தாக்குவது எந்த வகையில் நியாயம் என்று கேட்கிறார் மேத்தா.

அவரை ஆமோதிக்கும் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள், படத்தை எடுப்பதற்கு முன்பே படப்பிடிப்பைத் தடுக்க முயல்வது பேச்சுச் சுதந்திரத்தைத் தடை செய்வதாகும் என்று பி. ஜே. பி. ஆட்சியை எதிர்த்துக் குரலெழுப்புகின்றனர்.

'தீ' படத்தில் இந்து ஆசாரக் குடும்பத்தின் இரு பெண்கள் தங்கள் குடும்ப அமைப்பிலிருந்து வெளியேறி, இருவரும் சேர்ந்து வாழத் தீர்மானிக்கும் லெஸ்பியன் உறவை அதற்குரிய நியாயங்களோடு சொல்லியிருந்தார் மேத்தா.

பெண்ணின் விடுதலைக்கான ஒரு பரிணாமமாகப் பல பெண் அமைப்புக்களாலும், முற்போக்காளர்களாலும் வரவேற்கப்பட்டது அது.

சுரணையற்றுப் போய்க் கொண்டிருக்கும் சமூகத்திற்கு இத்தகைய அதிர்ச்சி தரும் அடிகள் தேவைதான். தனது அழுக்குகளைப் கீறிப் பிளந்து காட்டும் போது ஏற்படுகின்ற அருவருப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பினால் உண்டாகும் ஆத்திர, ஆவேசங்கள் இந்த சமூகம் தனது சுரணையைக் கிள்ளிப் பார்த்துக் கொள்ளும் தருணங் கள் என்று அவர்கள் கருதுகி றார்கள்.

தீ படத்திற்கு சனாதனத் தீவி ரவாதிகளிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பைப் போலவே, தண்ணீர் படத்திற்கும் அவசரமாகக் கிளம் பியிருக்கிறது.

"விதவைகளை விபசாரத்தில் ஈடுபடுத்தும் நகரமாக காசியை சித்திரிக்கும் தீபா மேத்தா போன்றவர்கள் வக்கிர புத்தி உடையவர்கள்'' என்று பி. ஜே. பி. பொதுச் செயலாளர் கோவி ந்தாசார்யா ஆவேசப்படுகிறார்.

"தீபா மேத்தா விதவைகள் வாழ்வைப் படம் பிடிக்க விரும் பினால் ஏன் இந்திரா அல்லது சோனியா காந்தி பற்றி ஒரு படம் எடுக்கக் கூடாது?'' என்று கேட்கிறார் வாரணாசி விஸ்வ இந்து பரிஷத் அமைப்பாளர் கலா நிதி காமேஸ்வர் உபாத்யா.

"முஸ்லீம் சமூகத்தை விமர் சனம் செய்த சல்மான் ருஷ்டி யின் *Satanic Verses* நூலை காங்கிரஸ் அரசாங்கம் தடை செய்தது ஏன்? கல்கத்தாவின் குடிசைப் பகுதிகளைப் பதிவு செய்த ரோலண்ட் ஜொ.ஃபின் *City of Joy* படத்தை கம்யூனிஸ் ட்டுகள் எதிர்த்தது ஏன்? அது போலத்தான் தண்ணீரும் இந்தி யாவை அவமானப்படுத்துவதை நாம் பொறுத்துக்கொள்ளப் போவதில்லை...'' என்று நியா யம் பேசுகிறார்கள்.

**தண்ணீர், விதவை களை விலைமாதராகக் காட்டுகிறது என்பது எதிர்ப்பாளர்களின் ஒரு குற்றச்சாட்டு. அவர்களுக்கு, படம் எந்த வகையிலும் பெண்களை இழிவுபடுத்தவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.**

**- நந்திதா தாஸ்**



இத்தனைக்கும் தண்ணீரின் கதை என்ன?

1930களில் காசியில் உள்ள விதவைகள் ஆசிரமம் ஒன்றில் வாழும் மூன்று விதவைகளைப் பற்றியது கதை. பாலப் பருவத் திலேயே விதவையாகி, தலை மொட்டையடிக்கப்பட்டு அங்கே வாழும் 7 வயதுச் சிறுமி உட் பட, 70 வயது முதிர் விதவை வரை உள்ள ஆசிரமம் அது. கண்டிப்பான விதிமுறைகளுடன் அங்கே விதவைகள் பராமரிக் கப்படுகிறார்கள். மழிக்கப்பட்ட தலை, ஒரு நேரமே உணவு, ஆசாபாசங்களை அடக்கி வைத் துக்கொள்ள கடுமையான நடை முறைகள். இந்தப் பாலைவ-னத்தினிடையே அந்த ஏழு வய துச் சிறுமியே சோலைவனமாக வளைய வருகின்றாள்.

புதிதாக மூன்று விதவைகள் ஆசிரமத்தில் சேர்க்கப்படுகிறார் கள். சகுந்தலா (சபனா ஆஸ்மி), ஜானகி (நந்திரா தாஸ்), சுய்யா ஆகியோரே அவர்கள்.

காசியில் உள்ள அந்த விதவை கள் இல்லத்தை நடத்தும் மது மதி என்பவள், இளம் விதவை-களை அந்த ஊரிலுள்ள பணக் காரர்களிடம் அனுப்பி அதில் வரும் பணத்தைக் கொண்டு அந்த இல்லத்தின் செலவு களை சரிக்கட்டுகிறாள்.

நாராயணன் என்ற இளைஞன் (அக்ஷய்குமார்) விதவைகளை விவாகம் செய்து கொள்ள இளை ஞர்கள் முன்வர வேண்டும் என்ற காந்தியின் கோரிக்கையால் ஈர்க்கப்படுகிறான். ஜானகியின் மீது காதல் கொள்கிறான்.

ஜானகியும் அவனைத் திரும ணம் செய்துகொள்ள முடிவெ டுத்து இல்லத்தை விட்டு வெளி யேறுகிறாள்.

இருவரும் திருமணம் செய்து கொள்வதற்காக வேறு ஊருக் குப் படகில் பயணம் செய்கின் றனர். பயணத்தின் போது, நாரா யணனின் தந்தை பெயரைக் கேட்கும் ஜானகி அதிர்ச்சியடை கிறாள். ஏனென்றால் அவரும் அவளை அனுபவித்த பெரிய மனிதர்களில் ஒருவர்.

மனமுடைந்த ஜானகிக்கு நாராயணனுடன் செல்ல முடியா மல் போகிறது. அவளைத் தேற் றுவதற்குப் பெரு முயற்சி செய் கிறான் நாராயணன். ஆனால் ஜானகியோ மறுபடியும் விதவை இல்லத்துக்கே திரும்பி வந்து விடுகிறாள். பின்னர் கங்கையில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்கிறாள். நாராயணன் அவ ளது சிதைக்குத் தீ வைத்து இந்து மதத்தைத் துறக்கிறான்.

இதுதான் கதை.

கனேடிய கூட்டுத் தயாரிப் பான 'தண்ணீர்' படப்பிடிப்பை காசியில் நடத்துவதற்கு இந்திய மத்திய அரசு அனுமதியளித் தது. ஜனவரி 29ம் திகதி படப்பிடிப்புக் குழுவினர் காசி சென்று தங்கினர். 7 வயது வித வைச் சிறுமியாக நடிக்கும் உர்வி முதல் 70 வயது நடிகை வரை 110 பேர் படப்பிடிப்புக் குழுவில் இருந்தனர்.

பலகைகளாலும் தகரங்களா லும் படப்பிடிப்புக்கான செட்கள் போடப்பட்டன. அந்தச் சமயத் தில் காசி அமைந்திருக்கும் மாநிலமான உத்தரப் பிரதேச மாநில அரசாங்கத்திடமிருந்து படப்பிடிப்புக்கு அனுமதி இல் லை என்ற தகவல் தெரிவிக் கப்பட்டது.

அடுத்த நாள், சுமார் 500 பேர் சன்ஸ்க்ருதி ரக்ஷ சங் கர்ஸ் சமிதி என்ற பதாகையின் கீழ் படப்பிடிப்பு நடக்கும் இடத் திற்கு வந்தனர். 'தண்ணீர்' படப் பிடிப்பு ஆரம்பித்து 5 நிமிடமே ஆகியிருந்தது.




நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானுங் கெட்டார், சிலர்
அல்லும் பகலும் தெருக் கல்லா யிருந்துவிட்டு
அதிர்ஷ்டமில்லை யென்று அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார் - உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்!

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இந்தியாவின் புனித இடங்களை அவமதிப்பதைப் பொறுத்துக்கொள்ள முடியாது" என்ற கோஷத்துடன் 'செட்'களை அடித்து நொறுக்கி எரித்துவிட்டு அந்த இந்துத் தீவிரவாதக் குழுவினர் திரும்பிச் சென்றனர்.

அந்தச் சம்பவம் குறித்து, படத்தின் இயக்குநர் தீபா மேத்தா பின்வருமாறு விளக்கமளித்தார்:

"படப்பிடிப்பை நாங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் உத்தரப் பிரதேச நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் என்னைச் சந்தித்தார். அரசாங்கத்தில் தனக்கு மிகுந்த செல்வாக்கு இருப்பதாகவும், படப்பிடிப்பை அமைதியாக நடத்தி முடிப்பதற்கு வேண்டிய பாதுகாப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறினார். அத்துடன், 'தண்ணீர்' படத்தின் முழுமையான விநியோக உரிமையைத் தனக்கே தந்துவிடும்படி கேட்டார். நான் மறுத்தேன்.

'எப்படி நீ படம் எடுக்கிறாய் என்பதைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறிவிட்டு அவர் வெளியேறினார்.

படத்தின் கனேடியத் தயாரிப்பாளரான டேவிட் ஹமில்டன் கூறினார்: "இதனால் கிடைத்திருக்கும் செய்தி என்னவென்றால், முறைப்படி அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கையெழுத்திட்டிருந்தாலும், அதன்பின் இந்தியாவில் படப்பிடிப்பை நடத்திக் கொள்ளலாம் என்பதற்கு எந்த நிச்சயமுமில்லை. அத்துடன், எப்படி வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள் இந்த நாட்டில் கூட்டுத் தயாரிப்புக்கு முன்வர முடியும்?" என்றும் அவர் கேட்டார்.

படப்பிடிப்பை நிறுத்தியதால் ஏற்பட்ட நஷ்டத்தோடு, சபனா, நந்திதா போன்றோர் இந்தப் படத்திற்காக அடித்துக்கொண்ட மொட்டையுடன், படப்பிடிப்பும் இல்லாமல் வேறெதுவும் செய்ய முடியாமல் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும் என்று புரியாத தவிப்பிலிருக்கிறார்கள்.

சபனா ஆஸ்மியின் மொட்டைக்காக முஸ்லீம் தீவிரவாத அமைப்புக்களிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. மொட்டையடித்தது மாத்திரமல்லாமல் மொட்டையடித்ததைப் படம் பிடிக்க வேறு அனுமதித்திருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள மும்பையைச் சேர்ந்த முஸ்லிம் அமைப்பு ஒன்று, ஒரு முஸ்லீமான சபனா ஆஸ்மி இஸ்லாமிய நெறிமுறைகளை மீறி விட்டார் என்று வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளது.





**இடது: EARTH படத்தில் ராகுல் கன்னா, நந்திதா தாஸ்.**
**வலது: FIRE படத்தில் சபனா ஆஸ்மி, நந்திதா தாஸ்.**
**கீழே: WATER படத்தில் சபனா ஆஸ்மி, நந்திதா தாஸ்.**



**"நாராயணா, உனக்குத் தெரியாது. இந்துக் கடவுள்களும் பிராமணர்களும் எந்தவொரு பெண்ணோடும் படுப்பதற்கு உரித்துடையவர்கள். அதற்கு அப்பெண்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!"**

**"இந்து சாஸ்திரங்களின் படி விதவைகளுக்கு இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று அவர்கள் எல்லா உலகப் பற்றுக்களையும் துறந்து வாழ்வது. அல்லது கணவனின் சிதையில் விழுந்து எரிவது!"**

அது ஒருபுறமிருக்க இந்து எதிர்ப்பாளர்கள் தங்களுக்குக் கிடைத்த திரைப்பட வசனப் பிரதியைப் பார்த்துவிட்டே எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் தீபா மேத்தாவோ அவர்கள் கதையைப் புரிந்துகொள்ளாமல் கோபப்படுகிறார்கள் என்கிறார்.

"எதிர்ப்பாளர்கள் மக்களை பிழையாக வழிநடத்துகிறார்கள். என்னுடைய ஸ்கிரிப்டின் சரியான பிரதிகள் எதையும் அவர்கள் பார்க்கவில்லை" என்று குறிப்பிடுகிறார் அவர்.

எதிர்ப்பாளர்கள், தாங்கள் பார்த்த கதைவசனப் பிரதியில் தங்களைக் கோபமுறச் செய்த பகுதிகள் என்று சிலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள்.

படத்தில், காசி விதவைகள் இல்லத்தை நடத்தும் மதுமதி என்ற கதாபாத்திரம் சொல்கிறது **"விதவைகளுக்கும் விலைமகள்களுக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை. இருவரும் அழுக்கடைந்த பொருள்கள்தான்"**

இன்னோரிடத்தில் பகவதி என்ற கதாபாத்திரம் சொல்கிறது: **"நாராயணா, உனக்குத் தெரியாது. இந்துக் கடவுள்களும் பிராமணர்களும் எந்தவொரு பெண்ணோடும் படுப்பதற்கு உரித்துடையவர்கள். அதற்கு அப்பெண்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்"**

சகுந்தலா (சபனா ஆஸ்மி) பண்டிட் மான்சராமிடம் கேட்கிறாள்: **"பண்டிட்ஜி, நீங்கள் எல்லா**



**"எதிர்ப்பவர்கள் பெரும்பாலானோர் கதையைப் புரிந்துகொள்ளாமல்தான் எதிர்க்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் என்ன புரிந்துகொண்டு எதிர்க்கிறார்கள் என்பதை வெளிப்படையாகப் பேச வேண்டும். அப்போதுதான் எதிர்ப்பிலுள்ள அர்த்தமின்மை அவர்களுக்கே தெரியவரும்."**

**- சபனா ஆஸ்மி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஹிந்து சாஸ்திரங்களையும் படித்திருக்கிறீர்களா? அவை விதவைகளை இப்படிக் கொடூரமாக நடத்தும்படிதான் போதிக்கின்றனவா?"**

மான்சராம் பதிலளிக்கிறார்:

**"இந்து சாஸ்திரங்களின்படி விதவைகளுக்கு இரண்டு வழிகள் தான் இருக்கின்றன. ஒன்று அவர்கள் எல்லா உலகப் பற்றுக்களையும் துறந்து வாழ்வது. அல்லது கணவனின் சிதையில் விழுந்து எரிவது"**

காசியைப் பற்றிப் பேசப்படும் ஒரு காட்சியில்:

**"மிகப் பெரிய தொற்றுநோயான கொலரா, போலிச் சாமியார்கள், அரைவாசி எரிந்த நிலையில் மிதக்கும் பிணங்களைக் கொண்ட கங்கை நதி... இவைதான் காசியின் சிறப்புக்கள்..."** என்பதாக வருகிறது.

இவைதான் எதிர்ப்பாளர்களை கோபப்படுத்தியிருக்கும் வசனங்கள். இது பரவலாக எதிர்ப்புக்கு ஆட்சேர்ப்பவர்கள் கையாளும் முறைதான் என்கிறார் தீபா மேத்தா. முழுமையான திரைக்கதை என்ன சொல்கிறது என்பதைப் பற்றி அக்கறைப்படாமல் ஆங்காங்கே தேவையான சில வரிகளை உருவியெடுத்து அதையே பூதாகரமாய் காட்டி மக்களை உணர்ச்சிவசப்பட வைக்கும் இந்த அரசியல் எனக்கு அயர்வூட்டுகிறது என்கிறார் அவர்.

"சத்யஜித்ரே ஏழ்மையைப் படமெடுத்து மேற்கில் வியாபாரம் செய்தார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுப் போலவே, நான் இந்தியாவின் துயரங்களை மேற்கத்தையப் பார்வையாளர்களுக்கு விற்பனை செய்வதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. காசியில் ஒருவர் கேட்டார்:

**'விதவைகளின் துயரை வெளிநாடுகளில் விற்பதற்குப் பதிலாக ஏன் நீங்கள் பனாரஸ் சேலைகளைப் பற்றி ஒரு படம் எடுக்கக் கூடாது?"**

ஆனால், எதிர்ப்புகளால் சோர்ந்து போய்விடுகிறவராக இல்லை இந்த கனடா நாட்டின் குடிமகளான இந்தியப் பெண். மார்க்சிஸ்ட் கட்சி ஆட்சியிலிருக்கும் மேற்கு வங்காளத்தில் படப்பிடிப்பைத் தொடரும் நம்பிக்கையிலிருக்கிறார்.

தேவயானி என்னும் 16 வயது மகளுடன், கணவனைப் பிரிந்து வாழும் தீபா மேத்தா சொல்வது இதுதான்:

"நான் இங்கு பேர் வாங்கும் ஒரு போட்டியில் ஈடுபட்டிருக்கவில்லை. என்னுடைய படத்தை எடுக்கவே நான் உள்ளேன்"



**"எனது கதாபாத்திரங்களோடும் கதையோடும் பார்வையாளர்கள் ஒன்றிவிட்டார்கள் என்றால், அது அவர்களுக்குக் கிளர்ச்சியூட்டும் அனுபவமாக அமையும். உண்மையில், பார்த்த பிறகு கோபத்தைத் தூண்டிவிடும் படம் மூலமும் பார்வையாளர்களுக்கு என்டர்டெய்ன்மென்ட் தர முடியும்."**

**- தீபா மேத்தா**



"இப்போதைக்கு எனக்கு வில்லன் பிரசாந்த் தான்..." என்று அஜித் அலுத்துக் கொள்வதில் நியாயமிருக்கிறது. பிரசாந்த் - ஷாலினி ஜோடியாக நடிக்கும் 'பிரியாத வரம் வேண்டும்' படப்பிடிப்பு இப்போதைக்கு முடிவடையாது போலத் தெரிகிறது. பிரசாந்த் 'அப்பு' மற்றும் 'பார்த்தேன் ரசித்தேன்' படங்களில் பிஸியாக இருக்கிறார். ஒப்புக்கொண்ட படத்தை முடித்து விட்டுத் தான் கல்யாணம் என்றிருக்கும் ஷாலினிக்கு இதனால் சோதனைதான். கல்யாணம் முடிந்த பிறகு நடிப்பதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார். கல்யாணம் நடக்கிறதோ இல்லையோ மே மாதத்தில் ஹனிமூனுக்காக இருவரும் அமெரிக்கா செல்வது நிச்சயம் என்கிறார்கள் இருவரும். அது ஒருபுறமிருக்க, 'அலைபாயுதே' படத்தைப் பார்த்துவிட்டு "அடுத்த வருஷம் உனக்கு நேஷனல் அவார்டு நிச்சயம்" என்று பாரதிராஜா சொன்னதைக் கேட்டு, உச்ச மகிழ்ச்சியில் இருக்கிறார் ஷாலினி.

மறுபக்கம், 'அலைபாயுதே' படம் நன்றாகப் போகிறதென்றாலும் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாதவராக இருக்கிறார் அறிமுக ஹீரோ மாதவன். பல தயாரிப்பாளர்கள் அவரைத் தேடி வருகிறார்கள். ஆனால், இன்னும் மணிரத்னத்திடம் இருந்து அனுமதி கிடைக்கவில்லை. தான் சொல்லும்வரை வேறு படமெதுவும் ஒப்புக் கொள்ளக் கூடாது என்று ஆரம்பத்திலேயே கட்டளை போட்டு விட்டாராம் டைரக்டர்.



கமல் தன் இலட்சியத்துக்குத் தகுந்த ஒரு படம் நடித்தால் அடுத்தொரு படம் மசாலாவாக நடிப்பார் என்பது கோடம்பாக்கம் அறிந்த செய்தி. மன ரீதியாகவும் பண ரீதியாகவும் இதுதான் அவரது ரிலாக்ஸ் முறை. (ரஜினி அமெரிக்கா போய்விடுவதைப் போல) 'ஹே ராம்' க்குப் பிறகு பழையபடி கே.எஸ். ரவிக்குமாரிடம் வந்திருக்கிறார். இருவரும் இணைவது 'தெனாலி' படத்திற்காக. படத்தில் கமல், ஜெயராம் ஆகியோரோடு மூன்றாவது ஹீரோவாக ஒரு எலி நடிக்கிறது. 'அவ்வை சண்முகி' போல இதுவும் ஆங்கிலப் படத் தழுவல்தான். படம் 'மவுஸ் ஹண்ட்'. இப்போதெல்லாம் தன் படங்களில் முத்தக் காட்சியொன்றைக் கட்டாயமாக்கி வரும் கமல், இந்தப் படத்தில் எலிக்கு முத்தம் கொடுப்பாரா என்று கேட்கிறது தமிழகப் பத்திரிகையொன்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இந்தியாவை உலுக்கிய இளைஞன்

தொடர்பு ஊடகத்தின் சக்தி எத்தனை பிரமாண்டமானது என்பதை உணர்த்த சமீபத்திலும் ஒரு நிருபணம் நிகழ்ந்திருக்கிறது. இன்றைய கலைகளின் ராட்சஸ வசீகரமான சினிமாவுக்குத்தான் நட்சத்திரங்களை உருவாக்கும் சக்தி உண்டென்பதை அறிவோம். அதை ஊதிப் பெருப்பிக்கும் வல்லமையைப் பத்திரிகைகள் கொண்டிருக்கின்றன.


அதுவரை யாராலும் அறியப்படாத ஒரு நபர், ஒருநாள் அதிகாலை எழுந்திருக்கும் போது அந்நாட்டின் முடிசூடா மன்னனாகி விடுகிறார் என்றால் அது இன்றைய தொடர்பு ஊடகங்களின் ராட்சஸ வல்லமையைப் பறைசாற்றுவதுதான்,

இப்போது பத்திரிகைகள் உச்சாணிக் கொம்பில் ஏற்றி வைத்திருப்பது இடுப்புச் சிறுத்த, புஜங்கள் அகன்று விரிந்த, தசைத் திரட்சிகள் மிகுந்த ஒரு பச்சை விழி இளைஞனை! "வந்தாச்சு இளம் யுவதிகளின் ராஜகுமாரன்" என்று அலற ஆரம்பித்திருக்கின்றன எல்லாப் பத்திரிகைகளும்.

ஹ்ரிதிக் ரோஷன்... இதுதான் அந்த இளம் ஹீரோவின் பெயர். 'இதய ஒளி' என்பது பெயரின் அர்த்தம். அவர் நடித்து வெளிவந்திருக்கும் ஒரே படம் 'கஹோ நா ப்யார் ஹை'. இதன் அர்த்தம் 'என்மேல் காதல் இருக்கென்று சொல்ல மாட்டாயா?'.

இந்த இளம் ஹீரோவின் பிம்பத்தை ஊதிப் பெரிதாக்குவதில் பத்திரிகைகள் போட்டாபோட்டி போட்டுக்கொண்டு செய்யும் கூத்துக்கள் மிகச் சுவாரஷ்யமானவை.

இவரைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்து இதுவரை 35,000 பெண்கள் விண்ணப்பம் அனுப்பியிருப்பதாக ஒரு பத்திரிகை எழுதுகிறது.



திரையில் அவரைப் பார்த்ததுமே இளம் பெண்கள் சாமியாடுவதாகவும், ஆடைகளைக் கூட கழற்றி வீசுவதாகவும் மற்றொரு பத்திரிகை எழுதுகிறது.

ரோஷன் திரையில் பிச்சு வாங்குகிற போது தியேட்டரில் அடுத்தடுத்த ஸீட்டில் அமர்ந்திருக்கிற அம்மாவும் மகளுமே ஒருசேர எழுந்து வீறிட்டு விட்டு, வெட்கத்தோடு திரும்ப உட்காருவதைப் பார்த்ததாக இன்னொரு பத்திரிகை எழுதுகிறது.

படம் ரிலீஸான அடுத்தடுத்த நாளில் இவர் தன் பங்களா வாசலில் நண்பரோடு பேசிக் கொண்டிருந்தாராம். படுவேகமாகக் கடந்து போன காரில் சில பெண்கள். 'ப்ரீச்'சென்று பிரேக் போட்ட கார், பின்னால் சீறி வந்ததாம். காரின் கண்ணாடியை இறக்கிப் பார்த்த பெண்கள், 'கடவுளே.. அது.. அது.. ஹ்ரிதிக்தானே?! என்று இதயம் திடுதிடுக்க இவரையே வெறித்துப் பார்த்தனராம். இவர் பதிலுக்கு சிரித்துக் கையாட்ட, சந்தோஷத்தில் தன்னை மறந்து பிரேக்கென எண்ணி ஆக்ஸிலேட்டரைப் பெண் மிதிக்க... குலுங்கிப் பாய்ந்த கார் மரத்தில் மோதியதாம். அந்தப் பெண்கள் அந்த ஆக்ஸிடெண்டில் தப்பிவிட்டாலும், ஹ்ரித்திக்கை வெகுகிட்டத்தில் பார்க்க நேர்ந்த இன்பச் சித்திரவதையில் மனமுடைந்துபோய்க் கிடக்கிறார்கள் என்றும் பத்திரிகையொன்று எழுதுகிறது.

ஹ்ரிதிக்கிற்கு வசனமே வேண்டாம். வெறும் கண்களே போதும். அவை கவிதை பாடுகின்றன. மார்க்கெட்டில் இருக்கும் எல்லா ஹீரோக்களும் அவுட். ஒரு காலத்தில் அமிதாப் பச்சன் பெற்றிருந்த செல்வாக்கெல்லாம் இவருடையதோட ஒப்பிட்டால் வெறும் தூசுதான் என்று பெண்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டே சொல்வதாக வேறொரு பத்திரிகை.

ஷாருக்கானின் ஜாலியான டான்ஸ், சல்மான்கானின் ஸ்டைல், சஞ்சய்தத்தின் உடல்கட்டு இன்னும் சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாயல், கோதுமை நிறம், பச்சைக் கண்கள், அட்டகாசமான சிரிப்பு... இவர் நிச்சயம் ஹொலிவூட்டிலும் கலக்கப் போகிறார் என்று சில பத்திரிகைகள்...

இவர் நடித்த 'கஹோ நா ப்யார் ஹை', அதேசமயத்தில் ரிலீஸான அமீர்கான் மற்றும் ஷாருக்கான் படங்களையெல்லாம் ஓவர்டேக் செய்து கொண்டு பிய்த்து வாங்குகிறது.

படத்தின் நாயகி அமிஷா பட்டேல் கோடீஸ்வர குடும்பத்தைச் சேர்ந்தவர். அமெரிக்க பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர். வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காததால் நடிக்க வந்ததாகச் சொல்கிறார்.

பிரசாந்த் நடிக்கும் ராஜ்கபூரின் 'என்ன விலை அழகே' கதாநாயகியாக ஒப்பந்தமாகியிருப்பவர் இந்த அமிஷா பட்டேல்தான். ●



ஹ்ரித்திக், அமிஷா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோயற்ற

# ஆண்மைக் குறைபாடு – ௨

டொக்டர் .எம்.கே. முருகானந்தன்



### வகைகள்

ஆண்குறிக்கு இரத்தத்தை வழங்கும் குழாய், இச்செயற்பாட்டுக்குப் போதுமான அளவு குருதியை வழங்காவிடத்து, ஆண்குறியின் விறைப்புத் தன்மை பாதிக்கப்படும்.

அநேகமாக வயதானவர்களதும், நீரிழிவு நோயாளர்களதும், இரத்தக் கொதிப்பு உள்ளவர்களதும் ஆண்குறிப் பகுதிகளில் ஏற்படும் உட்காயங்களாலும், இரத்தக் குழாய் சுருக்கமடைந்து இக்குறைபாடு ஏற்படுகின்றது. விபத்துக்களால் ஏற்படும் காயங்களாலான இவ்வித குறைபாடு சிறு வயதினரிடையே அநேகமாக காணப்படுகிறது. இவ்விபத்துக்கள் எதிர்பாராததாக அமைந்து, இடுப்பு எலும்புக்கட்டு அல்லது பொதுவான எலும்புகளில் வெடிப்பு ஏற்பட்டு இக்குறைபாடு ஏற்பட காரணியாகின்றது. சைக்கிள் ஓடும் மனிதர்களிடையே ஆண்குறிப் பகுதிகளில் தொடர்ந்து ஏற்படும் உராய்வு, இரத்தக் குழாயில் ஒருவித பதார்த்தத்தை (Thrombus) ஏற்படுத்தி, அதுவே தொடர்ந்து அதிகரித்து, முழுமையாக இரத்த ஓட்டத்தை தடைப்படுத்துகின்றது.

உயர் கல்லூரி மாணவன் ஒருவனுக்கு ஏற்பட்ட விபத்தொன்றால் அடிவயிற்றில் ஏற்பட்ட உராய்வினால் நீர்ப்பையிலிருந்து சிறுநீரை அகற்றும் குழாயில் வெடிப்பேற்பட்டு, அவன் சுமார் ஒரு மாதம் வைத்தியசாலையில் இருக்க வேண்டியதாயிற்று. இவ்விபத்தின் முன்னர் அவன் தன் பெண் சிநேகிதியுடன் குறையற்ற பாலியல் உறவை நடத்திக் கொண்டிருந்தான். விபத்தின் பின்னர் அவனது ஆண்மையில் குறைபாடு இருப்பதை அறிந்து, வைத்தியர்களிடம் செல்ல அது சாதாரண மனோவியல் ரீதியான குறைபாடு. நாளடைவில் சுகமாகும் என்று வைத்தியர்கள் கூறி அனுப்பினர்.

ஒரு வருடமாகியும் அவனது குறைபாடு நீங்காமையினால், தனது பெண் சிநேகிதியை மணமுடித்து அவள் வாழ்வு வீணாவதை விரும்பாமல் திருமணத்தை இரத்துச் செய்தான். ஆண்மைக் குறைபாடுகளை நிவர்த்தியாக்கும் வைத்தியர் ஒருவரைப் பற்றி பின்னொரு நாள் கேள்விப்பட்ட மேற்படி நபர், அவ்வைத்தியரை அணுகி பரிசோதித்த வேளை, ஆண்குறிக்கான குருதிக் குழாயின் இரத்தோட்டம் தடையாயிருப்பது அறியப்பட்டது. ஏழு வருடங்களின் முன்னர் மைக்ரோ சேர்ஜரி மாற்றுச் சிகிச்சை மூலம் இவர் சுகமடைந்துள்ளார்.

இவ்விதமான காரணிகளால் ஏற்படும் ஆண்மைக் குறைபாடு மிக பொதுவானது. ஆயினும் பெரும்பாலும் கவனமின்மையால் இது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாகிறது. இவ்வாறான நோயாளிகள் பெரும்பாலும் சிறுநீர் சிகிச்சை நிலையங்களிலேயே தஞ்சமடைகிறார்கள். இவ்வித ஆண்மைக் குறைபாடு, கண்ணுக்குப் புலனாகும் காயங்கள் ஆறி நீண்ட நாட்களுக்குப் பின்னரே கண்டறியப்படுகிறது. அதிலும் வைத்தியர்களைவிட இவ்வித நோயை நோயாளிகளேதான் முதலில் கண்டறிகிறார்கள்.

### நாளம் சார்ந்த காரணி

ஆண்குறிக்கான நரம்பில் இரத்தக் கசிவேற்படுவதாலும் வேகமான விறைப்பு ஆண்குறியில் ஏற்படாது. சாதாரணமாக ஆண்களின் குறியில் விறைப்பேற்படும் போது, நரம்புகள் மொத்தமாக இளைப்பாறி, அதனால் ஆண்குறியில் இரத்தக் கசிவு ஏற்படுவதில்லை. இவ்வித செயற்பாடு, இரத்தம் ஆண்குறியுள் சேர்ந்து வேகமான விறைப்பையும், அழுத்தத்தையும் ஏற்படுத்துகிறது.

இந்த நாளம் சார்ந்த விறைப்பின்மை காரணியும் அநேகமாக கூடுதலாக காணப்படும் குறைபாடாகும். 30 - 40 வீதமான ஆண்மைக் குறைபாட்டை இந்நாளம் சார்ந்த காரணி ஏற்படுத்துகிறது. சிலருக்கு பிறப்பினின்றும் இக் குறைபாடு இருக்கும். இவர்கள் வாழ்நாள் முழுவதும் வேகமான விறைப்பை பெறாதவர்களாகவே இருப்பார்கள்.
மற்றவர்களுக்குத் தொடர்ந்து குறைபாடற்ற பாலியல் வாழ்வின் பின் திடீரென ஒருசமயம் இது தோன்றுவதுண்டு.

### நரம்பு சார்ந்த காரணி

ஆண்குறிக்கான நரம்புத் தொகுதி மிக நுண்மையானதும் சிக்கல் நிறைந்ததுமாகும். சரியான வியாபிப்பும், தொழிற்பாடும் ஆண்குறியின் விறைப்பு உந்துதலுக்கும், தொடர்ச்சியான விறைப்புக்கும் அவசியமானது. இந்நரம்புத் தொகுதியே ஆண்குறிக்கான இரத்தக் குழாய் போன்றவற்றின் குருதி ஓட்டம், அளவு, அழுத்தம் போன்றவற்றை நிர்ணயிக்கிறது.

ஏராளமான விடயங்கள் இந்நரம்புத் தொகுதியின் செயற்பாட்டை பாதிக்கச் செய்யலாம். உடலில் பின்புறத்தில் ஏற்படும் காயங்கள், முக்கியமாக முதுகெலும்பு அல்லது தண்டுவிடம் போன்றவற்றில் ஏற்படும் காயங்கள் இக்காரணியை ஊக்குவிக்கும். அடிவயிற்றெலும்பு, எலும்புக்கட்டுக்களில் ஏற்படும் நோயாலும் இது ஏற்பட்டு நரம்புத் தொகுதியைப் பாதிக்கச் செய்யலாம்.

வேறு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் பல வகையான சத்திர சிகிச்சைகளும் இக்குறைபாட்டிற்குக் காரணியாகலாம். சிறுநீர்ப்பை, மலக்குடல் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சையும் இதில் அடங்கும்.

நிரிழிவு நோயும் இக்காரணியை ஊக்குவிப்பதாகும். இந்நோயாளர்களிடையே ஆண்மைக் குறைபாடு அதிகரித்தே காணப்படும். 50 வீதமான நீரிழிவு நோயாளர்களுக்கு இக்குறைபாடு இருக்கும். இவர்களுக்கு இதற்கான சிகிச்சை மிகவும் சிக்கலானதொன்றாகும். இரத்தத்தில் இனிப்பின் அளவைக் கட்டுப்படுத்துவதே ஒரே வழிமுறை.
எனினும் புதிய ஆண்மைக்குறைபாட்டு சிகிச்சைக்கான கண்டுபிடிப்புக்கள், இந்நோயாளர்களுக்குப் புதிய சிகிச்சை முறைகளை வழங்குகிறது. ஆனால் அநேகமான நீரிழிவு நோயாளர்களுக்கு இவ்விடயம் தெரியாதது ஒரு பெரும் குறையாகும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிவாவின் சிறுகதைகள்
*(சிறுகதைத் தொகுதி)*

நூலாசிரியர்: வண்ணை. சே. சிவராஜா
வெளியீடு: யாழ் இலக்கிய வட்டம்
விலை: ரூபா 125 பக்கம்: 121



ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்தே சிறுகதை, கட்டுரை, கவிதைகளை எழுதி பல்வேறு சிறுகதைப் போட்டிகளில் பரிசுகளும் பெற்ற மூத்த எழுத்தாளர் வண்ணை சிவராஜா. 'சிவாவின் சிறுகதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி யாழ் இலக்கிய வட்டத்தின் வெளியீடாக வந்துள்ளது.

1960களில் சிறுகதைத் துறையில் கால்பதித்த சிவராஜா சிவகவி, முக்கண்ணன், ஊடாடி, வண்ணை வராஜன், என்ற புனைபெயர்களைக் கொண்டவர். 40க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதி வெளியிட்டுள்ள சிவராஜாவின் சிறுகதைகள் எல்லாக் காலகட்டத்திற்கும் அமைவானவை. இச் சிறுகதைத் தொகுதியில் அவரது 16 கதைகள் இடம் பெறுகின்றன.

இந் நூலில், யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற நேர்ந்துவிட்ட துர்பாக்கிய அவலத்தினை மனதில் தைக்கும் விதமாக "இன்ஷா அல்லாஹ்" என்ற சிறுகதையும், யாழ் மண்ணில் முஸ்லிம்களும் தமிழர்களும் எவ்வளவு அந்நியோன்னியமாக வாழ்ந்தார்கள் என்பதை நெஞ்சை நெருடும் வண்ணம் சித்தரிக்கும் விதத்தில் "துவா" என்ற சிறுகதையும் அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார் இந் நூலுக்கான முன்னுரையை எழுதியிருக்கும் பிரபல எழுத்தாளரான செங்கை ஆழியான்.

இவரது சிறுகதைகளில் சமூகத்துவம், இனத்துவம் முதலிய கருத்து நிலைகளைக் காண முடிகிறதுதெனவும் இன மத ஐக்கியத்தினை வலியுறுத்தும் பண்பும், மானிட நேயத்தினை மேம்படுத்தும் அவாவும், இந்தப் பிரதேசம் அனைவருக்கும் சொந்தமானதென்ற கருத்தும் தொக்கி நிற்கின்ற சிறப்பைச் சுட்டிக்காட்டாது விட முடியாதெனப் பாராட்டியுள்ளார் அவர்.

தமிழ்மக்கள் மீதான இன ஒடுக்குமுறைகளையும் யுத்தக் கெடுபிடிகளையும் இன்னல்களையும் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் கிளம்பிய போராட்டங்களையும் தமது கதைப் பொருள்களாகக் கையாள முன்வந்த பல தமிழ் எழுத்தாளர்களிடம் ஏனோ முஸ்லீம் மக்களுக்கு எமது போராளிகளால் இழைக்கப்பட்ட அநீதியையிட்டு கண்டு கொள்ளாத மனப்பான்மை ஒன்று களவுணர்வாக நிலவுகிறது. இது இவ்வாறான எழுத்தாளர்களின் இதயசுத்தியைச் சந்தேகிக்க வைக்கிறது.

ஆனால் அவ்வாறல்லாமல் தனது மனோதர்மத்துக்கேற்ப முஸ்லீம் மக்களுக்கு நிகழ்ந்த துயரத்தைத் தனது எழுத்துருவில் வெளிப்படுத்த முன்வந்துள்ள மூத்த எழுத்தாளர் சிவராஜாவின் நேர்மை மெச்சத்தக்கது மட்டுமன்றி அது ஒரு எதிர்நீச்சலும் கூட.

சமூகத்தின் உணர்வு நிலையை முகர்ந்து அதற்கேற்பப் படைக்கப்படும் இலக்கியங்கள் வெறும் பாராட்டையே இலக்காகக் கொண்டிருக்கும். ஆனால் சமூகத்தை உணர வைக்கும் பாங்கில் எழுதப்படும் இலக்கியங்கள் இதிலிருந்து வித்தியாசப்பட்டவையாக இருக்கும். பலசமயங்களில் அவற்றுக்கு வரவேற்புக் கிடைக்காமலும் போகலாம். சிலவேளை நிராகரிக்கப்படவும் கூடும். இந் நிலையிலும் தான் கண்ட நியாய அநியாயங்களை எடுத்துரைக்கத் துணிந்தவன்தான் ஒரு நேர்மையான எழுத்தாளன்.

தான் சமூகத்துக்கு முன்வைக்கும் செய்தியை நேர்மையுடன் வைத்திருக்கிறார் சிவராஜா.

## மெல்லத் தமிழினி...!
(சிறுகதைத் தொகுதி)

நூலாசிரியர்: புலோலியூர் செ. கந்தசாமி
வெளியீடு: மீரா வெளியீட்டகம்
விலை: ரூபா 125 பக்கம்: 96




அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து சிறுகதைகள் எழுதிவரும் புலோலியூர் கந்தசாமி அவர்களின் 10 சிறுகதைகளை 'மெல்லத் தமிழினி...!' என்ற சிறுகதைத் தொகுதியாக வெளியிட்டுள்ளனர் மீரா வெளியீட்டகத்தினர்.

இதுவே நூலாசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதியும் ஆகும்.

பழைய எழுத்தாளர்கள் பலரது ஆக்கங்கள் மறைந்து போகாது இவ்வாறு நீண்ட காலத்திற்குப் பிறகாவது நூலுருப் பெறுவது சிறப்பானதே.

கடந்த மூன்று தசாப்தங்களாக ஒரு பிராந்தியத்தில் நடைபெற்ற சமூக மாறுதல்களை இவரது படைப்புகள் அற்புதமாகச் சித்திரித்திருக்கின்றனவென இதற்கான முன்னுரையில் குறிப்பிடுகிறார் எழுத்தாளர் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்.

## மௌனத்துயில்
*(கவிதைத் தொகுதி)*

நூலாசிரியர்: கு. றஜீபன்
விலை: ரூபா 100 பக்கம்: 106



யாழ்ப்பாணத்தில் ஏழாலையைச் சேர்ந்த இளங்கவிஞர் கு. றஜீபன், தனது கவிதைகளை 'மௌனத்துயில்' என்ற கவிதைத் தொகுதியாக வெளியிட்டுள்ளார். இக் கவிதைகளில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் போர் அனர்த்தங்களின் பிரதிபலிப்புகள் வெளிப்படுகின்றன.

இளம் எழுத்தாளர்களிடம் முளைவிடும் இலக்கிய ஆர்வத்துக்கு ஊக்கம் கொடுத்து செம்மைப்பட உதவுவது மூத்த கலையிலக்கியவாதிகளதும் விமர்சகர்களதும் கடமை.

றஜீபனின் படைப்புகளும் அவ்வாறே ஒரு ஆதரவை எதிர்பார்த்து இருக்கின்றன.

## பொது அறிவு
*(சகல போட்டிப் பரீட்சைக்குமான வழிகாட்டி)*

நூலாசிரியர்: ஏ.எல்.எம். பஷீர்
வெளியீடு: பல்கலை கலவி நிலையம்
விலை: ரூபா 235 பக்கம்: 231




தனது முன்னைய போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்களைப் புதுப்பித்து 2000ம் ஆண்டுக்கு உரிய விடயதானங்களுடன் 'பொது அறிவு' என்ற நூலாக வெளியிட்டுள்ளார் கல்முனை பஷீர்.

இன்று உலகில் மிக வேகமாக வளர்ந்து செல்லும் அறிவியல் விடயதானங்கள் தமிழில் நூல்களாக வெளிவருவதில் மிகுந்த தாமதம் காணப்படுகிறது. இதனால் நாம் சமகால அறிவியல் வளர்ச்சியில் பின்தங்கிவிடும் அபாயம் உள்ளது.

இந் நிலையில் பரீட்சைக்கான வழிகாட்டியென்ற உருவிலாவது அறிவியல் தகவல்களை நூலுருவாக்கியுள்ள பஷீரின் பங்களிப்பு வரவேற்கத் தக்கது.

கல்முனை பஷீர் இதைவிட பொது உளச் சார்பு, நுண்ணறிவு போன்ற பாடநூல்களை மட்டுமன்றி கவிதை, சிறுகதை நூல்களையும் வெளிக்கொணர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நூலாய்வு: மாணிக்கவாசகன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து

**பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்**

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

**4 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

### பெறும் நன்மைகள்:

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| **காலம்** | **4 வருடங்கள்** | **5 வருடங்கள்** |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
*உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி*

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

